KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 11 September 2026 இதழ்:- 25

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இலங்கையில் போர் முடிந்து 17 ஆண்டுகள்:- நீதி இன்னும் எட்டாக்கனி - ஐ.நா. கவலை!



இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து பதினேழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் வோல்கர் டர்க் வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கை, இலங்கையின் தற்போதைய மனித உரிமைச் சூழல் குறித்த நிலவரத்தை விவரிக்கிறது. அந்த அறிக்கையில் ஆணையாளர் வோல்கர்டர்க் கூறியுள்ளதாவது, கடந்த கால உரிமை மீறல்களுக்கு நீதி வழங்குவதாக உறுதியளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம், 2024 செப்டம்பரில் பதவியேற்றது. இருப்பினும், உயர் ஆணையரின் செப்டம்பர் 3ஆம் திகதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2009-இல் முடிவுக்கு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது அனைத்துத் தரப்பினராலும் (5ம் பக்கம் பார்க்க)

## தணியாத வேதனையும் நிறைவேறாத நீதியும்!

# இது ஒருவரை வீழ்த்தும் அரசியல் அல்ல! ஒரு நாட்டை புனிதமாகக் கட்டியெழுப்பும் அரசியல்!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இன்று ஒரு புதிய அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சிகள் மாறியிருக்கின்றன. ஆட்சியாளர்கள் மாறியிருக்கின்றனர். ஆனால் பல தசாப்தங்களாக நாட்டில் ஊடுருவியிருந்த ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், அரசியல் செல்வாக்கு, சட்டத்திற்கு மேலானவர்கள் என்ற மனநிலை மட்டும் அவ்வளவு எளிதில் மாறவில்லை. அந்தச் சூழலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னாள் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்கு(13ம் பக்கம் பார்க்க)



## ஞானசார தேரருக்கு மைத்திரியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு செல்லுபடியாகாது உயர்நீதி மன்றம் தீர்ப்பு!



THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX ACE EXPERIENCE THE DIFFERENCE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED

We are ace

## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

## Piravien Siva
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




REALTOR MLS MULTIPLE LISTING SERVICE


23 Years Real Estate Experience


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada


**Bus: 416-293-4500**


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Adelaide Ave E / Simcoe St

**Oshawa** **$699,000**
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


### Kingston Rd & Sheppard Ave E

**Scarborough** **$710,000**
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area

### Islington Ave / Steeles Ave W

**Toronto** **$749,000**
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

### Neilson Road & Sheppard

**Scarborough** **$839,000**
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

### Danforth and Dawes

**Toronto** **$839,999**
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

### Williamson & Westney

**Ajax** **$849,000**
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

### Rogers and Dufferin St

**Toronto** **$849,999**
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom

### Markham Rd & Lawrence Ave


**Scarborough** **$999,000**
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow


### Harmony Road / Conlin Road

**Oshawa** **$999,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

### Cameo St / Burkolder Dr


**Pickering** **$999,900**
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

### Hwy10 / Hwy 89

**Shelburne** **$999,900**
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

### Markham/Steeles

**Markham** **$999,999**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** **$2,700**
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** **$2,250**
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** **$1,500**
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison
FOR LEASE

**Markham** **$1,450**
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# ஞானசார தேரருக்கு மைத்திரியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு செல்லுபடியாகாது - உயர்நீதிமன்றம் தீர்ப்பு!



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப் பட்ட ஜனாதிபதி பொதுமன்னிப்பு தன்னிச்சையானது மற்றும் சட்டப்படி செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் 10 செப் 2026 வியாழக்கிழமை தீர்ப்பளித் துள்ளது. நீதியரசர் ஜனக் டி சில்வா தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கி யுள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் காணாமல ்போன ஊடகவியலா ளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி யான சந்தியா எக்னெலிகொட ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை பரிசீலித்தே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கி யுள்ளது.

ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன வழக்கு விசாரணை க்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட குற்றத்திற்காக ஞான சார தேரருக்கு 06 ஆண்டுகள் கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு மேல்முறையீட்டு நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் இத் தண்டனையை உறுதி செய்திருந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி வெலிக்கடைச் சிறையிலிருந்து விடுவித்தார்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சார்பாக ஜனாதிபதி சட்டதரணி விரான் குரே, லுவி கணேஷதாசன் ஆகியோரும், சந்தியா எக்னெலிகொட சார்பாக சட்டத் தரணி அஸ்திக தேவேந்திரா மற்றும் புலஸ்தி ஹேவமான்ன ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர்.

ஞானசார தேரர் சார்பாக திஷ்ய வேர கொடவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பாக ஜனாதி பதி சட்டதரணி பைசர் முஸ்தபா ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகார மானது தன்னிச்சையாகப் பயன்படுத்தப் பட முடியாது என்பதையும், அது சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டது என்பதையும் இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

# ராஜபக்ஷ குடும்ப அரசியலுக்கு இனி மக்கள் இடமளிக்க மாட்டார்கள் -பிமல்

இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு இனிவரும் காலங்களில் மீண்டும் அரசியல் செய்வதற்கான எந்தவொரு வாய்ப்போ அல்லது இடமோ நாட்டில் இல்லை. ராஜபக்ஷக்களின் குடும்ப அரசியலுக்கு இனி நாட்டில் மக்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

அரச ஊடகமொன்றுக்கு கடந்த 08 செப் 2026 செவ்வாய்க்கிழமை வழங்கிய பிரத்யோக நேர்காணலில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப் பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, நாமல் ராஜபக்ஷ கட்சிக்கு வந்ததால் ஆதரவு இரட்டிப்பாகும் என்று சிலர் கூறுவது எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாத ஒரு கதையாகும். மேலும், எதிர்வரும் செப்டம்பர் 12 – ஆம் திகதிக்கு முன்னர் தான் கைது செய்யப்படக்கூடும் என்று நாமல் ராஜ பக்ஷ தொடர்ச்சியாகக் குறிப்பிட்டது, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்ட வர்களுக்கு தான் கைது செய்யப்படுவோம் என்பது நன்றாகவே தெரியும் என்ப தால் தான், இருப்பினும் எந்தக் காரணத்திற்காகத் தனது கைது இடம் பெறப் போகிறது என்பதை நாமல் பகிரங்கமாக வெளிப்படுத்த மறுக்கிறார்.

மேலும், ராஜபக்ஷக்களும் தங்களது தவறுகளைத் தாங்களே உணர்ந்திருப்ப தால் தான் கைது பற்றிப் பேசுகிறார்கள். அநுராதபுரத்தில் பேரணிகளையோ அல்லது வேறு எங்கு கூட்டங்களை நடத்தினாலும், நாட்டு மக்கள் மிகவும் தெளிவான தீர்மானத்தில் இருக்கிறார்கள். ராஜபக்ஷக்களின் குடும்ப அரசியலு க்கு இனி நாட்டில் மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள். ராஜபக்ஷக் கள் தங்களது குற்றங்களையும் ஊழல்களையும் மறைப்பதற்காகவே மீண்டும் மக்கள் கூட்டங்களை நடத்த ஆயத்தமாகி வருகின்றனர். குறிப்பாக 'ஏயார் பஸ்' விமானக் கொள்வனவு ஒப்பந்த ஊழல் என்பது இலங்கையில் கண்டு பிடிக்கப் பட்ட குற்றச்சாட்டு அல்ல, மாறாக லண்டன் மேல் நீதிமன்ற த்தில் ஏயார் பஸ் நிறுவனத்திற்கு எதிராகத் தொடரப்பட்டு நிரூபிக்கப்பட்ட வழக்காகும்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# ஆயுத மோதலின் போது இடம் பெற்ற மீறல்களுக்கு பொறுப்புக் கூறலில் முன்னேற்றமில்லை - ஐ.நா. பிரதி உயர்ஸ்தானிகர் கவலை!

ஆயுதமோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் அரச படையினராலும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினராலும் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவில்லை. முக்கிய வழக்குகள் குறித்த குற்றவியல் விசாரணைகள் தொடர்ந்து தாமதமடைகின்றன என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டிய மனித உரிமைகள் பிரதி உயர்ஸ்தானிகர் அவா டபோ வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்வி இன்னமும் பதிலின்றித் தொடர்தாகக் கரிசனை வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாவில் 07 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது கூட்டத்தொடரில் மறுநாள் செவ்வாய்க் கிழமை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' தொடர்பில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை பிரதி உயர்ஸ்தானிகர் அவா டபோவினால் வாசிக்கப்பட்டது.

அதன்படி 'சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு மற்றும் சமத்துவமின்மை என்பவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் தற்போதைய அரசாங்கத்துக்கு வலுவான மக்களாணை வழங்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார். அவரது விஜயத்தின் பின்னர் சுமார் ஒரு மாதகாலத்துக்குள் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின்போது இலங்கையில் மனித உரிமைகள், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிசெய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது' என பிரதி உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

அதேவேளை 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற கிழக்கு பல்கலைக்கழ உபவேந்தரின் படுகொலை விசாரணைகளை அடுத்து அரசியல்வாதி ஒருவர் கைது செய்யப்பட்டமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் விசாரணைகளின் நீட்சியாக அரச புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பிரதானி கைதுசெய்யப்பட்டமை என்பன உள்ளடங்கலாக சில முக்கிய வழக்குகளில் முன்னேற்றம் எட்டப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று நாட்டில் இனவாதத்துக்கு எவ்வகையிலும் இடமில்லை என்றும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்ற ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கூற்று தொடர்பில் வரவேற்பை வெளிப்படுத்திய அவர், இருப்பினும் நாட்டில் ஆழமான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

அத்தோடு '2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஆயுத மோதல் இடம் பெற்ற காலப்பகுதியில் அரச படையினராலும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினராலும் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் இன்னமும்



பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவில்லை. முக்கிய வழக்குகள் குறித்த குற்றவியல் விசாரணைகள் தொடர்ந்து தாமதமடைகின்றன. ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வேறுபட்ட சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் இன்னமும் ஸ்தாபிக்கப்படவில்லை' என்றும் பிரதி உயர்ஸ்தானிகர் கரிசனை வெளியிட்டார்.

மேலும் பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்ந்து பிரயோகிக்கப்படுவதாகவும், இதன் விளைவாக நியாயமான வழக்கு விசாரணை, முறையான நீதிமன்ற மேற்பார்வை என்பன உள்ளடங்கலாக நபர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய அவர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட தரப்பினர், அவர்களது குடும்பத்தினர், சிவில் செயற்பாட்டாளர்களை இலக்குவைத்து கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று அண்மைய காலங்களில் பல்வேறு பகுதிகளிலும் மனிதப்புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதுடன், வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்வி இன்னமும் பதிலின்றித் தொடர்வதாகவும் பிரதி உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். இவ்வாறானதொரு பின்னணியில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது மக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் வகையில் அதனைப் பலப்படுத்த வேண்டும் என வலியுறுத்திய அவர், யுத்தகாலத்தில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பில் தாம் வெளியிட்ட அறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்தமை குறித்து கரிசனையை வெளிப்படுத்தினார்.

அத்தோடு '2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தின் பிரகாரம் நாட்டின் வருமானத்தில் 82 சதவீதமானவை ஏற்கனவே பெற்ற கடன்களை மீளச்செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே சுகாதாரம், கல்வி மற்றும் இயற்கை அனர்த்தங்களால் சீர்குலைந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை தீவிர கரிசனைக்குரிய விடயமாகும்.

இவ்விடயங்களுக்கும், குறிப்பாக மலையக சமூகத்தின் மேம்பாட்டுக்குமான நிதி ஒதுக்கீடு அவசியமாகும். மேலும் இதயசுத்தியுடனான நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயன்முறைக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தயாராக இருக்கிறது' என்றும் அவர் உறுதியளித்தார்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*



Rajabalini Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# இலங்கையில் போர் முடிந்து 17 ஆண்டுகள்:- நீதி இன்னும் எட்டாக்கனி - ஐ.நா. கவலை



இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து பதினேழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் வோல்கர் டர்க் வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கை, இலங்கையின் தற்போதைய மனித உரிமைச் சூழல் குறித்த நிலவரத்தை விவரிக்கிறது. அந்த அறிக்கையில் ஆணையாளர் வோல்கர் டர்க் கூறியுள்ளதாவது.

கடந்த கால உரிமை மீறல்களுக்கு நீதி வழங்குவதாக உறுதியளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம், 2024 செப்டம்பரில் பதவியேற்றது. இருப்பினும், உயர் ஆணையரின் செப்டம்பர் 3-ஆம் திகதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2009-இல் முடிவுக்கு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது அனைத்துத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட சர்வதேசச் சட்டத்தின் கீழான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் தீவிர மீறல்கள் ஆகியவை தொடர்பாக, சில முக்கிய வழக்குகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைத் தாண்டி, எந்த விதமான பொறுப்புக்கூறலோ அல்லது அவை குறித்த அங்கீகாரமோ இது வரை ஏற்படவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது செப்டம்பர் 1 அறிக்கையில் இதேபோன்ற கவலைகளை எழுப்பியுள்ளது. அந்த அறிக்கை, சில முக்கிய வழக்குகளில் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால் கட்டாயக் காணாமலாக்கல், உதவிப் பணியாளர்களின் கொலை, அல்லது பத்திரிகையாளர்களைக் குறிவைத்தல் போன்ற வழக்குகளில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றும் ஆவணப்படுத்தியுள்ளது.

ஒரு சுதந்திரமான அரசு வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவுவதற்கோ அல்லது பொறுப்புக்கூறலுக்குத் தேவையான சட்ட அல்லது கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற் கொள்வதற்கோ அளித்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டது.

கடுமையான உரிமை மீறல்களுக்கான ஆதாரங்களைச் சேகரிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபையால் நிறுவப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தையும் அநுர குமார திசாநாயக்க அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மனித உரிமைப் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரைத் துன்புறுத்தவும் கைது செய்யவும் இலங்கை அரசாங்கம் இன்றும் அடக்குமுறைமிக்க 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப்' பயன்படுத்தி வருகிறது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், இவர்கள் அரச புலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்புக்கும் விசாரணைக்கும் உள்ளாகின்றனர்.

இச்சட்டத்தை முழுமையாக இரத்து செய்யும் வரை அதைப் பயன்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறும், இச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறும் உயர்ஸ்தானிகரின் அறிக்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

இலங்கை அரசாங்கம், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள சட்ட மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை அவசரமாகச் செயல்படுத்தவும், அடக்குமுறைச் சட்டங்களை இரத்து செய்யவும், விரிவான பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், உண்மையான நல்லிணக்கத்தை நோக்கிய நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும்.

இல்லையெனில், அது தண்டனையின்மையையும் பாதிக்கப்பட்டவர்களிடையே நம்பிக்கையின்மையையும் மேலும் ஆழப்படுத்தும் அபாயத்தை எதிர்கொள்ளும். சர்வதேசக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள (22ம் பக்கம் பார்க்க)

# தணியாத வேதனையும் நிறைவேறாத நீதியும்!




30 ஆகஸ்ட் 2026 காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினமாகும். வருடாந்தம் அந்த தினம் வருகின்றபோது 'எங்கள் உறவுகள் எங்கே?' என்றகேள்வியுடன் வீதிகளில் நிற்கும் தாயாரினதும் உறவினர்களினதும் குரல்கள் மீண்டும் ஒரு முறை நாட்டின் மனசாட்சியைத் தட்டி எழுப்ப முயற்சிக்கின்றன.

இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் கடந்த பல தசாப்தங்களாக நடந்தேறிய ஆயுதப் போராட்டங்கள், உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் யுத்தத்தின் இறுதி நாட்களில் ஆயிரக்கணக்கான மனிதர்கள் சுவடுகளின்றி காணாமல் ஆக்கப்பட்டனர். 'என்றைக்காவது நீதி கிடைக்குமா?' என்ற வினா, வெறுமனே சட்டபூர்வமான கேள்வி மட்டுமல்ல, அது பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் நம்பிக்கையையும் சிதைத்துப்போட்ட ஓர் ஆழமான மானுட வேதனையாகும்.

அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த போதிலும், காணாமல் போனோரின் விவகாரத்தில் உண்மையான நீதி வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்பதே கசப்பான உண்மை.

பரணகம ஆணைக்குழு முதல் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் வரை பல்வேறு பொறிமுறைகள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்த அமைப்புகள் பெரும்பாலும் சர்வதேசத்தின் அழுத்தங்களைத் தணிப்பதற்கும் காலத்தை இழுத்தடிப்பதற்குமான உத்திகளாகவே பயன்படுத்தப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

காணாமல் போனோர் அலுவலகம் நிவாரணத் தொகைகளையும் இறப்புச் சான்றிதழ்களையும் வழங்குவதில் முனைப்புக் காட்டுகிறதே தவிர, 'உண்மை கண்டறிதல்' மற்றும் 'பொறுப்புக்கூறல்' என்ற அடிப்படையான நீதியை நோக்கி அது நகரவில்லை.

அரசின் அலட்சியம் மற்றும் காலதாமதத்திற்கு மத்தியில், பாதிக்கப்பட்ட தாயார்களும் குடும்பத்தினரும் முன்னெடுத்து வரும் சுழற்சிமுறைப் போராட்டங்கள் வரலாற்று முக்கியத்துவமுடையவை.

சுட்டெரிக்கும் வெயிலையும் கொட்டும் மழையும் பொருட்படுத்தாது, பல நூறு நாட்களைக் கடந்து முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டங்கள், பாதிக்கப்பட்டவர்கள் தங்களது அன்புக்கு உரியவர்களுக்கான நீதியைப் பெறும் வரை ஓயப்போவதில்லை என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

போராட்டத்தின் வழியிலேயே பல தாய்மார்கள் தமது பிள்ளைகளின் நிலையை அறியாமலேயே உயிரிழந்த சோகம் இலங்கையின் இருண்ட பக்கங்களில் ஒன்று. காணாமல் போனோர் விவகாரத்தில் நீதி கிடைப்பது சுலபமானதல்ல. எனினும் அது முற்றிலும் சாத்தியமற்றதும் அல்ல. நீதி நிலைநாட்டப்பட வேண்டுமெனில் பொறுப்புக்கூறல் உறுதியளிக்கப்பட வேண்டும் குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

உள்நாட்டுப் பொறிமுறைகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் மற்றும் சுயாதீன அமைப்புகளின் கண்காணிப்புடன் உண்மை கண்டறியப்பட வேண்டும்.

அரசாங்கம் இதனை ஒரு பாதுகாப்புப் பிரச்சினையாகப் பார்க்காமல், அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையாக அணுக வேண்டும். உண்மையைக் கண்டறியாமல், தவறிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தாமல், வெறும் நிதியுதவிகளால் மட்டும் பாதிக்கப்பட்ட இதயங்களின் காயங்களை ஆற்ற முடியாது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் இலங்கை அரசு செய்ய வேண்டியது போலியான வாக்குறுதிகளைத் தருவதையல்ல மாறாக, உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுவதற்கான உண்மையான அடியை எடுத்து வைப்பதேயாகும். அதுவே உண்மையான சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும்.

# நாமலைச் சந்திக்க வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்ற தாயார்!

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தாயாரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியுமான ஷிரந்தி ராஜபக்ஷ 07 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவின் நலனை விசாரிப்பதற்காக அவர் இவ்வாறு அங்கு சென்றுள்ளார். அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவும் சிறைச்சாலை வளாகத்திற்குள் சென்றுள்ளார்.

எயார் பஸ் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வழக்கின் சந்தேகநபராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். இதனையடுத்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு, வீட்டிலிருந்து உணவைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக



சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சேனக பல்லேதென்ன தெரிவித்தார்.

வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலையில் அவர் தங்கியுள்ள வளாகத்தில் விசேட பாதுகாப்புத் திட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்



சாலை ஊடகப் பேச்சாளர் கூறினார். மேலும், அவரைப் பார்ப்பதற்கு நாளொன்றுக்கு மூவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# உலக அழகிப் பட்டத்தை வென்ற தமிழ்ப்பெண் தனுசியா!





உலக அழகிப் பட்டத்தை டொமினிகன் குடியரசைச் சேர்ந்த ஜோஹேரி மோலா (வயது 24) வென்றுள்ளார். ஸ்பெயினைச் சேர்ந்த எலிசபெத் 2 ஆம் இடத்தையும் மலேசியாவை சேர்ந்த தமிழ்ப் பெண்ணான தனுசியா செட்டி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வியட்நாமின் காங் ஹோவா மாகாணம் நியா ட்ராங் நகரில் கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதி மிஸ் வேர்ல்டு உலக அழகிப் போட்டி தொடங்கியது. இதில் இந்தியாவைச் சேர்ந்த நிகிதா போர்வால் உட்பட 111 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு பல்வேறு கட்டங்களாக போட்டிகள் நடத்தப்பட்டன. வியட்நாமின் நியா ட்ராங் நகரில் இறுதிப் போட்டி நடைபெற்றது. முதல் கட்டமாக 111 போட்டியாளர்களில் இருந்து 40 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் இந்தியாவின் நிகிதா இடம் பெற்றிருந்தார். அதன்பிறகு 20 பேர் தேர்வு செய்யப்பட்டனர். ஆனால் அந்தப் பட்டியலில் இந்திய அழகி இடம் பெறவில்லை. அடுத்த கட்டமாக 12 போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் இரு ந்து 6 பேர் தேர்வு செய்யப்பட்டனர். நள்ளிரவில் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அப்போது டொமினிகன் குடியரசைச் சேர்ந்த ஜோஹேரி மோலா முதலிடத்தைப் பிடித்து 'மிஸ் வேர்ல்டு' உலக அழகி பட்டத்தை வென்றார். அவருக்கு கடந்த ஆண்டு பட்டம் வென்ற தாய்லாந்தின் ஓபல் சுசாடா மகுடம் சூட்டினார். ஸ்பெயின் நாட்டை சேர்ந்த எலிசபெத் ரெய்னெஸ் (வயது 22) இரண்டாவது இடம் பிடித்தார். மலேசியாவைச் சேர்ந்த தனுசியா செட்டி (வயது 25) மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

அவரது தாய்மொழி தமிழ் ஆகும். அவரது தந்தை வீரபாண்டியன். 14 வயதில் தாயை இழந்த தனுசியா தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தார். அவர் கொடுத்த ஊக்கத்தால் மிஸ் மலேசியா பட்டம் வென்று, மிஸ் வேர்ல்டு போட்டியில் நுழைந்தார். வியட்நாமில் நடைபெற்ற மிஸ் வேர்ல்டு போட்டியின்போது ஆங்கிலம் மலாய் மாண்டரின் தமிழ் ஆகிய 4 மொழிகளில் தனுசியா சரளமாக பேசினார். மாற்றம் என்பது நமக்குள் இருந்தே தொடங்க வேண்டும் என்று அவர் 4 மொழிகளில் பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# காசாவில் இடம்பெறுவது "யூத பயங்கரவாதம்" முன்னாள் இஸ்ரேல் பிரதமர் காட்டம்



அப்பாவி அராபியர்கள் உள்ளே இருக்கும் போது வீடுகளை எரிப்பது 'யூத பயங்கரவாதம்' ஆகும் என்று முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் நஃப்தாலி பென்னட் தெரிவித்துள்ளார். அப்பாவி அராபியர்களின் வீட்டை அவர்கள் உள்ளே இருக்கும் போது யாராவது வந்து எரித்தால், நிச்சயமாக அது யூத பயங்கரவாதம் தான். அது தேசிய வாதக் காரணங்களுக்காகச் செய்யப்பட்டால், அது தான் அதன் வரையறை,' என்று ஞாயிற்றுக்கிழமை பெஷேவா மாநாட்டில் பென்னட் கூறினார்.

இத்தகைய செயல்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்று கூறிய அவர் இது குடியேற்ற இயக்கத்திற்கு எவ்வாறு உதவுகிறது என்பது எனக்குப் புரியவில்லை,' என்றும் மேலும் தெரிவித்தார்.

ஒக்டோபர் 27 அன்று நடைபெறவுள்ள இஸ்ரேலின் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக பென்னட்டின் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன. இந்தத் தேர்தல் நெதன்யாகுவின் லிகுட் கட்சி மற்றும் அவரது முக்கிய சவாலர்களான, குறிப்பாக முன்னாள் இராணுவத் தலைமைத் தளபதி காடி ஐசென்கோட் மற்றும் பென்னட் ஆகியோரை மையமாகக் கொண்டுள்ளது. சமீபத்திய நாட்களில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவம் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள சூழலில் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் சூழலின் நிலை காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை தொடர் அதிகரிப்பை சந்தித்துள்ளது.

அமெரிக்காவும் ஈரானும் மீண்டும் தாக்குதல்களைத் தொடங்கியதால், உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் விநியோகம் சென்று வந்த ஹோர்முஸ் நீரிணை வழியாக எண்ணெய் போக்குவரத்தின் தேக்கம் இந்த நிலையை மேலும் அதிகரித்துள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# சைவ அமைப்புக்களின் தலைவராக தென்கயிலை ஆதின தவத்திரு அகத்தியர் அடிகளாரா? கொதித்தெழும் கம்பன் கழகத் தலைவர் ஜெயராஜ்!

ஊடகங்கள் சிலவற்றில் நேற்றைய தினம் ஓர் செய்தியைப் பார்க்க முடிந்தது. வவுனியாவில் கூடிய ஒரு சில அன்பர்கள், தற்போது தென் கயிலை ஆதீன முதல்வராக இருப்பவரை, அகில இலங்கைக்குமான சைவ அமைப்புக்களின் பிரதானியாக நியமிப்பதென முடிவு செய்து, அதனை ஓர் அறிக்கையாய் வெளியிட்டுள்ளனர்.




மேற்கண்ட அறிக்கையைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். கடந்த 50 ஆண்டுகளாக நமது சைவசமயச் செயற்பாடுகளோடு தொடர்புபட்டு இயங்கு பவன் என்ற முறையிலும், இந்துமத ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகளை சிறுவயது முதல் நிகழ்த்தி வருபவன் என்கின்ற முறையிலும், நம்நாட்டில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சைவசமய செயற்பாடுகளுக்கு எனது பிரச்சாரங்களின் மூலம் துணை செய்து வருபவன் என்ற முறையிலும், சைவசமயத்தினுடைய புகழ்பெற்ற தர்மபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் போன்ற ஆதீனங்களால், சைவசித்தாந்தம் தொடர்பாகப் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டவன் என்ற முறையிலும், உலக அளவில் பல சைவமாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றியவன் என்ற முறையிலும், கொழும்பில் ஐஸ்வர்யலக்ஷ்மி தத்துவத் திருக்கோயில் எனும் ஆலயத்தினை கம்பன்கழகத்தின் மூலம் அமைத்து வழிநடத்தி வருபவன் என்ற முறையிலும், அவ்வப்போது சைவசமய நடைமுறைகள் சார்ந்த பிரச்சினைகள் எழும்போது அவற்றிற்குத் தீர்வு கண்டு எழுதி, சைவமக்களை நெறிப்படுத்தி வருகிறவன் என்ற முறையிலும் மேற்படி நியமனம் பற்றிய எனது கருத்தினை நம் நாட்டு சைவசமய சமுதாயத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது பற்றித் தெரிவிப்பதற்கு முன்பாக, மேற்படி குறிப்பிட்ட குழுவினரால் நேற்று விடப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பிரதானி என்ற சொல் தெளிவற்ற மயக்கம் தருகிற ஒரு சொல்லாக இருப்பதை இங்கு முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இக்குழுவினர் பிற்காலத்தில் பிரதானி என்ற சொல்லைத் தலைவர் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தத் தலைப்பட்டால் அதனால் நம் சமயத்தில் பெரும் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு என்பது பற்றி முன் கூட்டியே எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நமது சைவசமயம் ஸ்தாபகர் என்று தனியொருவர் இல்லாத தொன்மைப் புகழுடையது. மற்றைய சமயங்கள் போல, குறித்த தனி ஒருநபரை தனது மதத்தின் தனித்தலைவராகக் கொண்டு சைவசமயம் என்றும் இயங்கியதில்லை. இறைவனே நம் சைவ சமயத்தின் தலைவர் என்ற கொள்கையில் தான் நம் சைவசமயம் இதுவரை காலமும் இயங்கி வந்திருக்கிறது.

நம் சைவசமயம் தனது பக்தி மார்க்கத்திற்கும் தத்துவ மார்க்கத்திற்கும் கூட, தனி ஒருவரை வழிகாட்டியாகத் தேர்ந்தெடுக்காமல் நான்கு, நான்கு பெயர்களை சமய ஆச்சாரியார்களாகவும், சந்தான ஆச்சாரியார்களாகவும் தேர்ந்தெடுத்துள்ளதை நாம் மனம் கொள்ளத் தவறக்கூடாது.

சைவசமயம் இறை வழிபாட்டை மிக விரிவாக எடுத்துரைத்திருக்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என, சைவசமய வழிபாடு நால்வகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நால்வகை வழிபாட்டு முறைகளும் வெவ்வேறு விதங்களாய் அமைந்துள்ளன. சரியை வழிபாட்டாளர்களின் வழிபாட்டு முறை வேறு. கிரியை வழிபாட்டாளர்களின் வழிபாட்டுமுறை வேறு. இங்ஙனமே யோக, ஞான வழிபாட்டாளர்களின் வழிபாட்டுமுறைகளும் வெவ்வேறாம்.

இங்ஙனமாய் வழிபாடுகள் வேறுபட்டிருக்கும் நிலையில், குறித்த ஒரு வழிபாட்டாளர் நம்சமயத்தின் தலைவரானால் அதனால் பல சிக்கல்கள் நேர வாய்ப்புள்ளது.

அது நோக்கியே, நமது சைவசமயத்தார் போற்றுகிற, சுந்தரரும், நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழார் பெருமானும் அடியார்கள் பற்றி உரைக்கத் தலைப்படுகையில் ஒருவரைத் தனித்துக் குறிக்காமல் வேறு வேறுவிதமாய் வழிபாடியற்றிய பல அடியார்களையும் தொகுத்துக் கூறியுள்ளனர்.

தமிழ்நாட்டிலும், நம்நாட்டிலும், சைவ சமயம் பரவியுள்ள பலநாடுகளிலும் இன்று வரை சைவசமயத்தை வளர்த்தெடுப்பதற்கான பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, உயர்ந்த ஞானியரால் ஸ்தாபிக்கப்பட்டு, பல நூற்றாண்டுகளைக் கடந்து நிலைபெற்று நிற்கும், நமது புகழ்பெற்ற ஆதீனங்கள் கூட, சைவசமயத்தின் உயர்பீடங்களாகக் கருதப்பட்டனவேயன்றி சைவசமயம் முழுமைக்குமான தனித்தலைமைப் பீடங்களாய் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். சைவசமயம் தோன்றிய காலந்தொட்டு, நமது சைவ சித்தாந்த வழிபாட்டு நிலையிலும், ஆன்ம பக்குவத்திற்கேற்ப வெவ்வேறு இறைவழிபாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அதனால் தான் சிவஞானசித்தியார் எனும் நூலை எழுதிய அருணந்தி சிவாச்சாரியார் அவர்கள், யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர் எனப் பாடியுள்ளார்.

சிவனை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு சைவம் இயங்கினாலும், அச்சிவனே அடியார்களின் பக்குவத்திற்கேற்ப வெவ்வேறு வடிவம் கொண்டு அருள் செய்கிறான் என்பதையே மேற்பாடல் நமக்கு உணர்த்துகிறது.

இங்ஙனமாய் பல்வேறுபட்ட நிலைகளிலும் வேறுபாடுகளை அங்கீகரித்து, அதற்கேற்ப இறையின் வடிவ நிலையையும் வேறுபடுத்தி உரைத்து நிற்கும் ஒருமைப்பாடுடைய நமது சைவசமயத்திற்கு, குறித்த ஒரு தனிநபரை நம் பெரியவர்கள், இதுவரை காலமும் தலைவராக ஏற்றதும் இல்லை, இனியும் ஏற்கப் போவதுமில்லை என்பது திண்ணம்.

அங்ஙனம் ஏற்கத் தலைப்பட்டால் அதனால் சைவசமயத்திற்குள் பல குழப்பங்கள் விளைய வாய்ப்பிருக்கிறது. அது பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல் மேற்படி குழுவினர் தனி ஒருமனிதரை இலங்கை முழுவதும் வாழும் சைவசமயதத்தின் பிரதானியாக (?) அறிவித்திருப்பது ஏற்க முடியாததும் பொருத்தமில்லாததுமான முடிவு மட்டுமன்றி அஃது சைவத்தின் போக்கைப் புரிந்து கொள்ளாது எடுக்கப்பட்டிருக்கும் கண்டனத்திற்குரிய ஒரு முடிவுமாகும் என்பதனை சைவ உலகத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேற்சொன்னவர்களின் முடிவின்படி, தனி ஒரு மனிதரை இலங்கைவாழ் சைவ மக்கள் அனைவரதும் பிரதானியாக(?) ஏற்றுக்கொள்வது சாத்தியமற்ற ஒன்றாகும். அங்ஙனம் ஒரு தலைமைப் பீடத்தை அமைக்கும் போது, எக்காலத்திலேனும் தவறான ஒருவர் அப்பீடத்தின் பிரதானியாக (?) வந்து அமர்ந்து விட்டால், அவரது தவறுகளால் சைவசமயம் இழுக்குறும் என்பதில் ஐயமில்லை. சைவசமயத்திற்குத் தனியொருவர் தலைமைதாங்க முடியாது என்பது போக, அங்ஙனம் ஒருவர் தனித்தலைவராக வேண்டும் என்றால் கூட அத்தகையவர் சைவ சமயத்தினுடைய ஆதாரவிடயங்களில் ஆழ்ந்த அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

அத்தகையவர் சைவசமயத்தின் ஆதார நூல்களான வேத, ஆகம, புராணம், இதிகாசங்களில் நுண்மான் நுழைபுலமும், சைவத் திருமுறைகளில் தெளிந்த அறிவும், சைவசித்தாந்த தத்துவத்தில் ஆழ்ந்த புலமையும், சரியை, கிரியை, யோக வழிபாடுகள் பற்றிய தெளிவும், சைவ மக்கள் அனைவரதும் ஒருமித்த அங்கீகாரமும், தூய சைவசமய வாழ்வியலும் கொண்டவராக அமைந்திருத்தல் அவசியம்.

மேற்படி குழுவினரால் சைவசமய மக்களின் பிரதானியாக (?) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தென்கயிலை ஆதீன குருமுதல்வர் என்னால் மதிக்கப்படத்தக்க ஒருவரேயாயினும், அவர் மேற்சொன்ன தகுதிகள் முழுவதும் ஒருங்கே அமைந்த ஒருவராய் இல்லை என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதனால் அவரை ஒட்டுமொத்த இலங்கை சைவமக்களின் தலைவராய் மட்டுமன்றி இவர்கள் சொல்லும் பிரதானியாய்க் கூட (?) ஏற்க முடியாது என்பது உறுதி.

இங்ஙனமாய் ஒருவரைத் தலைவராய் ஏற்கும் போது வரக்கூடிய பிரச்சினைகளை நம் சைவ உலகத்தவர்கள் தெரிந்து கொள்வது அவசியம். இங்ஙனம் ஒருவரை நாம் தேர்ந்தெடுத்து விட்டால், அதன் பின்னர் அரச நிலையிலும், நீதிமன்ற நிலையிலும் சைவ சமயம் பற்றிய அவரது முடிவே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும் அபாயம் இருக்கிறது.

நான் மேற்சொன்ன அத்தனை விடயங்களிலும் பூரண அறிவில்லாத இப்பெரியவரின் தீர்ப்பால், வருங்காலத்தில் நம் சமயத்தில் பல குழப்பங்கள் விளையும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் மட்டுமென்றில்லாமல் பிரிந்து வேறுபட்டு இருக்கும் நமது இலங்கையின் சைவசமயத்தைச் சார்ந்த ஆலயங்களும், அறிஞர்களும், அமைப்புக்களும் தமிழக ஆதீனங்களும் கூட இத்தகைய ஒருவரின் தனித்தலைமையை முழுமைச் சைவத் தலைமையாய் ஏற்றுக் கொள்ளாது என்பது சர்வ நிச்சயம்.

தற்போது ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்திருக்கும் மேற்படி குழுவினர் விரும்பினால், தாம் சார்ந்த ஓர் சைவ அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பிற்கு அவரைத் தலைவராக்கலாமே அன்றி, ஒட்டுமொத்த இலங்கை சைவ உலகத்தின் ஏகப் பிரதிநிதியாய் அவரை நியமிக்க முடியாது என்பதனை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.


என்னுடைய இக்கருத்தின் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் மிக்க அறிஞர்களும், அமைப்புக்களைச் சார்ந்தவர்களும், ஆலய நிர்வாகத்தினரும், உடனடியாக மேற்படி குழுவினரின் முயற்சி பற்றிய தவறினைச் சுட்டிக்காட்டி, தமது கருத்துக்களை வெளியிட்டு இம்முயற்சியைத் தடை செய்யவேண்டும் எனத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுநாள் வரை நமது சைவசமய விடயங்களை நாடளவில் முன்னெடுத்து வரும் அகில இலங்கை இந்துமா மன்றம்'' மேற்படி குழுவினரின் இம்முடிவை நிராகரித்து அறிவிப்பதோடு, அரசமட்டத்தில் நம் சமயத்தின் செயற்பாடுகளை நெறிப்படுத்தி வெளிப்படுத்தும் தேவைக்காக வேண்டுமானால், ஓர் குழுவை அமைத்து செயற்படுவதே சரியான வழிமுறையாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இவ்விடயம் பற்றி உடனடியாகச் செயற்படத் தவறும் பட்சத்தில், தனி ஒரு மனிதரின் விருப்பே சைவத்தின் விருப்பாய் மாறி, நம் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய அபாயத்திற்கு ஆளாக நேரிடும் என்பதனை வலியுறுத்திச் சொல்லி நிறைவு செய்கிறேன்.

# சைவசமயிகளின் தலைவராக தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவு?

வவுனியா அகிலாண்டேசுவரர் திருக்கோவிலில் 06 செப்டம்பர் 2026 நடைபெற்ற வடக்கு கிழக்கு சைவ அமைப்புக்களின் தலைமைப் பிரதானிகளின் கூட்டம் தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளாரை ஏகமனதாக சைவசமயிகளின் தலைவராக முன் மொழிந்து ஏற்றுக் கொண்டதுடன் அதனை சைவசமயிகளிடமும் இந்து கலாசார திணைக்களம் உட்பட அரச திணைக்களங்கள் அரச உயர் மட்டத்திற்கும் எடுத்து செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது



இன்றைய கூட்டம் தென் கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் அருளாட்சி வகிக்க அகிலாணடேசுவரர் தலைமை அறங்காவலர் சிவத்திரு நவரட்ணராசா திருக்கோணேசுவர தலைமை அறங்காவலர் சட்டத்தரணி துசியந்தன் நயினை நாகபூசணி கோவில் தலைமை அறங்காவலர் சிவத்திரு சரவணபவன் சைவ சமயப் பேரவை தலைவர் அகோரசிவம் உமையரசு சிவாச்சாரியார் கிழக்கு இந்து ஒன்றியத் தலைவர் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் சிவத்திரு யோகேசுவரன் இலண்டன் கனகதுர்க்கை அறங்காவலர் மருத்துவர் பரமநாதன் அகில இலங்கை சைவ மகா சபை பொதுச்செயலாளர் மருத்துவர் பரா. நந்தகுமார் அகில இலங்கைச் சிவ மங்கையர் தலைவி சிவசகோதரி சோதிநாயகி அம்மையார் கிளிநொச்சி திருநெறிக்கழக தலைவர் சிவத்திரு சிவஞானசுந்தரம் வவுனியா மாவட்ட சுத்தானந்த இந்து இளைஞர் கழக தலைவர் சிவத்திரு அமலன் சிவ சகோதரர்கள் சிவதொண்டர் சிவ மங்கயர் மாவட்ப இணைப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்தை தலைமையாக் கொண்ட சிவகுரு ஆதீனம் சைவ பரிபாலன சபை, சைவப்புலவர் சங்கம் மலையகத்தை தலைமையாக கொண்ட சிவசகோதரர் அமைப்பு கொழும்பை தலைமையமாக் கொண்ட இலங்கை சைவநெறிக் கழகம் போன்ற நாடாளாவிய அமைப்புக்களும் பிராந்திய மற்றும் நாடாளாவிய சைவ சமய குருமார் ஒன்றியங்களும் அம்பாறை சைவ நெறிக்கூடம் மட்டக்களப்பு சிவ தொண்டர் கூட்டம் கல்முனை சைவ அறப்பணி நிலையம் ஆகிய மாவட்டநிலை சைவ அமைப்புக்களும் ஏற்கனவே தவத்திரு அகத்தியர் அடிகளாரை இலங்கை சைவ சமயிகளின் தலைமையாக ஏற்க தங்கள் உறுதிப்பாட்டை வெளியிட்டு இருந்தன.

அதே நேரம் கடந்த மாத இறுதியில் கொழும்பைத் தலைமையமாக் கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றம் தவத்திரு அகத்தியர் அடிகளாரை தலைவராக ஏற்கும் தம் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தது அதே போல வெற்றிடமாகவுள்ள நல்லை குருமகா சந்நிதான அருளாட்சியை ஏற்று வீற்றிருக்க தவத்திரு அகத்தியர் அடிகளாருக்கு அனேக சைவ சமய அமைப்புக்களும் நல்லை ஆதீன நம்பிக்கை பொறுப்புச்சபையும் விடுத்த விண்ணப்த்தை தவத்திரு அகத்தியர் அடிகளார் ஏற்றுக் கொண்டிருப்பதால் அதனை நல்ல ஆதீன நம்பிக்கை பொறுப்புச்சபை விரைந்து அதனை செயற்படுத்த வேண்டும் என இணைய அமைப்புக்கள் வலியுறுத்தின. திருக்கோவில்களில் ஆபாச ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் பக்தர்களிற்கும் அயற் பிரதேச குடிகளிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அதீத ஒலி ஒளி நிகழ்வு செயற்பாடுகளும் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது

அனைத்து ஆலயங்களும் அறப் பணிக்களை சைவ சமயக் குடிகளிற்கு ஆற்ற நயினை நாகபூசணி வவுனியா சிவன் இலண்டன் கனக துர்க்கை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயங்களை மேற்கோள் காட்டி வலியுறுத்தப்பட்டது

22வது அரசியலமைப்பு உட்பட எதிர்வரும் அரசியல் அமைப்பு யாப்பு சீரதிருத்தங்களில் சைவசமயிகளின் அபிலாசைகளை சரிவர சட்ட ரீதியாக சைவசமய தலைமைப்பீடத்தினால் அரசிற்கு வெளிப்படுத்தும் வகையில் திருக்கோணேசுவர ஆலய தலைவர் சட்டத்தரணி துசியந்தன் அவர்களை இணைப்பாளராகக் கொண்டு ஒன்பது பேர் கொண்ட நிபுணர் குழு அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது

இதில் ஏற்கனவே மூத்த சட்டதரணிகளான இரட்ணவேல் ஜெயரூபன் தயாபரன் ஆகியோரும் முன்னாள் தமிழ் கூட்டமைப்பு சைவ சமய விவாகாரங்களிற்கான நாடாளுமன்ற உறுப்பினர் யோகேசுவரன் அவர்களும் அங்கம் வகிக்க விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

மாவட்ட, பிரதேச செயலக ரீதியாக சிவ சகோதரர்களை ஆதீனத்தின் அருளாணையுடன் நியமிக்கவும் முடிவெடுக்கப்பட்டது வவுனியா சிவன் கோவிலின் மாகேசுவர யூசையுடன் பயனுறுதி வாய்ந்த கலந்துரையாகல்கள் ஏகமனதாக தீர்மானத்துடனும் கொள்கை பிரகடனத்துடனும் கூட்டம் இனிதே நிறைவுற்றது.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# 22வது அரசியல் திருத்தம் சட்டப்படி நிறைவேறுமானால் அநுரவின் 2 ஆண்டு ஆட்சிப் பூர்த்திக்கு இது பரிசு!

22வது அரசியல் திருத்தம் ஜே.வி.பி.யின் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஓர் அமிலச் சோதனையாக அமைந்துள்ளது. வென்றால் இது சட்டமாகும். சறுக்கினால், எதிர்க்கட்சிகள் அச்சப்படுவது போன்று ஒரு கட்சி ஆட்சி நீட்சி பெறும் சூழ்நிலை உருவாகலாம்.

அநுரகுமர திஸ்ஸநாயக்க இலங்கையின் பத்தாவது ஜனாதிபதியாக பதவியேற்று இந்த மாத இறுதியில் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிறது. முன்னைய ஜனாதிபதிகள் போன்று சேவைக்கால பூர்த்தியை கொண்டாடும் வழக்கத்தை இவரதமது முதலாவது ஆண்டு பூர்த்தியில் காட்டவில்லை.

1971லும், 1987-1989 காலப்பகுதியிலும் ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்த ஜே.வி.பி. இயக்கம், அதிலிருந்து விடுபட்டு ஜனநாயக தேர்தல் வழியாக தமது மறுவடிவமான மக்கள் தேசிய கட்சி மூலம் ஆட்சிக் கதிரையில் அமர்ந்துள்ளது.

ஊழல் ஒழிப்பு, போதைவஸ்து முறியடிப்பு ஆகிய கொள்கைகள் ஊடாக பொருளாதார விருத்தி காணும் கொள்கைகளை முன் வைத்துள்ள இந்த ஆட்சி கடந்த இரண்டு ஆண்டுகளில் ஓரளவுக்கு இவ்விடயங்களில் அறுவடையைக் காண்பித்து மக்கள் ஆதரவை தக்க வைத்துள்ளது. எனினும், வாழ்க்கைச் சுமையிலிருந்து மக்கள் முழுமையாக இன்னும் விடுதலை பெறவில்லை. பொருட்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. நிதிப்பற்றாக்குறையும் வேலையின்மையும் மாறவில்லை. சர்வதேச உதவியையே தேசிய மக்கள் சக்தி அரசு நாடி நிற்கிறது.

ஊழல் ஒழிப்பில் சுத்தமான கை தெரிகிறது. முன்னைய ஆட்சிக் காலங்களில் பெருமளவு பணத்தை சூறையாடியது என்ற சந்தேகத்தில் பலர் கைதாகி வருகின்றனர். மகிந்தவின் மூத்த புதல்வாரன இவரே அடுத்த ஜனாதிபதி என அறிமுகப்படுத்தப்பட்டு வரும் நாமல் ராஜபக்சவும் இப்போது கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பெரும் தலைகளே உருட்டப்படும் நிலைமை அங்குமிங்குமாக காணப்படுகிறது. இதனை சாதாரண மக்கள் எதிர்ப்பு காட்டாமல் இருப்பதன் ஊடாக அவர்களின் ஆதரவு புலப்படுகிறது.

எனினும், அநுர அரசு இப்போது முகம் கொடுத்திருக்கும் முக்கியமான ஒன்றாக 22வது அரசியல் திருத்தச் சட்டம் மேலோங்கியுள்ளது. பிரித்தானியா இலங்கைக்கு சுதந்திரம்(?) வழங்கிய பின்னர் முதலாவது அரசியல் அமைப்பு உருவாக்கம் 1972ல் நிகழ்ந்தது. இலங்கை அரசியலில் முதல் முறையாக மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் இடதுசாரிகளுடனான கூட்டரசு புதிய அரசியலமைப்பை சாத்தியப்படுத்தியது.

இலங்கை என்ற பெயரை சிறீலங்கா என மாற்றியதோடு இந்தக் குட்டித் தீவை சோசலிச ஜனநாயக குடியரசாகவும் மாற்றியவர் சிறிமாவோ பண்டாரநாயக்க. 1977 பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன தம்மிசுஷ்டப்படி தம்மை தர்மிசுஷ்டர் எனக் கூறிக் கொண்டு 1978 செப்டம்பர் 7ம் திகதி புதிய அரசியலமைப்பை உருவாக்கி பிரதமர் பதவியில் இருந்த தம்மை ஜனாதிபதியாக்கிக் கொண்டார்.




இந்த வாரத்துடன் இதற்கு அகவை 48 ஆகின்றது. 1978ல் தாம் கொண்டு வந்த புதிய அரசியலமைப்பில் தமது பதவிக் காலத்திலேயே 16 திருத்தங்களை இவர் கொண்டு வந்தார். இதனை ஒரு கின்னஸ் சாதனை என்றும் கூறலாம்.

எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை ஏழாண்டுகளுக்கு ரத்துச் செய்து தாம் விரும்புவதையெல்லாம் செய்து முடித்தார். ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர மற்றைய அனைத்தையும் செய்யும் நிறைவேற்று அதிகாரம் தமக்கு இருப்பதாக பகிரங்கமாகக் கூறிய ஜே.ஆர். ஜெயவர்த்தன அதனை செயலிலும் காட்டினார். இவரது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் ஆறாம், பதின்மூன்றாம் திருத்தங்கள் இன்றும் தமது பிறப்புரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இலங்கை தமிழ்த் தேசிய இனம் சம்பந்தப்பட்டது.

1983 யூலை தமிழின அழிப்பின் காயங்கள் காய்வதற்கு முன்னரான அடுத்த பதினைந்து நாட்களுக்குள் கடுகதி வேகத்தில் ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி ஆறாம் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1977 தேர்தலில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து பெற்றிருந்த அமோக வெற்றியையும் அக்கட்சியின் தலைவரான அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானதையும் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்த இவர் ஆறாம் திருத்தம் ஊடாக தமிழ் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திலிருந்து நீக்குவதற்காக ஆறாம் திருத்தத்தை திட்டமிட்டு கொண்டு வந்திருந்தார். இத்திருத்தத்தை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்யாததால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இழந்தனர். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் புதல்வரான அநுர பண்டாரநாயக்கவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற மற்றொரு முக்கியமான அரசியல் செயற்பாடு 13ம் திருத்தம். இந்திய பிரதமர் ராஜிவ் காந்தியோடு 1987ல் இவர் செய்துகொண்ட ஒப்பந்தம் மாகாணசபை உருவாக்கத்துக்கான 13வது அரசியல் திருத்தம். 1987 செப்டம்பர் 14ம்திகதி இத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்று வரை காணி அதிகாரமோ, காவற்துறை அதிகாரமோ மாகாண சபைகளுக்க வழங்கப்படவில்லை. இப்போது பல வருடங்களாக மாகாண சபைகளே காணாமற் போய் விட்டது.

ஆனால் 13ம் திருத்தம் மட்டும் எழுத்தில் உள்ளது. சிங்கள தேச ஆட்சியாளர்களாக தங்களது குடும்பத்தை மாற்ற முனைந்த ராஜபக்சக்களில் முக்கியமானவரான மகிந்த ராஜபக்ச இரண்டு தடவைகளுக்கும் மேலாக ஜனாதிபதி பதவியை வகிக்க விரும்பியதால் சர்வாதிகார போக்கில் 18ம் அரசியல் திருத்தத்தை நிறைவேற்றினார். ஆட்சியில் தமக்கிருந்த பெரும்பான்மையை இதற்காகப் பயன்படுத்தினார். இரண்டு தடவைகள் மட்டுமே என மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி தேர்தல் சட்டத்தை 18ம் திருத்தம் காலவரையற்றதாக மாற்றினதாயினும், மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் இவர் தோல்வியடைந்தார்.

2015ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன 18ம் திருத்தத்தை நீக்கி, ஏற்கனவே இருந்த ஜனாதிபதி ஒருவர் இரு தடவை மட்டுமே என்ற சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இதுவே 19ம் திருத்தம்.

அடுத்து நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு வந்த மகிந்தவின் சகோதரரான கோதபாய ராஜபக்ச தமக்கிருந்த அதிகாரத்தை பயன்படுத்தி 2020 அக்டோபர் 20ம் திகதி 19ம் திருத்தத்தை ரத்துச் செய்தார். ஆட்சியின் அத்திவாரமாக அமைந்திருக்க வேண்டிய அரசியலமைப்பை அடுத்தடுத்து வந்த மூன்று ஜனாதிபதிகள் மாற்றியும் நீக்கியும் கோமாளித்தனமாக நடத்திய நாடகங்களை 2010ம் ஆண்டிலிருந்து 2020 வரை பார்க்கக் கூடியதாகவிருந்தது.

கடந்த இரண்டாண்டுகளாக ஆட்சி புரியும் அநுர குமர அரசு முதன் முறையாக தங்கள் பதவிக்காலத்தில் ஓர் அரசியல் திருத்தத்தை கொண்டு வர முயற்சிக்கிறது. 22ம் அரசியல் திருத்தம் என்ற இச்சட்டமூலம் நாட்டில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாங்கத்தின் நீதித்துறை அமைச்சர் என்ற வகையில் ஹர்ச நாணயக்கார இச்சட்டமூலத்தை கடந்த மாதம் 18ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். சமகாலத்தில் இச் சட்டமூலத்துக்கு எதிரான அறுபதுக்கும் அதிகமான மனுக்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் தலைமையில் ஐந்து உச்சநீதிமன்ற நீதியரசர்கள் இதனை விசாரணை செய்து முடித்துள்ளனர்.

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

இவர்களின் தீர்ப்பு அரசியல் சட்டப்படி நாடாளுமன்ற சபாநாயகருக்கு அறிவிக்கப்படும். அதனை அவர் சபையில் பகிரங்கப்படுத்துவார். பதவியிலுள்ள நீதிபதிகளின் வயதெல்லையை நீடிப்பதே இச்சட்டத்தின் மூலமாகும்.

அநுர குமர அரசின் பதவிக் காலத்தை நீடிக்கவும், தேர்தல்களை காணாமலாக்கவும் 22ம் சட்டத் திருத்தத்தை ஆட்சித்தரப்பு பயன்படுத்தப் போவதாக கூறி வரும் எதிர்க்கட்சியினர், இச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இப்போதே முன் வைத்துள்ளனர். இதற்காக மக்களை வீதிகளில் இறக்கி போராட்டம் நடத்தவும் இவர்கள் முயல்கின்றனர்.

நீதிமன்றம் தீர்ப்பளித்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமென ஆட்சித்தரப்பு கூறி வருகிறது. எனினும், அவ்வாறான தீர்ப்பு வழங்கப்படமாட்டாது என்ற நம்பிக்கை அரசதரப்புக்கு இருப்பதை காணமுடிகிறது. சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அதில் ஆட்சித் தரப்பு தோல்வியடையுமானால் தேசிய மக்கள் சக்தி பெரும் நெருக்கடியை சந்திப்பது தவிர்க்க முடியாது போகும்.

22ம் அரசியல் திருத்த சட்டத்தை இலங்கை சமசமாஜ கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார (87 வயது) பகிரங்கமாக ஆதரித்து வருகிறார். உயர் நீதிமன்ற நீதியரசராகவிருந்த வடமாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரன் இச்சட்டத் திருத்தத்தை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்கார நீதியமைச்சர் ஹர்ச நாணயக்காரவின் பெரிய தந்தை. சி.வி.விக்னேஸ்வரனின் புதல்வர் ஒருவர் வாசுதேவ நாணயக்காரவின் புதல்வியை திருமணம் செய்தவர். இவர்கள் இருவரும் நீதியமைச்சர் ஹர்ச நாணயக்காரவின் உறவினராக இருப்பதால் 22ம் திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதாக கொழும்பின் ஆங்கிலப் பத்திரிகையொன்று கடந்த வாரம் சுட்டிக்காட்டியுள்ளது.

22ம் திருத்தச் சட்டம் 2025ல் நடைமுறைக்கு வந்திருப்பின் ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் பதவி நீடிப்பு பெற்றிருப்பார் என்றும் நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதுவானாலும் 22வது அரசியல் திருத்தம் ஜே.வி.பி.யின் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஓர் அமிலச் சோதனையாக அமைந்துள்ளது. வென்றால் இது சட்டமாகும். சறுக்கினால், எதிர்க்கட்சிகள் அச்சப்படுவது போன்று ஒரு கட்சி ஆட்சி நீட்சி பெறும் சூழ்நிலை உருவாகலாம்.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

27 ஆகஸ்ட் 2026 முதல் 04 செப்டம்பர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 10 செப்டம்பர் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லப்பா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஓய்வுபெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லப்பா் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2026 சனிக்கிழமையாகும்.. அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஹ்ரீராம் ஞானச்செல்வம்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் ஹ்ரீராம் ஞானச்செல்வம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்கள் உடன்பிறப்பு இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஹ்ரீராம் ஞானச்செல்வம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது பெற்றோர்கள் உடன்பிறப்பு மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2026 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதரர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது 6வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்

### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 செப்டம்பர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




03 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




04 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 15வது இனியப பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




05 செப்டம்பர் 2026 சனிக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் ஸ்ரீராம் ஞானச்செல்வம் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்களும் உடன்பிறப்பும் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 செப்டம்பர் 2026 சனிக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




01 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஸ்ரீகுமரன் சுவர்ணா இணையர்களின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 07 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




09 செப்டம்பர் 2026 புதன்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவாகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வேது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமை யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ஆறுமுகம் செல்லப்பா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




# புள்ளி விபரங்கள் இரத்தம் சிந்துவதில்லை

அமைதியான காலத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரை அடக்கம் செய்கிறார்கள் ஆனால் போர்க் காலத்தில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அடக்கம் செய்கிறார்கள் இது கிரேக்க வரலாற்று அறிஞர் ஹெரோடோடஸ் கூறியது. ஈழத் தமிழர்களுக்கும் இது பொருந்தும்.




வயதாகி முதுமை கண்டு இறந்து போகும் தமது பெற்றோருக்கு பிள்ளைகள் இறுதிக் கிரியைகளை செய்வது சுமுகமான ஒரு காலம். போருக்குப் போன அல்லது போரில் சிக்கி உயிரிழந்த பிள்ளைகளுக்கு பெற்றோர் இறுதிக் கிரியைகளைச் செய்வது போர்க்காலம். ஆயின் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படத்தை ஏந்தியபடி அம்மாக்கள் தெருக்களில் நிற்பது எந்த காலம்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுவதுபோல, இது இனவாதம் இல்லாத காலமா? தமிழ் மக்கள் அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பிப் பின் தொடரும் ஒரு காலமா?

அண்மையில் ஒரு சிங்களப் பெண் மருத்துவர் சொன்ன கதை வருமாறு... யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய ஆஸ்பத்திரி ஒன்றில் ஒரு முதியவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் பெரும்பாலும் தப்ப மாட்டார் என்று மருத்துவர்கள் முடிவு செய்தார்கள். இது அவருக்குத் துணையாக நின்ற அவருடைய முதிய மனைவிக்கும் கூறப்பட்டது. அந்த முதிய தாய் இந்த மருத்துவரிடம் கேட்டார், இவரை நோயாளர் காவு வண்டிமூலம் எனது மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிக்கு மாற்றுவீர்களா? ஏனென்றால் இங்கிருந்து இவருடைய உடலை எனது கிராமத்துக்கு காவிச்செல்ல பெருந்தொகை செலவாகும். என்னுடைய மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரியிலிருந்து எனது கிராமத்துக்குக் கொண்டு போக குறைந்த காசுதான் தேவைப்படும். அதனால் தான் அப்படி கேட்கின்றேன் என்று.

அப்பொழுது அந்த மருத்துவர் அந்த முதிய தாயின் குடும்ப விவரங்களைக் கேட்டிருக்கிறார். அவர்களுக்கு ஒரே ஒரு மகன். அவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு விட்டார். இப்பொழுது அவர்கள் இருவரும் துணைக்கு இரண்டு நாய்களை வளர்க்கிறார்கள். தனது கணவர் ஒரு படுக்கை நோயாளி என்ற போதிலும் அவர் உயிரோடு இருக்கும் வரை தான் தனிமையை உணர்வதில்லை என்றும், அவர் இறந்து போனால் தானும் இரண்டு நாய்களும் மட்டுந `தான் என்றும் அந்த அம்மா கூறியிருக்கிறார்.

இது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஒரு பிள்ளையின் தாயுடைய கதை. இப்பொழுது தமது பிள்ளைகளின் ஒளிப்படங்களை ஏந்தியபடி நீதி கேட்கும் அம்மாக்களிடம் கேட்டால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல்வார்கள்.

புள்ளிவிவரங்கள் இரத்தம் சிந்துவதில்லை விவரங்களே முக்கியம்'' என்று ஆர்தர் கோஸ்ற்லர் கூறுவார். ஏனென்றால் புள்ளி விபரங்களில் காணப்படுவது எண்ணிக்கையைக் காட்டும் தானங்கள் மட்டுமல்ல, அவை ரத்தம் வடியும் கதைகள். அவற்றைத் தானங்களாக அனைத்துலக சமூகத்திடம் கொடுப்பதை விடவும் அந்த ஒவ்வொரு தானத்துக்குள்ளும் இருக்கும் கதைகளை கலைப் படைப்புக்களாக வெளியே கொண்டு வந்தால் அது உணர்வுபூர்வமாக உரையாடும் உலக சமூகத்தின் மனசாட்சியை உலுப்பும்.

தமக்கு நடந்தது இன அழிப்பு என்று கூறும் ஈழத் தமிழர்கள் அந்த இன அழிப்பை நிரூபிக்கும் உலகத்த தரத்திலான எத்தனை திரைப்படங்களை இதுவரை தயாரித்திருக்கிறார்கள்? அந்தக் கதைகளை திரைப்படமாக்கலாம் கதையாக்கலாம் கவிதையாக்கலாம் ஓவியம் ஆக்கலாம் நாடகமாக்கலாம். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள காணொளிப் பிரபல்யங்கள் குறைந்தபட்சம் வாரம் ஒரு கதையை யாவது வெளியே கொண்டு வரலாம். அந்தக் கதைகளுக்கு அரசியல் பெறுமதியும் உண்டு. சமகாலப் பெறுமதியும் உண்டுசந்தைப் பெறுமதியும் உண்டு. ஆனால் எத்தனை யுரியூப்பர்கள் அவற்றைக் கதையாக்குகிறார்கள்?

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் ஹெரிடேஜ் ஹோட்டலுக்கு அருகே ஓர் ஆவணக் காப்பகம் உண்டு ஸ்ரீலங்காவின் சமகால கலை, கட்டிடக்கலை, வடிவமைப்பு என்பவற்றுக்கான காப்பகம் என்று அழைக்கப்படுகின்ற அந்த கட்டிடத்தில் நிரந்தரமாக ஓர் ஓவியக் காட்சியகம் கடந்த பல மாதங்களாக இயங்கி வருகிறது. கிட்டத்தட்ட 30 ஆண்டு காலப் பகுதிக்குள் வெவ்வேறு தலைமுறைகளை சேர்ந்த தமிழ் ஓவியர்கள் வரைந்த ஓவியங்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் ஒரே ஒரு நிரந்தர ஓவியக் காட்சியகம் அது.குடா நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள் குறிப்பாக ராஜதந்திரிகள் அந்த காட்சியகத்துக்கு வருகிறார்கள்.

அண்மையில் பிரிட்டிஷ் தூதுவர் அங்கே போயிருந்தார். அங்குள்ள மூன்று தலைமுறை ஓவியங்களில் பெரும்பாலானவை இன முரண்பாடுகளோடு தொடர்புடையவை. புள்ளி விபரங்களைவிட அந்த ஓவியங்கள் உணர்வுபூர்வமாக உரையாடுகின் றன. இதுபோல வெளிநாட்டவருக்கு தமது கண்ணீர்க் கதைகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் எத்தனை ஏற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு? அண்மையில் தென்னிலங்கையில் உள்ள பிரபல்யமான அதே சமயம் தமிழ் மக்களுக்கு நெருக்கமான திரைப்பட நெறியாளர் பிரசன்ன விதானகே யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். செம்மணி தொடர்பாக அவர் ஒரு திரைப்படத்தைத் தயாரிக்க இருப்பதாக தகவல். அதற்கு நிதி உதவி செய்வது யார் தெரியுமா? ஒரு சிங்களப் பெண்மணியாம். செம்மணியில் அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளின் ஒளிப்படங்கள் காணொளிகளைக் கண்டு அந்தப் பெண்மணி, அது தொடர்பான ஒரு திரைப்படத்தை தயாரிக்குமாறு பிரசன்ன விதானகேயை கேட்டதாக ஒரு தகவல்.

புதைகுழிகள் தொடர்பாக படங்களைத் தயாரிக்குமாறு பிரசன்ன விதானகே போன்ற சிங்கள நண்பர்களையும் தமிழ்த் திரைக் கலைஞர்களையும், முதலீட்டாளர்களையும் ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு. கோடம்பாக்கத்தின் வணிக சினிமா தொழில்துறைக்குள் கோடிக்கணக்கில் முதலீடு செய்யும் தமிழ் முதலாளிகள் இந்த விடயத்தில் தமது காசில் ஒரு கொஞ்சத்தை யாவது நீதிக்கான போராட்டத்தின் பக்கம் ஏன் திருப்பக்கூடாது? சோமிதரனின் நீளிரா படத்துக்கு இந்தியரான கார்த்திக் சுப்புராஜ் முதலீடு செய்திருக்கிறார்.

ஒரு சிங்களப் பெண் ஒரு பிரபல இயக்குனரை அணுகி செம்மணி தொடர்பாக ஒரு படத்தைத் தயாரிக்குமாறு கேட்கிறார். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதையை கலையாக்க வேண்டிய பொறுப்பு யாருடையது? அதற்கு நிதி உதவி செய்ய வேண்டியது யார்?

நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் பொருத்தமான விதங்களில் முன்னேறியது போதாது என்பதற்கு இது ஒரு சான்று. தமது துயரக் கதைகளை இப்பொழுதும் புள்ளி விபரங்களாக முன்வைக்கும் தமிழ் மக்கள் அதையே கலையாக்கம் செய்தால் அது உலக சமூகத்தின் அபிப்பிராயத்தை நொதிக்கச் செய்யும்.

நீதிக்கான போராட்டத்தில் இதுவரையிலும் 200க்கும் குறையாத தாய்மார்கள் தந்தைமார்கள் முதுமையினாலும், நோய்களினாலும்.நீதி கிடைக்காது என்ற விரக்தியாலும் ஏக்கத்தினாலும் இறந்து போய் விட்டார்கள். அவர்கள் மட்டும் இறக்கவில்லை. அவர்களோடு சேர்ந்து பல கதைகளும் இறந்து போய்விட்டன.

தனது பிள்ளையின் படத்தை ஏந்திக் கொண்டு கண்ணீரோடு நிற்கும் கடைசித் தாயும் இறந்து போய் விட்டால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் படிப்படியாகக் கூர்மையிழந்து விடும் என்று அரசாங்கம் நம்பக்கூடும்.

அதேசமயம் தன் பிள்ளையின் ஒளிப்படத்தை ஏந்தி கொண்டு ஒரு தாயாவது தெருவில் நிற்கும் வரை, இலங்கைதீவில் சமாதானம் ஏற்பட்டு விட்டது. நல்லிணக்கம் பிறந்து விட்டது,இனவாதம் இறந்து விட்டது என்று யாரும் வகுப்பெடுக்க முடியாது.

## காணாமல் போனவர்கள் காணாமல் போனவர்களே!

(21ம் பக்கத் தொடர்ச்சி) நாங்கள் காத்திருக்கிறோம், காத்திருப்போம். நவீன தொழில்நுட்பங்களின் மூலம் நிலப்பரப்பிலிருந்தோ அல்லது வான்வழியிலிருந்தோ பெரிய அளவிலான மனிதப் புதைகுழிகளை ஒரு குறிப்பிட்ட எல்லை வரை கண்டறிய முடியும்.

காணாமல் போனோர் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் மீது எவ்விதத் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில், அரசு இதைச் செய்யத் தயங்கினால், புலம்பெயர் மக்கள் இதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்கி ஒரு திட்டமாக மேற்கொள்ளலாம். இந்த ஆணைக்குழுவின் அறிக்கை பின்பற்றப்படாவிட்டால், அது அந்த முயற்சியையே வீணடிப்பதற்குச் சமம்.

வந்தாறுமூலையில் காணாமல் போனவர்கள் தொடர்பாகப் பல ஆவணங்கள், நேர்காணல்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் கூடத் தொகுக்கப்பட்டுள்ளதை நான் அறிவேன். தங்களின் தவறு அல்லது குற்றம் என்னவென்று கூறுவதற்குக் கூட சந்தர்ப்பம் வழங்கப்படாமல் காணாமல் போனவர்களுக்கு, இது ஒரு அடையாளச் சின்னமாக உயர்த்தப்பட வேண்டும்.

மேலும், தங்களுக்குப் பிரியமானவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கையுடனும் துயரத்துடனும் 36 ஆண்டுகளாக வேதனையுடன் பயணித்து வரும் மனிதர் களுக்கு, இந்த நம்பமுடியாத நம்பிக்கைப் பயணம் ஒரு ஆறுதலாக அமை யும்.

`யார் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் உண்மை என்றாவது ஒரு நாள் வெளிவந்தே தீரும், அது வரலாற்றையே மாற்றியமைக்கும்` என்ற ஆழமான நம்பிக்கை தான், காலப்போக்கில் தேசங்களின் துயரங்களுக்குக் காரணமாக அமைகிறது. தங்களுக்குப் பிரியமானவர்களைத் தேடுவதில் மகத்தான தைரியத்தை வெளிப்படுத்தி, மேலும் காத்திருக்கத் தயாராக இருக்கும் அனைவருக்கும், அவர்களின் துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் என் வணக்கங்கள்.

அவர்களின் துயரைப் பகிர்ந்து கொள்ள நான் இன்னும் எவ்வளவு காலம் இருப்பேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் தலை முறைகள் கடந்தும் என் வாழ்த்துகள் என்றும் நிலைத்திருக்கும்.

பேராசிரியர் ஜெயசிங்கம் 1990 செப்டெம்பர் 5 வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்ழகத்தில் இருந்த அகதி முகாமின் பொறுப்பதிகாரியாக பணியாற்றியவர் )

# இது ஒருவரை வீழ்த்தும் அரசியல் அல்ல!
# ஒரு நாட்டை புனிதமாகக் கட்டியெழுப்பும் அரசியல்!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இன்று ஒரு புதிய அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சிகள் மாறியிருக்கின்றன. ஆட்சியாளர்கள் மாறியிருக்கின்றனர். ஆனால் பல தசாப்தங்களாக நாட்டில் ஊடுருவியிருந்த ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், அரசியல் செல்வாக்கு, சட்டத்திற்கு மேலானவர்கள் என்ற மனநிலை மட்டும் அவ்வளவு எளிதில் மாறவில்லை.

அந்தச் சூழலில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னாள் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக விசாரணைகளையும் கைது நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2025 ஆகஸ்ட் 22 அன்று அரசுப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இன்று 2026 செப்டம்பர் 4 அன்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான கொள்முதல் தொடர்பான இலஞ்சக் குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் கைது செய்யப்பட்டு, செப்டம்பர் 18 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் எந்தத் தவறும் செய்யவில்லை என்று மறுத்துள்ளார்.

இங்கு மிக முக்கியமான கேள்வி ஒன்று எழுகிறது. இவை அரசியல் பழிவாங்கல்களா? அல்லது சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் முயற்சிகளா?

அதற்கான பதில் அரசியல் மேடைகளில் அல்ல. நீதிமன்றங்களில் தான் இறுதியாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு விடயத்தை மட்டும் தெளிவாகச் சொல்ல முடியும்.

குற்றம் செய்தவர் யார் என்பதை விட, சட்டத்தின் முன் அவர் யார் என்பதே முக்கியம். எந்த அரசாங்கமாக இருந்தாலும் அதன் நடவடிக்கைகளை எதிர்க்கட்சி கள் கேள்வி கேட்பது ஜனநாயகத்தின் இயல்பு.

கைது செய்யப்பட்டவர்கள் அரசியல் பழிவாங்கலுக்கு இலக்காக்கப்படுகிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் கூறலாம். விசாரணைகள் பாரபட்சமாக நடைபெறுகின்றன என்று வாதிடலாம். அரசாங்கம் சட்டத்தை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகிறது என்றும் குற்றம் சாட்டலாம். அத்தகைய கேள்விகள் எழுப்பப்படுவதில் தவறில்லை.

ஆனால் அதே அளவு முக்கியமான மற்றொரு கேள்வியும் இருக்கிறது: ஒருவர் முன்னாள் ஜனாதிபதியாக இருந்ததற்காகவோ, முன்னாள் அமைச்சராக இருந்ததற்காகவோ, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததற்காகவோ, அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்ததற்காகவோ சட்டத்தின் விசாரணையிலிருந்து விலக்கு வழங்கப்பட வேண்டுமா?

நிச்சயமாக இல்லை.

ஜனநாயகத்தின் உண்மையான அழகு என்னவென்றால், அதிகாரத்தில் இருப்பவனுக்கும் அதிகாரத்தை இழந்தவனுக்கும் ஒரே சட்டம் இருப்பது தான்.

இலங்கைக்கு இன்றைய சூழலில் சிங்கப்பூரின் அனுபவம் ஒரு முக்கியமான பாடமாக இருக்கிறது.

சிங்கப்பூர் ஒரே நாளில் ஊழலற்ற நாடாக மாறவில்லை. அங்கு ஊழல் ஒரு காலத்தில் பரவலாக இருந்தது. 1959இல் லீ குவான் யூ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது, ஊழலை ஒழிப்பது அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக மாற்றப்பட்டது. பின்னர் 1960ஆம் ஆண்டு Prevention of Corruption Act கொண்டு வரப்பட்டு, விசாரணை அமைப்புகளுக்கும் வலுவான சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படைக் கொள்கை எளிமையானது:

சிங்கப்பூரின் CPIB அரசுத்துறையிலும் தனியார் துறையிலும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கிறது. அந்த அமைப்பின் அதிகாரப்பூர்வ விளக்கத்தின்படி ஒருவரின் பதவி, அரசியல் தொடர்பு அல்லது அந்தஸ்து விசாரணையிலிருந்து அவருக்கு விலக்கு அளிக்காது.



மேலும், ஊழலால் பெற்றதாக நிரூபிக்கப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கும் சிங்கப்பூர் சட்டம் வழிவகுக்கிறது. இதுதான் முக்கியமான பாடம். ஊழல்வாதியை கைது செய்வது மட்டும் போதாது. ஊழலுக்கான பாதையை மூட வேண்டும். சட்டம் ஒரு வாளாக அல்ல ஒரு தராசாக இருக்க வேண்டும்

இலங்கையும் இதிலிருந்து ஒரு பெரிய பாடத்தைப் பெற வேண்டும். ஊழலை ஒழிப்பது என்ற பெயரில் அரசியல் எதிரிகளைத் தேர்ந்தெடுத்து கைது செய்வது ஒரு நாட்டைக் காப்பாற்றாது. அதே நேரத்தில், அரசியல் செல்வாக்கு உள்ளவர்களைத் தொட கூடாது என்ற பழைய பண்பாட்டைத் தொடர்வதும் நாட்டைக் காப்பாற்றாது.

ஆகவே தேவைப்படுவது தேர்ந்தெடுத்த பழிவாங்கல் அல்ல. தேர்ந்தெடுக்காத சட்டம். அரசியல் வேட்டை அல்ல. ஆதாரத்தின் அடிப்படையிலான விசாரணை.

ஒருவர் குற்றவாளி என்றால் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். குற்றமற்றவர் என்றால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும். இது தான் நாகரிகமான அரசின் அடையாளம். அவர் எங்கள் ஆள் என்ற அரசியல் முடிவுக்கு வர வேண்டும் இலங்கையின் அரசியல் கலாச்சாரத்தை பல ஆண்டுகளாகப் பின்தொடர்ந்த ஒரு நோய் இருக்கிறது.

அவர் எங்கள் கட்சிக்காரர்.'' அவர் எங்கள் தலைவர்.'' அவர் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்.'' அவர் எங்கள் அரசாங்கத்தில் இருந்தவர்.'' என்று சொல்லி குற்றச்சாட்டுகளைப் பார்க்கும் பழக்கம். இந்த மனநிலை மாறாமல் எந்த ஊழல் எதிர்ப்பு இயக்கமும் வெற்றிபெறாது.

நாட்டை அழிப்பது ஒரு ஊழல்வாதியின் தனிப்பட்ட பேராசை மட்டுமல்ல. அந்த ஊழல்வாதியைப் பாதுகாக்கும் சமூக மனநிலையும் நாட்டை அழிக்கிறது.


கைது எண்ணிக்கையால் மட்டும் நாடு தூய்மையாகாது. எனினும் இங்கே ஒரு முக்கியமான எச்சரிக்கையும் அவசியம். பலரை கைது செய்து விட்டோம் என்பதாலேயே ஒரு நாடு தூய்மையாகி விடாது. கைது என்பது தொடக்கம் மட்டுமே.

அதன் பின்னர் சுதந்திரமான விசாரணை, ஆதாரங்களைச் சேகரித்தல், விரைவானதும் நியாய மானதுமான நீதிமுறை, சட்டவிரோதமாகப் பெற்ற சொத்துக்களை மீட்டெடுத்தல், அரச நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மை, அரச கொள்முதல் முறைகளில் கண்காணிப்பு, அரசியல்வாதிகளின் சொத்து அறிவிப்புகளில் நேர்மை, அதிகாரிகளுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும்.

சிங்கப்பூரின் அனுபவமும் இதையே காட்டுகிறது: கடுமையான சட்டம் மட்டுமல்ல. அரசியல் மன உறுதி யும் ஒன்றாகச் செயல்பட வேண்டும்.

இலங்கைக்கு இன்று தேவைப்படுவது புதிய அரசியல் பண்பாடு. அநுர அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பவர்கள் கூட ஒரு விடயத்தை மறக்கக் கூடாது.

அரசாங்கத்தை ஆதரிப்பது வேறு, சட்டத்தின் ஆட்சியை ஆதரிப்பது வேறு.



இன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டால் மகிழ்ச்சி அடைந்து, நாளை தமது கட்சியைச் சேர்ந்த ஒருவர் மீது விசாரணை வந்தால் அதை அரசியல் பழிவாங்கல் என்று கூறினால், அது ஊழல் எதிர்ப்பு அரசியல் அல்ல.

அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?'' என்ற கேள்விக்குப் பதிலாக அவர்மீது உள்ள ஆதாரம் என்ன? என்று மக்கள் கேட்கத் தொடங்கும் நாளில், அந்த நாள் இலங்கையின் அரசியல் முதிர்ச்சியின் நாள்.

எனவே ரணில் விக்கிரமசிங்கவாக இருந்தாலும், நாமல் ராஜபக்ஷவாக இருந்தாலும், வேறு எந்த அரசியல் வாதியாக இருந்தாலும் அவர்கள்மீது உள்ள குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தின் முன் ஆதாரத்துடன் பரிசோதிக்கப்பட வேண்டும்.

ஒருவரை கைது செய்வதிலோ, சிறையில் அடைப்பதிலோ அரசின் வெற்றி இல்லை. ஊழல் செய்ய நினைப்பவருக்கு என்னுடைய பதவி என்னைக் காப்பாற்றாது என்ற அச்சத்தை உருவாக்குவதில் தான் அரசின் உண்மையான வெற்றி இருக்கிறது.

சிங்கப்பூர் இதை நீண்ட காலத்திற்கு முன்பே புரிந்து கொண்டது. அதன் அதிகாரப்பூர்வ வரலாற்றுப் பதிவுகளும், ஊழலைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட வேண்டிய ஒன்று என்றும், ஒரு சுத்தமான அமைப்பு தானாக உருவாகி விடாது என்றும் வலியுறுத்துகின்றன.

இலங்கை இன்று ஒரு முக்கியமான சந்திப்பில் நிற்கிறது. ஒருபுறம் பழைய அரசியல் பண்பாடு: அதிகாரம் செல்வம் செல்வாக்கு பாதுகாப்பு.

மறுபுறம் உருவாக வேண்டிய புதிய அரசியல் பண்பாடு சட்டம் நேர்மை பொறுப்புக்கூறல் வெளிப்படைத் தன்மை.

இந்த மாற்றத்தை ஒரே அரசாங்கத்தால் மட்டும் உருவாக்க முடியாது. அரசியல்வாதிகளும் மாற வேண்டும். அரச அதிகாரிகளும் மாற வேண்டும். நீதித்துறையும் வலுப்பெற வேண்டும். ஊடகங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் இலங்கை உண்மையில் மாறும்.

எனவே இன்று நடைபெறும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை யாரை வீழ்த்துகிறார்கள்? என்ற குறுகிய அரசியல் கண்ணாடியால் மட்டும் பார்க்காமல், எப்படிப்பட்ட நாட்டை உருவாக்குகிறார்கள்? என்ற பரந்த கேள்வியுடனும் பார்க்க வேண்டிய நேரம் இது.

ஏனெனில் இது ஒருவரை வீழ்த்தும் அரசியல் அல்ல. இது ஊழலை வீழ்த்தும் அரசியல். இது ஒரு கட்சியை உயர்த்தும் அரசியல் அல்ல. இது சட்டத்தின் மதிப்பை உயர்த்தும் அரசியல்.

இது பழைய அதிகாரக் கோட்டைகளைப் பாதுகாக்கும் அரசியல் அல்ல. இது ஒரு நாட்டின் நிர்வாகத்தைப் புனிதப்படுத்தும் அரசியல். ஒரு நாட்டை வளமாக்குவதற்கு முன் அதன் ஆட்சியைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

இலங்கைக்கு இன்று தேவைப்படுவது அப்படிப்பட்ட ஒரு நிமிர்ந்த அரசியல். நேர்மை பார்வை கொண்ட அரசியல் தலைவர்.


அநுர தெற்காசியப் பிராந்தியத்தில் அடுத்த லீ குவான் யூ ஆவாரா? பிராந்திய சக்திகளும் வல்லரசுகளும் இடமளிக்குமா? காலம் பதில் சொல்லும் வரை காத்திருப்போம்.

காத்திருப்பு இலங்கையர்களுக்குப்' புதிது அல்லவே.

**- TKP**

# ஈழத்தமிழர் அரசியலில் சர்வதேச அரசியல் புரிதல்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



எந்தவொரு துறை தொடர்பிலும் பேசுவதற்கு அந்தத் துறையில் ஒரு குறிப்பிட்டளவாவது படிப்பு இருப்பது கட்டாயமானது. படிப்பு என்றால் பல்கலைக் கழகத்தில் ஏதோவொரு சான்றிதழை வாங்கி வைத்திருப்பது அல்ல மாறாக எந்தத் துறையில் பேச முற்படுகின்றீர்களோ, அந்தத் துறை தொடர்பில் பரந்த வாசிப்பும், அதனடிப்படையிலான சிந்திப்பும் அவசியம். இதனை புரிந்து கொள்வதில் எவருக்கும் பிரச்சினையிருக்கப் போவதில்லை.

உதாரணமாக ஒரு வைத்தியர், வைத்தியத் துறை தொடர்பில் கூறும் போது, அனைவரும் வாய்களை மூடி காதுகளை திறந்து வைத்திருப்பர் ஏனெனில் வைத்தியருக்குத் தானே வைத்தியத்தை பற்றித் தெரியும். அதே போன்று, சட்டம், பொறியியல், கணக்கியல் என்று தமிழர்களுக்கு தெரிந்த அனைத்து துறைகளிலும், அவர்கள் படித்தவர்களாகவும், அவர்கள் கூறினால் சரியாகத் தானே இருக்கும் என்னும் புரிதல் உண்டு.

ஆனால் இதில் உள்ள பெரிய முரண்பாடும் நகைச்சுவையும் என்னவென்றால் அரசியல் என்று வருகின்ற போது மட்டும், அதைப் பற்றி எவரும் போதிக்கலாம் – அதற்கு படிப்போ தகுதியோ தேவைப்படுவதில்லை. அதிலும் தமிழ்ச் சூழலில் சர்வதேச அரசியல் பற்றிப் பேசுவதை கேட்கின்ற போது, அதனை சகித்துக் கொள்ள முடிவதில்லை ஏனெனில் தமிழ்ச் சுழலில் கவிஞர்கள், சிறுகதை எழுத்தாளர்கள் தொடக்கம் சட்டத்தரணிகள், வைத்தியர்கள் அடங்கலாக, பிரதேச சபை உறுப்பினர்கள் வரையில் சர்வதேச அரசியல் பற்றி சாதாரணமாக பேசுவதை காண முடிகின்றது. ஆகக் குறைந்தது ஒன்றைப் பற்றி பேசுவதற்கு முன்னர், அது பற்றிப் பேசுவதற்கு தங்களின் தகுதிநிலை என்ன என்பது பற்றி அவர்கள் எவருமே சிந்திப்பதில்லை.

தமிழரசியல் இந்தளவு சீரழிந்து சின்னாபின்னமாகிப் போனமைக்கான, அடிப்படையான காரணத்தை இங்கிருந்து தான் ஒருவர் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

உண்மை என்ன? தமிழர்கள் மத்தியில் இதுவரையில் தங்களை தலைவர்களாக காண்பித்த எவருமே, சர்வதேச அரசியல் பற்றிய போதிய புரிதலைக் கொண்டிருந்தவர்கள் அல்லர். ஒரு வேளை சர்வதேச அரசியல் புரிதலுள்ள தலைவர்கள் எவரேனும், தமிழர்கள் மத்தியில் இருந்திருந்தால், ஈழத் தமிழர்களின் அரசியல் இந்தளவிற்கு கோவண நிலைக்குச் சென்றிருக்காது.

இறுதிவரையில் வசனங்களை பேசிக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் அமைப்பு, அதன் இறுதி நாட்கள் எண்ணிக் கொண்டிருந்த போது தான், இந்தியாவை நோக்கி கோரிக்கையை முன் வைத்தார். இதனை நீங்கள் ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவினால் தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்னும் நிலைமையை முன்னரே உணர்ந்து, அதற்கேற்ப அல்லவா, பாலசிங்கம் செயற்பட்டிருக்க வேண்டும். எல்லாம் முடியும் நிலையில் மன்றாடுவதில் என்ன பயன்?

இரண்டாம் உலகப் போருக்கு பின்னரான உலக ஒழுங்கு என்பது, அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் என்னும் இரண்டு பெரிய வல்லரசுகளுக்கு இடையிலான போட்டிக் களமாகும். 1989 இறுதியில் சோவியத் யூனியன் உடையும் வரையில் இந்த நிலைமையே நீடித்தது. சர்வதேச அரசியலில் இதனைத் தான் பனிப் போர் காலம் என்று வரையறுக்கின்றனர். பனிப் போர் என்பது யுத்தம் அல்ல மாறாக, எவ்வேளையிலும், ஒரு பெரும் யுத்தம் ஏற்படலாம், என்னும் அச்சத்திற்குள் உலகம் சிக்கியிருந்த காலமாகும். அது தான் பனிப் போர்.

இந்தக் காலத்தில் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, அணிசேராக் கொள்கைக்கு தலைமை தாங்கினார். அணிசேராக் கொள்கை என்பது, இந்த இரண்டு பெரிய சக்திகளின் போட்டிக்குள்ளும் நாங்கள் வரவில்லை நாங்கள் இரண்டு பேருடனும் நட்பில் இருப்போம் ஆனால்




இரண்டு பேரின் அரசியல் ஆட்டங்களுக்குள் வர மாட்டோம் என்னும் நிலைப்பாடாகும்.

இந்தியா அவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுத்த போது, அதனுடன் ஒத்துழைக்கும் வகையில் இலங்கையும் அணிசேராக் கொள்கையை ஆதரித்தது. இந்த அடிப்படையில் ஆசியாவில் நிலை கொண்டிருந்த பரித்தானியப் படைத் தளங்களை அகற்றுமாறு நேரு கோரிக்கை முன் வைத்தார்.

இதனை அனுசரித்து இலங்கையிலுள்ள பிரித்தானிய படைத்தளங்களை அகற்றுமாறு அப்போதைய, பிரதமராக இருந்த பண்டாரநாயக்க அறிவித்தார். இந்தக் கோரிக்கைக்கு அமைவாகவே கொழும்பு மற்றும் திருகோணமலையிலிருந்து பிரித்தானிய படைத்தளங்கள் அகற்றப்பட்டன. ஆனால் அப்போது தமிழ் மக்களின் தலைவராக இருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரித்தானிய படைத்தளங்களை அகற்றுவதை எதிர்த்தார்.

பண்டாரநாயக்க அன்றைய உலக அரசியல் நிலைமைக்கு அமைவாக, அண்டை நாடான இந்தியாவுடன் இணைந்து கோரிக்கை முன்வைக்கும் போது செல்வநாயகமோ அதற்கு மாறாக சிந்தித்திருக்கின்றார். இது செல்வநாயகம் போன்றவர்கள் அந்தக் காலத்தில் சர்வதேச அரசியல் தொடர்பில் எந்தளவிற்கு புரிதலற்றவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். செல்வநாயகத்தின் நிலைமையே, இப்படியென்றால், அவரைப் பின்தொடர்ந்தவர்கள் பற்றி பேசுவதற்கு என்ன இருக்கின்றது?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாசறையில் தோன்றியவர்கள் மத்தியில், அமிர்தலிங்கத்திடம் இந்தியா தொடர்பில் தெளிவான புரிதல் இருந்தமைக்கு சான்றுகள் இருந்த போதிலும் கூட, அவர் அரசியலை தீர்மானிக்க முற்பட்ட காலத்தில், ஈழத் தமிழர் அரசியல் ஆயுத இயக்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்று விட்டது. இதன் விளைவாகவே அமிர்தலிங்கம் கொல்லப்பட்டார். அன்றைய சூழலில் ஆயுத இயக்கங்களின் தலைவர்களாக இருந்தவர்களில் பலர், பனிப்போர் கால அமெரிக்க எதிர்ப்பு அரசியலால் ஈர்க்கப்பட்டவர்கள். இந்த அடிப்படையில் தான் தங்களை அவர்கள் இடதுசாரிகளாகவும் எண்ணிக் கொண்டனர். இதற்கு சிறந்த உதாரணம் ஈழ இயக்கங்களின் பாலஸ்தீன ஆதரவாகும். இவர்கள், பாலஸ்தீன ஆயுதக் குழுவிடமிருந்து பயிற்சி பெற்றமைதான் இதற்கான காரணமாகும். ஏன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் இவர்களுக்கு பயிற்சி வழங்கியது? அப்போது, பாலஸ்தீன விடுதலை அமைப்பின் இராணுவத் தளபதியும் அரபாத்தின் வலது கையாகவும் இருந்த அபு-ஜிகாத் என்பர் இதற்கான பதிலைக் கூறியிருக்கின்றார் – நாங்கள் ஏகாதிபத்திய (அமெரிக்க) எதிர்ப்பு நீர்குமிழிகளை உருவாக்கி விட முயற்சிக்கின்றோம் அதற்காகவே உங்களுக்கு பயிற்சியளிக்கின்றோம். புலிகள் மற்றும் டெலோ அமைப்பு இவ்வாறான சித்தாந்த விவாதங்களுக்குள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

குறிப்பாக விடுதலைப் புலிகள் பிற்காலத்தில் இந்திய எதிர்ப்பு அரசியலின் முகமாகவே தங்களை வெளிப்படுத்தினர். இன்றும் பதில் கண்டடைய முடியாமல் இருக்கும் ஒரு கேள்வி ஒரு சிறிய இயக்கத்தின் தலைவராக இருந்த பிரபாகரன், எந்த அடிப்படையில் ஒரு பிராந்திய சக்தியான இந்தியாவை விரோதித்துக் கொள்ள முற்பட்டார்?

அன்றைய சூழலில் அரசியல் சிக்கல்களை ஆழமாக புரிந்து கொள்ளும் ஆற்றலோ, அதற்கான பின்னணியோ இல்லாத ஒருவரால், எவ்வாறு அவ்வாறானதொரு பாரதூரமான முடிவை எடுக்க முடிந்தது? அவர் தானாகவே அவ்வாறு சிந்தித்தாரா அல்லது யாரோ ஒருவருடைய அல்லது சிலருடைய தவறான அறிவுரைகளால் அப்படியான புரிதலை நோக்கித் தள்ளப்பட்டாரா? ஏனைய இயங்கங்களின் தலைவர்கள் அனைவருமே, இந்தியாவை நேரடியாக பகைத்துக் கொண்டு, அதிக தூரம் பயணிக்க முடியாது என்று எண்ணிய போது, பிரபாகரன் எவ்வாறு அப்படியான கடினமான தீர்மானமொன்றை மேற்கொண்டார்? இறுதியில் அந்த இந்திய எதிர்ப்பு ராஜீவ் கொலையில் முடிவுற்றது.

புளொட் இயக்கம் இதற்கு இன்னொரு சிறந்த உதாரணமாகும். இந்தியாவில் தங்கியிருப்பதற்கு பதிலாக எங்களுக்கென்று, தனியானதொரு, பின் தளத்தை, உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்னுமடிப்படையில் தான், மாலைதீவு சதிப்புரட்சியில் உமாமகேஸ்வரன் ஈடுபட்டார். அதனை இந்தியாவே தடுத்து நிறுத்தி அனைவரையும் கைது செய்தது. இந்தியா போன்றதொரு பிராந்திய சக்திக்கு அருகில், அரசல்லாத அமைப்புக்கள் அதிக தூரம் பயணிக்க முடியாது என்பதற்கு இது இன்னொரு சிறந்த உதாரணமாகும்.

அப்போது, பேச்சுவார்த்தைக்குச் சென்ற புளொட் தலைவர்களிடம், இந்திய ராஜதந்திரி ஒருவர் இப்படிக் கூறியிருக்கின்றார். அதாவது, நீங்கள் மாலைதீவை பிடிக்க முற்படுவீர்கள், நாளைக்கு நேபாளத்திற்கும் செல்வீர்கள் நாங்கள் அதையெல்லாம் பார்த்துக் கொண்டு அமைதியாக இருப்போம் என்றா நினைத்தீர்கள்? சேட்டையா விடுகின்றீர்கள்?

ஆனால் இந்திய ஆதரவு தரப்புக்கள் அனைத்தையுமே விடுதலைப் புலிகள் தான் அழித்தனர், பலவீனப்படுத்தினர் என்பது உண்மை. இதனை, சிலர் அமெரிக்க உளவுத்துறையோடு இணைத்து முடிச்சுப் போட முற்பட்டாலும் கூட, அதனை தர்க்கரீதியில் விவாதிக்க முடியாதுள்ளது. ஆனால் அன்றைய பனிப்போர் கால அரசியலின் காரணமாக, றோவின் நகர்வுகளை, அமெரிக்க உளவுத் துறையான சி.ஜ.ஏ இலக்கு வைத்தது என்பது உண்மை தான். அப்போது, இந்திய உளவுத்துறையான றோவின் சென்னை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரியான, உண்ணி கிருஸ்ணன் என்பவர், விமானப் பணிப் பெண் ஒருவரது தேன் பொறிக்குள் வீழ்ந்து, இரகசியங்களை கசிய விட்டமை, பிரபலமான சான்றாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் தான், குறிப்பாக அன்ரன் பாலசிங்கம் அமெரிக்க உளவுத்துறையின் முகவராக இருந்திருக்கலாம் என்று, சிலர் கூறுவதுண்டு. அதிலும் அருடைய இரண்டாவது மனைவியான ஆஸ்திரேலியரான அடெல் ஆன் என்பவர் யார்? அவர் எந்த அடிப்படையில் புலிகளின் சீருடையில் காட்சியளித்தார்? இப்படிக் கேட்போர் உண்டு? முகநூல்களில் இப்படியான உரையாடல்கள் இப்போதும் கூட, அதன் கவர்சியை இழக்கவில்லை. ஆனால் சதிக்கோட்பாடுகளின் வழியாக நான் பொதுவாக விடயங்களை நோக்குவதில்லை. ஆனால் இன்னொரு சுவார்சியமான தகவலும் உண்டு.

அதாவது, நீலன் திருச்செல்வம் விடுதலைப் புலகளின் தற்கொலைத் தாக்குதலிலேயே கொல்லப்பட்டார். அப்போது, அவர் ஒரு சி.ஜ.ஏ முகவராக இருந்த நிலையில் தான் கொல்லப்பட்டார் என்றும் கூறப்பட்டது. அதனைக் கூறியவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தந்தை, குமார் பொன்னம்பலம் ஆவார்.

அதே வேளை, நீலன் திருச்செல்வத்தினால்(18ம் பக்கம் பார்க்க)

# அம்மாக்களும் கட்சிகளும்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நாள் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம்,தந்தை செல்வா கலையரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அந்நாள் இம்முறை ஒரு சர்வதேச மாநாடாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவரக்ள் கலந்து கொண்டார்கள்.

வெளி மாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களும்,அரசியல் செயற்பாட்டாளர்களும்,சிவில் சமூகத்தவர்களும் வந்திருந்தார்கள். அனைத்துலக சமூகத்தின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். ஐநாவின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அல்லது தன்னிச்சையான கடத்தல்கள் தொடர்பான சிறப்புப் பணிக்குழுவின் (UN WGEID) ஐந்து சுயாதீன நிபுணர்களில் ஒருவரான மெக்சிகோவைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணியான எம்எஸ். அனா லோரெனா டெல்காடிலோ பெரெஸ் (Ms. Ana Lorena Delgadillo Pérez) வந்திருந்தார். சர்வதேச மன்னிப்பு சபையின் தென்னாசிய பிராந்தியப் பொறுப்பாளரான ஸ்மிருதி சிங் வந்திருந்தார். அமெரிக்க ஒஸ்ரேலிய,சுவிட்சர்லாந்து தூதரகங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள்,சிவில் சமூகத்தவர்கள், கருத்துருவாக்கிகள் வந்திருந்தார்கள்.

மாநாடு தொடங்க முன்பு தமிழாராட்சிப் படுகொலை நினைவுச் சின்னத்திலிருந்து தீப்பந்தம் ஏந்திய மக்களோடு ஒரு வாகன ஊர்தி புறப்பட்டு யாழ் நகரப் பகுதியூடாக நகர்ந்து தந்தை செல்வா கலையரங்கை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் ஒரு பாரம் தூக்கி வாகனத்தில் ஒரு வெள்ளை வான் வைக்கப்பட்டிருந்தது.அந்த வெள்ளை வானின் உடல் முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அது ஓர் அருமையான கற்பனை. அது போலவே மாநாட்டு மண்டபத்தின் அரங்கில் இரண்டு ரத்தம் வடியும் பாதங்கள் வைக்கப்பட்டிருந்தன. பின்னணியில் தமது பிள்ளைகளுக்காகப் போராடி இதுவரை உயிர் நீத்த 200க்கும் குறையாத அம்மாக்கள் அப்பாக்களுடைய ஒளிப்படங்களை அடங்கிய இரண்டு தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

மேடை ஒழுங்கமைப்பும் நிமிர்ந்திருக்கும் இரண்டு பாதங்களும் வெள்ளை வானும் கலைத்துவமாக உருவாக்கப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் எதிர்ப்பை நீதிக்கான கோரிக்கையை கலாபூர்வமாக வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவை காட்டின. அதேபோல மாநாட்டில் பேசிய பாதிக்கப்பட்ட அம்மாக்களின் அறிக்கைகளும் நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டவைகளாக காணப்பட்டன. அங்கேயும் வார்த்தைகள் கலாபூர்வமாக கையாளப்பட்டிருந்தன.

வெளிநாட்டு பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். உள்நாட்டு மக்கள் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். அரசியல் ஆய்வாளர் ஒருவரும் உரையாற்றினார். அம்மாக்கள் மத்தியில் இருந்தும் பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். தமிழ் மக்கள் சார்பில் உரையாற்றிய அனைவருமே அனைத்துலக விசாரணையை கேட்டார்கள். யாருமே உள்நாட்டு விசாரணை பொறிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

அனைத்துலக பிரதிநிதிகளில் குறிப்பாக ஐநாவின் ராஜதந்திரி ஆகிய அனா லொரீனா உரையாற்றும் போது, விடுதலைப்புலிகள் இயக்கத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். சர்வதேசத் தரநிலைகளுக்கு ஏற்ப அவை முறையாக விசாரிக்கப்பட்டு,உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

வெளிநாட்டு பிரதிநிதிகளின் உரைகளுக்கு மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது. இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. மாநாடு முடிந்த பின் மண்டபத்தின் ஒரு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய நினைவு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அனைத்துலக நாள் ஒன்றை அனைத்துலக மாநாடாக ஒழுங்குபடுத்தியமை என்பது முக்கியமானது. அதுவும் பெருமளவுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் பங்கு பற்றிய ஒரு மாநாட்டில் அனைத்துலகப் பிரதிநிதிகளைப் பேச வைத்தமை முக்கியமானது. அந்த



அனைத்துலகப் பிரதிநிதிகளின் முன்னிலையில் தமிழ் மக்கள் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையைத்தான் கேட்கின்றார்கள் என்பது உரத்துச் சொல்லப்பட்டதும் முக்கியமானது. அந்த மாநாட்டுக்கு பெரும்பாலான கட்சிப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிறீதரனும் இரண்டு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் பதில் செயலாளரும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். அம்மாக்கள் கூறுகிறார்கள், தாங்கள் கட்சியின் பதில் தலைவருக்கு அழைப்பைக் கொடுத்ததாக.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு ஓர் அனைத்துலக மாநாடு நடைபெற்ற அதே காலப்பகுதியில் கிளிநொச்சியில் மற்றொரு நிகழ்வு நடந்தது. அது சிறிய அளவில் நடந்தது. அதுவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் நிகழ்வு தான். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கேயும் காணப்பட்டார். அனைத்துலக மன்னிப்புச் சபையின் தென்னாசியப் பிராந்தியப் பொறுப்பாளரும் அங்கே காணப்பட்டார்.கொழும்பில் உள்ள சுவிற்ஸலாந்து தூதரகத்தின் பிரதிநிதி ஒருவரும் அங்கே காணப்பட்டார்.ச ிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் காணப்பட்டார். இவர்கள் அனைவரும் சில அம்மாக்களும் அந்த நிகழ்வு முடிந்த பின் அங்கிருந்து வந்து யாழ்ப்பாணத்து மாநாட்டிலும் கலந்து கொண்டார்கள்.

கிளிநொச்சி மாநாட்டில் ஒருவர் அந்த மாநாட்டைக் குழப்பும் விதமாக கெட்ட வார்த்தைகளை உரத்துப் பேசியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. அவ்வாறு பேசியவர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் சங்கங்களை சேர்ந்த ஒரு பெண்ணுடைய கணவர் என்றும் கூறப்படுகிறது. அவர் அந்த நிகழ்வின் அமைதியைக் குழப்பம் விதத்திலும் அந்த நிகழ்வின் மாண்பைக் குழப்பும் விதத்திலும் நடந்து கொண்டதாகவும் குற்றச்சாட்டு உண்டு. அம்மாக்களின் சங்கங்களுக்கு இடையில் காணப்படும் பிளவையும் முரண்பாடுகளையும் அது பிரதிபலித்தது. அங்கெ நடந்தவற்றை அனைத்துலக மணிப்புச் சபையின் பிரதிநியும், சுவிற்ஸலாந்து தூதரகத்தைச் சேர்ந்த ஒருவரும் சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவரும் பார்த்துக்

இந்த இரண்டு கூட்டங்களுக்கும் ஐந்து நாட்கள் முன்னதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அம்மாக்களின் மீது போலீசார் பலப் பிரயோகத்தை மேற்கொண்டார்கள். அந்தக் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியது அரசாங்கத்தின் ஓஎம்பி என்று அழைக்கப்படுகின்ற காணாமல் போனோருக்கான அலுவலகம் ஆகும். அந்த அலுவலகத்தை அம்மாக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அலுவலகத்தின் நிகழ்வைப் புறக்கணித்து அவர்கள் மாவட்டச் செயலகத்தின் வாசலில் எதிர்ப்புக் காட்டினார்கள்.

அதே சமயம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 362 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஓஎம்பியும் அரசாங்கத்தின்




அமைச்சர்களும் நிவாரணம் வழங்கினார்கள். நிதி உதவிகளைச் செய்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் ஓஎம்பியினால் கையாளப்படுகிறார்கள் என்பதனை அது காட்டியது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பான விடயங்களைக் கையாளும் அமைச்சு மற்றும் ஓஎம்பிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதை அது காட்டியது.

எனவே கடந்த வாரம் நடந்த மூன்று நிகழ்ச்சிகளையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரிவது என்னவென்றால், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக போராடும் அமைப்புகள் மத்தியில் முரண்பாடுகள் உண்டுஅந்த முரண்பாடுகளை வெளிச் சக்திகள் ஊக்குவிக்கின்றன. கையாள முற்படுகின்றன.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

அது மட்டுமில்லை, அம்மூன்று நிகழ்வுகளும் தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளுக்கு உள்ளேயும் கட்சிகளுக்கு வெளியேயும் காணப்படும் முரண்பாடுகளையும் பிரதிபலித்தன. இந்த விடயத்தில் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையேயும் ஒருங்கிணைந்த முடிவுகள் இல்லைத்த ான். ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது எல்லாருக்குமான பொதுக் கொள்கை என்று அடிப்படையில் சிவில் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் முரண்பாடுகளைக் கடந்து அங்கே குழுமியிருந்தார்கள். எனினும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்போட்டியை அந்த நிகழ்வுகள் பிரதிபலித்தன.

கடந்த 17 ஆண்டுகால தமிழ் அரசியலில் உணர்ச்சிகரமான முன்னணிப் போராளிகளாக மேற்படி அம்மாக்கள் தான் காணப்படுகிறார்கள். அம்மாக்களை தமிழ்த் தேசியக் கட்சிகளோ அல்லது தமிழ் சிவில் சமூகங்களோ ஒருங்கிணைக்கவில்லை. மாறாக புலம்பெயர்ந்த தரப்புகளின் உதவிகளோடு அம்மாக்கள் போராடி வருகிறார்கள் .கொழும்பில் உள்ள சில தூதரகங்களும் அம்மாக்களுக்கு ஆதரவாகக் காணப்படுகின்றன.

கடந்த 30ஆம்திகதி நடந்த நிகழ்வுகள் அம்மாக்களின் போராட்டதுக்குள்ள அனைத்துலகப் பரிமாணத்தைப் பிரதிபலித்தன. அதேசமயம், அம்மாக்களுக்கிடையிலான முரண்பாடுகளையும், கட்சிகளுக் கிடையிலான முரண்பாடுகளையும்,கட்சிகளுக்குள் காணப்படும் முரண்பாடுகளையும் பிதிபலித்தன.

# அமிர்தலிங்கத்தின் மரபும் அனைவருக்கும் பொதுவான எதிர்காலத்துக்கான ஜனநாயகத் தெரிவுகளும்

கடந்த நூற்றாண்டில் இலங்கைத் தமிழ் அரசியலின் திசைமார்க்கத்தை தீர்மானித்த அத்தியாயங்களை எழுதிய தலைவர்களில் ஒருவரான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 99வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நினைவுப் பேருரை நிகழ்வு ஒன்று நடைபெற்றது.




அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் முன்னாள் பாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா 'அமிர்தலிங்கத்தின் மரபும் அனைவருக்கும் பொதுவான எதிர் காலத்துக்கான இலங்கையின் ஜனநாயகத் தெரிவுகளும்' (Amirthalingam's Legacy and Sri Lanka's Democratic Choices for A Shared Future) எனும் தொனிப் பொருளில் உரை நிகழ்த்தினார்.

ஜெகான் பெரேராவின் ஆங்கில உரை, வெறுமனே ஒரு அரசியல் தலைவருக்கான அஞ்சலியாகவோ அல்லது கடந்தகால நினைவுகளின் மீள்வாசிப்பாகவோ மாத்திரம் அமையாமல், சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் இனப் பிரச்சினை, ஜனநாயக நிறுவனங்களின் வீழ்ச்சி மற்றும் சமகாலத்தில் நாடு எதிர்கொள்ளும் அரசியலமைப்புச் சவால்களுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு இருக்கக் கூடிய தெரிவுகள் பற்றிய அவரது நோக்கிலான விளக்கமாகவும் ஒரு விதத்தில் எச்சரிக்கையாகவும் அமைந்திருந்தது.

அமிர்தலிங்கத்தைப் பற்றிப் பேசுவது என்பது தனி நபரைப் பற்றியது அல்ல, மாறாக இலங்கையின் மிகவும் இடர்மிகுந்த வரலாற்று அத்தியாயம் ஒன்றைப் பற்றி பேசுவதாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஜெகான் பெரேரா சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து தொடர்ந்து குரல் கொடுத்துவரும் முக்கியமான சிவில் சமூகப் பிரதிநிதியாவார். இனப் பிரச்சினை என்பது வெறுமனே பொருளாதார அல்லது சமூக அபிவிருத்தி சார்ந்த பிரச்சினையல்ல, மாறாக அது அதிகாரப்பகிர்வும் அரசியல் உரிமைகள் மற்றும் அடையாளமும் சார்ந்த பிரச்சினை என்பதில் அவர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர். தென்னிலங்கை பெரும்பான்மை வாதச் சிந்தனைகளைத் தாண்டி தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் தனித்துவமான அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்கும் பன்மைத்துவ ஆட்சி முறையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அவர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குப் புறம்பாக, மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகளின் தீர்வுகளுக்காகவும் அபிலாசைகளுக்காகவும் ஜெகான் பெரேரா தீவிரமாகக் குரல் கொடுத்து வருகிறார்.

அவரின் அணுகுமுறை தென்னிலங்கைச் சமூகத்துக்கும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகச் சமூகங்களுக்கும் இடையில் ஒரு பாலம் போன்ற உரையாடலை உருவாக்கும் நோக்கில் அமைந்திருக்கிறது. தென்னிலங்கையின் தீவிர தேசியவாத எதிர்ம்புகளுக்கு மத்தியிலும், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை அங்கீகரிப்பதே இலங்கையின் நீண்டகால அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஒரே வழி என்பதில் அவர் உறுதியாக நிற்கிறார்.

தென்னிலங்கையில் குறிப்பிடத்தக்க தாராள ஜனநாயகச் சிந்தை கொண்ட (Liberal democrats) அறிவுஜீவிகளில் ஒருவரான ஜெகான் பெரேரா தனது கருத்துக்களை முன்வைக்கும் பாணியிலும் எழுத்து நடையிலும் கடுமையான தொனியைக் காண முடியாது. பிரச்சினைகளை ஆராயும் போது அகவுணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் நிதானமாகக் கருத்துரைப்பது அவரது பண்புகளில் ஒன்று. ஆனால், தனது நிலைப்பாடுகளை தெளிவாகக் கூறிவிடுவார். பிரச்சினைகளில் பங்கும் ஈடுபாடும் கொண்ட தரப்புகளைப் விரோதித்துக் கொள்ளாமல் உண்மைகளைக் கூறுவதில் பெருமளவுக்கு அக்கறை செலுத்தும் அவரது இயல்பு இந்த நினைவுப் பேருரையில் வியாபித்திருந்தது.

அவரது உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு .

வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி, தெற்கிலும் மலையகத்திலும் இழப்புகளையும் வடுக்களையும் சுமந்து நிற்கும் குடும்பங்களின் நினைவாற்றல் (Memory) தகுந்த ஞானமாக (Wisdom) மாற வேண்டும். அந்த நினைவாற்றல் வெறும் மனக்குறையாக மட்டுமே எஞ்சுமாயின் அது மோதலைத் தொடரச் செய்யும். மாறாக ஞானமாக மாறும் போது அது எதிர்கால சந்ததிக்கான பொறுப்பை உருவாக்குகிறது. (அனுபவத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்கு ஒத்த முடிவுகளையும் மதிப்பீடுகளையும் செய்யும் விவேகத்தையும் ஆற்றலையுமே அவர் ஞானம் என்கிறார்) சகவாழ்வு என்பது அரசியலமைப்புச் சட்டங்களில் மட்டும் எழுதப்படும் விதியல்ல. அது நித்திய விழிப்புணர்வுடன் (Eternal Vigilance) பேணப்பட வேண்டிய அன்றாடப் பயிற்சியாகும்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் இலங்கை தமிழரசு கட்சி (சமஷ்டிக் கட்சியை)த் தொடங்கிய போது தலைவர்களின் நோக்கம் நாட்டுப் பிரிவினை அல்ல் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வைப் பெறுவதே நோக்கமாக இருந்தது. ஆனால், பண்டா-செல்வா ஒப்பந்தம் முதல் டட்லி-செல்வா ஒப்பந்தம் வரை அடுத்தடுத்து வந்த சாத்வீகப் போராட்டங்களும் பேச்சுவார்த்தைகளும் தேர்தல் அழுத்தங்களால் முறிவடைந்த போது தமிழ் அரசியலின் நம்பிக்கை சீர்குலைந்தது.

1976 வட்டுக் கோட்டைத் தீர்மானம் என்பது ஒரு திடீர் உணர்ச்சி வசப்பட்ட முடிவோ அல்லது வெற்றிடத்திலிருந்து உருவானதோ அல்ல. அது பல தசாப்த கால அரசியலமைப்பு ஏமாற்றங்களின் திரண்ட வெளிப்பாடாகும். 1977 பொதுத் தேர்தலில் அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி பெற்ற அமோக மக்கள் ஆணை, தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய விரக்தியின் ஜனநாயக வடிவமாகும். பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராகச் செயற்பட்டவாறே, ஒரு நாட்டைப் பிரிப்பதற்கான மக்கள் ஆணையையும் சுமந்திருந்த அமிர்தலிங்கத்தின் நிலைமை, இலங்கை அரசியலின் மிகவும் முரண்பாடான, அதேநேரம் கடினமான ஒரு ஜனநாயகத் தருணமாகும்.

இலங்கையின் மோதல் வரலாற்றுக்கு இருவேறு ஒரு தலைப்பட்ச வாதங்களே (Unilateralisms) காரணம். சிங்களப் பெரும்பான்மைவாதம் பெரும்பான்மைப் பலம் மட்டுமே அரசின் தன்மையை நிர்ணயிக்கலாம் என நம்பியது. தமிழ்ப் பிரிவினைவாதம் தொடர் ஏமாற்றங்களால் தனி அரசு மட்டுமே தீர்வு என நம்பியது.

ஜனநாயகத்திற்கு பெரும்பான்மை ஆட்சி இன்றியமையாதது. ஆனால் அரசு மீதான பெரும்பான்மை உரிமை என்பது முற்றிலும் வேறுபட்டது. தேர்தல்கள் அரசாங்கத்தைத் தீர்மானிக்கலாமே தவிர, யார் இந்த

கட்டுரையாளர்:-
இலங்கையில் இருந்து
- வீ.தனபாலசிங்கம் -



நாட்டிற்கு அதிகமாகச் சொந்தக்காரர் என்பதைத் தீர்மானிக்கக் கூடாது. அத்துடன் 'யார் அரசைக் கட்டுப்படுத்துவது?' என்று கேட்பதை விடுத்து, 'ஒவ்வொரு சமூகமும் எவ்வாறு இந்த அரசில் ஒரு பங்குதாரராக (Shareholder) மாற முடியும்?' என்ற வினாவை எழுப்புவதே பன்மைத்துவ ஜனநாயகத்தை உருவாக்கும்.

13வது திருத்தம் 1987 ஆம் ஆண்டில் இந்தியத் தலையீடு மற்றும் ஆயுத மோதல் சூழலில் பிறந்தது என்பதும் இன்று விடுதலை புலிகள் இயக்கமோ அல்லது அன்றைய புவிசார் அரசியல் அழுத்தங்களோ அதே வடிவில் இல்லை என்பதும் நிதர்சனமாகும். எனினும், தற்போதைய அரசியலமைப்பு முறைமைக்குள் அதிகாரப் பகிர்வுக்குச் சட்டபூர்வத் தன்மையைக் கொண்டுள்ள ஒரே ஏற்பாடு 13வது திருத்தம் மட்டுமே. எனவே அதை நிராகரிப்பது புத்திசாலித்தனமல்ல. அதன் பலவீனங்களைச் சீரமைத்து முழுமையாக நடைமுறைப்படுத்துவதே பொறுப்புணர்வுடைய செயலாக இருக்கும்

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் முடக்கப்பட்டிருக்கிறது. பொலிஸ், காணி அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு மேலும் பலப்படுமே தவிர பலவீனமடையாது. அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளும் தீரும் வரை நல்லிணக்கத்தைக் காத்திருக்க வைக்க முடியாது

1989 ஜீலையில் அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தமிழ்ச் சமூகத்தின் மாற்று ஜனநாயகக் குரல்களையும் இனங்களுக்கு இடையே பாலத்தை அமைப்பவர்களையும் திட்டமிட்டு ஒழித்த கொடூரமான நடவடிக்கையின் ஒரு அங்கமாகும். இத்தகைய தலைவர்களை இழந்ததன் விலையை இலங்கை மீண்டும் மீண்டும் செலுத்தியுள்ளது.

ஜனநாயக அரசியல் என்பது ஒரேயடியாக இறுதி இலக்கை அடைந்துவிடக்கூடிய மார்க்கம் அல்ல. அது சிறுமைப்படுத்தல் இல்லாத சுயமரியாதைக்கும், பழிவாங்கல் இல்லாத நீதிக்கும், ஆதிக்கம் இல்லாத சமத்துவத்திற்குமான தொடர்ச்சியான தேடலாகும். அரசியல் அரிதாகவே பரிபூ ரண தெரிவுகளை வழங்கும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து, அரை குறை வாய்ப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தும் தைரியமே அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவப் பண்பாக இருந்தது. அந்தப் பாதையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ள சட்டத்தின்

(23ம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு உறவுகளில் புதிய பரிமாணம்!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், எதிர்வரும் 9ஆம் 10 ஆம் திகதிகளில் இலங்கையில் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில், இலங்கை கடற்





படையின் தளபதி வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னான்டோவின் இந்தியப் பயணம் இடம் பெற்றிருக்கிறது. இந்த இரண்டு பயணங்களும் மூலோபாய முக்கியத்துவம் மிக்கவையாக கருதப்படுகின்றன. எதிர்கால பாதுகாப்பு ஒத்துழைப்புகள் புதிய பரிமாணங்களுக்குள் நுழைவதற்கான திறவுகோல்களாக இந்தப் பயணங்கள் கருதப்படுகின்றன.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கைப் பயணம் மிகமிக முக்கியத்துவமானது. இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர்கள் அடிக்கடி கொழும்புக்குப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமர்களும் கூட குறிப்பிடத்தக்க கால இடைவெளியில் இலங்கைக்கான பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வரலாறு அரிதானது.

கடந்த, 37 ஆண்டுகளில் இந்தியாவில் பாதுகாப்பு அமைச்சர்களாகப் பதவி வகித்த சந்திரசேகர், வி.பி.சிங், நரசிம்மராவ், சரத்பவார், பிரமோத் மகாஜன் முலாயம் சிங் யாதவ், ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஜஸ்வந்த் சிங், பிரணாப் முகர்ஜி, அருண் ஜேட்லி, ஏ.கே.அந்தோனி, மனோகர் பரிக்கர், நிர்மலா சீதாராமன் ஆகியோர் இலங்கைக்கான பயணங்களை மேற் கொள்ளவில்லை என்பது ஆச்சரியமான விடயம்.

இவர்களில் பலர் வெளிவிவகார அமைச்சராக, பிரதமராக, வேறு அமைச்சர்களாக இருந்த போது, இலங்கைக்கு வந்திருந்தனர். ஆனால் பாதுகாப்பு அமைச்சர்களாக வந்ததில்லை.

ராஜீவ் காந்தி அமைச்சரவையின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த கே.சி.பந்த், 1987 இற்கும் 1989இற்கும் இடையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு பயணங்களை மேற் கொண்டிருந்தார்.

1987இல் இந்திய-இலங்கை உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காக பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்பு வந்த போது, பாதுகாப்பு அமைச்சரான கே.சி.பந்த் அந்தக் குழுவில் இடம் பெறவில்லை.

அந்த உடன்பாட்டின் கீழ், வடக்கு கிழக்கில் இந்தியப்படைகள் நிலை நிறுத்தப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளுடன் முரண்பாடுகள் தீவிரமடைந்திருந்த சூழலில், கே.சி.பந்த் இலங்கைக்கு பயணம் மேற் கொண்டார். இந்தியப்படைகள் விடுதலைப் புலிகள் மீதான போரை தொடங்குவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, 1987 ஒக்டோபர் 8ஆம் திகதி அவர் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜியுடன் கொழும்பு வந்து அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவை சந்தித்து, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடியிருந்தார்.

அதன் பின்னர்,1988ஆம் ஆண்டு மே மாதம் வடக்கு,கிழக்கில் இந்தியப் படைகளின் நடவடிக்கைள் குறித்து ஆய்வு செய்வதற்காக -கே.சி.பந்த் இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டிருந்தார்.

அதற்குப் பின்னர், இந்திய பாதுகாப்பு அமைச்சர்கள் யாரும், இலங்கைக்கான பயணத்தை கடந்த 37 ஆண்டுகளில் மேற்கொள்ளவில்லை. இவ்வாறான நிலையில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு மேற் கொள்ளவுள்ள பயணம் மூலோபாய முக்கியத்துவம் மிக்கதாக கருதப்படுகிறது.

இந்தப் பயணத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்க, இலங்கைக் கடற்படையின் தளபதியாக அண்மையில் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ, இந்திய கடற்படைத் தளபதியின் அழைப்பின் பேரில், இந்தியாவில் மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை அவர் இந்தியாவில் மேற்கொண்ட அதிகாரபூர்வ பயணமும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக பார்க்கப்படுகிறது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கைப் பயணமும், இலங்கை கடற்படைத் தளபதியின் இந்தியப் பயணமும், இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பின் அடுத்தடுத்த கட்டங்களுக்கான முன்னகர்வுகளாக கருதப்படுகின்றன

இலங்கை கடற்படைத் தளபதியின் இந்தியப் பயணத்தின் போது, சில வழக்கமான, பாரம்பரியமான சந்திப்புகள் இடம்பெற்றன.

இந்தியக் கடற்படைத் தளபதியுடனான சந்திப்பு, சவுத்புளொக்கில் அவருக்கு அளிக்கப்பட்ட கடற்படை அணிவகுப்பு மரியாதை, இந்திய விமானப்படைத் துணைத் தளபதி, இந்தியாவின் பாதுகாப்புச் செயலர் ராஜேஸ் குமார் சிங்குடனான சந்திப்பு, இந்திய கடற்படையின் தென் பிராந்திய கடற்படைத் தலைமையகத்திற்கு அவர் மேற்கொண்ட பயணம் எல்லாமே, கிட்டத்தட்ட ஒரு அதிகாரபூர்வ பயணத்தின் போது இடம் பெறுகின்ற சம்பிரதாய ரீதியான சந்திப்புகள், நிகழ்வுகள் தான். இந்தச் சந்திப்புகளில் முக்கியமான விடயங்கள் பேசப்பட்டிருக்கின்றன. இணக்கப்பாடுகள் காணப்பட்டிருக்கின்றன.

இந்தப் பயணம் உயர்மட்ட இராணுவ உரையாடல், கடல்சார் பாதுகாப்பு, கூட்டு நடவடிக்கைகள், பயிற்சி, திறன் மேம்பாடு, தொழில் முறைப் பரிமாற்றங்கள் மற்றும் இந்தியாவின் விரிவடைந்து வரும் பாதுகாப்பு-தொழில்துறை ஈடுபாடு போன்ற, இருதரப்பு பாதுகாப்பு உறவின் பல அம்சங்களை ஒன்றிணைத்துள்ளது. இந்திய- இலங்கை பாதுகாப்பு உறவுகள் நல்லெண்ணப் பயணங்கள் மற்றும் சம்பிரதாயப் பரிமாற்றங்களைத் தாண்டி கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டு ஒத்துழைப்பை நோக்கி அதிகளவில் நகர்கின்றன.

2025ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தின் போது, இரு நாடுகளும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், இந்த முன்னேற்றத்துக்கான நிறுவன ரீதியான உந்துதல் கிடைத்தது.

பரந்த இரு தரப்புக் கட்டமைப்பானது, கடல்சார் கண்காணிப்பு, கூட்டுப் பயிற்சிகள், பயிற்சி, உளவு மற்றும் தகவல் பகிர்வு, திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் தளங்களை வழங்குதல் ஆகியவற்றை ஒத்துழைப்பிற்கான முக்கிய பகுதிகளாக அடையாளம் கண்டுள்ளது.

இந்த பரந்த ஈடுபாடு முக்கியமானது.கடல்சார் பாதுகாப்பிற்கு இராணுவ ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. பரந்த கடற்பரப்புகளின் கண்காணிப்பு, விமானங்கள், ஆளில்லா அமைப்புகள், செயற்கைக்கோள்கள், கடலோர ராடார் வலையமைப்புகள், கப்பல்கள் மற்றும் தகவல் பகிர்வு வழிமுறைகள் ஆகியவை ஒருங்கிணைந்து செயற்படுவதைச் சார்ந்துள்ளது.

உலகின் மிகவும் பரபரப்பான கப்பல் போக்குவரத்துப் பாதைக்கு அருகில் அமைந்துள்ள இலங்கைக்கு, கடல் சார் கள விழிப்புணர்வு குறிப்பாக முக்கியமானது. கடற்படைத் தளபதியின் இந்தப் பயணத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம்,

இந்தியப் பாதுகாப்புத் தொழில்துறையின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடல் ஆகும். இந்த சந்திப்பு இருதரப்பு உறவுகளில் ஒரு புதிய பரிமாணத்தைத் திறக்க வாய்ப்புள்ளது.

இலங்கையுடனான இந்தியாவின் பாதுகாப்பு உறவானது பாரம்பரியமாக பயிற்சிகள், கடல்சார் கண்காணிப்பு, திறன் மேம்பாடு மற்றும் அரசாங்கங்களுக்கு இடையேயான உதவி ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது.

இருப்பினும் இந்தியா உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியை விரிவுபடுத்தும் போது, பாதுகாப்புத் தொழில் ஒத்துழைப்பு ஒரு முக்கிய அங்கமாக மாறக் கூடும்.

இலங்கையைப் பொறுத்தவரை, இந்திய நிறுவனங்கள் கடலோரக் கண்காணிப்பு, தகவல் தொடர்பு, ரோந்துத் தளங்கள், ரேடார்கள், பராமரிப்பு, ஆளில்லா அமைப்புகள் மற்றும் பிற கடல்சார் தொழில்நுட்பங்கள் போன்ற துறைகளில் செலவு குறைந்த தீர்வுகளை வழங்கக்கூடும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, அண்டை நாடுகளின் ஆயுதப் படைகளுடன் நெருங்கிய தொழில் துறை ஈடுபாடு, தனது பாதுகாப்பு உற்பத்திச் சூழமைப்பை நட்பு நாடுகளுக்கு ஒரு விநியோகஸ்தராகவும் தொழில்நுட்பப் பங்காளராகவும் நிலைநிறுத்தும் அதன் பரந்த நோக்கத்தை எட்டுவதற்கு உதவும்.

எனவே இதன் முக்கியத்துவம், பாதுகாப்புத் தளபாட விற்பனையில் மட்டுமல்ல, பயிற்சி, தளங்கள், பராமரிப்பு, தொழில்நுட்பம் மற்றும் செயல்பாட்டு ஒத்துழைப்பு ஆகியவற்றை ஒரு ஒருங்கிணைந்த பாதுகாப்பு கூட்டாண்மையாக இணைக்கும் சாத்தியங்களும் உள்ளன.


இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் பயணத்தின் போதும், முக்கியமாகப் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற விடயம், பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு பற்றியதாகும்.

இந்திய- இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்பாட்டில், பாதுகாப்பு தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.


இந்த 5 ஆண்டு கால பாதுகாப்பு உடன்பாட்டின் கீழ், தொழில்துறை சார்ந்த அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.





ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.





கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.





துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேத்திற்கான வழிகள் பிறக்கும். வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ் தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக் கிடையே சுமூகமான உறவு இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.








தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்து வது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.




மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.




கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி




மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்கு இடையே நிரந்தரமான ஒத்துழைப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

9. அரசியல் ஒழுக்கமும் பொதுநல முன்னுரிமையும் ஆழ்மனதில் தலைமைத்துவத்துக்கும் கட்சிக்கும் இருப்பது அவசியமாகும். இது இல்லையென்றால், எத்தகைய மருந்தையோ, எத்தகைய ஆரோக்கியமான வளத்தையோ கொடுத்தாலும் ஒரு தலைமைத்துவமோ, கட்சியோ தன்னைப் பலப்படுத்திக் கொள்ள முடியாது. அது தொடர்ந்தும் நோயாளி நிலையிலேயே இருக்கும். என்பதால் தான் அரசியல் என்பது தனிநபர் பதவிகளுக்கான இடமாகவும் போட்டியாகவும் இருக்கக் கூடாது என்கிறோம். அப்படி மாறும்போது, தேசிய நலன்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. ஆகவே தலைமைத்துவத்தின் ஒவ்வொரு முடிவும், இது யாருக்குப் பயன்? என்ற கேள்வியைவிட, இது சமூகத்தின் நீண்டகால நலனுக்கு எவ்வாறு உதவுகிறது? என்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும்.

10. எதிர்காலத்தை நோக்கிய அரசியல் குறித்தது. ஒரு இனத்தின் அல்லது ஒரு சமூகத்தின் தேசிய அரசியல் என்பது கடந்த காலத்தை நினைவுகூர்வதற்காக மட்டும் அல்ல் எதிர்காலத்தை உருவாக்குவதற்காகவும் இருக்க வேண்டும். வரலாற்றை மறக்காமல், அதிலிருந்து கற்றுக்கொண்டு, புதிய தலைமுறைகளுக்கு நம்பிக்கையையும் வாய்ப்புகளையும் உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையே ஒரு தேசியத் தலைமைத்துவத்தின் உயர்ந்த பணியாகும்.

நிறைவாக, ஒரு சமூகத்தின் உண்மையான பலம் அதன் மக்கள் தொகையிலோ, பொருளாதார வளங்களிலோ, ஆயுத வலிமையிலோ மட்டும் இல்லை. தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனிலும், தன்னுடைய அரசியல் நிறுவனங்களை உருவாக்கும் முதிர்ச்சியிலும், தலைமுறைகளை இணைக்கும் தலைமைத்துவப் பண்பாட்டிலும் தான் உள்ளது. எதிர்கால ஈழத் தமிழர் அரசியல், தனிநபர்களின் எழுச்சி, வீழ்ச்சிகளை மையமாகக் கொண்ட அரசியலிலிருந்து, அறிவு, ஜனநாயகம், ஒழுக்கம், பொருத்தமான நிறுவனங்கள், மற்றும் நீண்ட காலத் தேசியத் திட்டமிடலை மையமாகக் கொண்ட அரசியலுக்கு நகர வேண்டிய காலகட்டத்தில் உள்ளது.

எனவே, தலைமைத்துவத்தின் உண்மையான நோக்கம் ஒரு தலைவரை உருவாக்குவது அல்ல. தலைவர்கள் தொடர்ந்து உருவாகக்கூடிய அரசியல் மரபையும் நிறுவனங்களையும் உருவாக்குவதாகும். அதுவே ஒரு சமூகத்தின் அரசியல் நிலைத்தன்மைக்கும், அதன் உரிமைகளை நீண்டகால அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலுக்கும் அடித்தளமாக அமையும்.

இந்தப் பிரகடனம் ஒரு குறிப்பிட்ட அரசியல் முடிவையோ பாதையையோ பரிந்துரைப்பதற்குப் பதிலாக, ஒரு இனத்தின் தலைமைத்துவத்தின் தரம், நிறுவனங்களின் அவசியம், ஜனநாயகப் பண்பாடு, அறிவு, மற்றும் நீண்டகாலத் திட்டமிடல் போன்ற பொதுவான அரசறிவியல் கோட்பாடுகளைச் சுருக்கமாக முன்வைக்கிறது. காலத்தேவை கருதி இவற்றைப் பொது உரையாடலாக்குவது ஏனையோரின் பொறுப்பும் கடமையுமாகும். (முற்றும்)

# ஈழத்தமிழர் அரசியலில் சர்வதேச...

(14ம் பக்கத் தொடர்ச்சி) உருவாக்கப்பட்ட, இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையமானது, அமெரிக்காவின் போர்டு நிதியத்தினால் உருவாக்கப்பட்டதாகவும், அதற்கு பின்னால் சி.ஐ.ஏ இருந்தாகவும் பலர் எழுதியிருக்கின்றனர். இப்படி கதைகள் ஏராளம். பனிப் போர் கால அரசியலில், இவைகள் எல்லாம் சாத்தியம் இல்லை என்றும் ஒரேயடியாக நிராகரித்துவிட முடியாது என்பதும் உண்மை தான் - என்றாலும் கூட, இவற்றைக் கொண்டு வலுவாக வாதிட முடியாது என்பதும் உண்மை. ஏனெனில் இவை ஊகங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருப்பவை. விடுதலைப் புலிகள் அமைப்பு அமெரிக்க சார்பானவர்களையும் அழித்திருக்கின்றனர் என்பதும் உண்மை தான். நீலன், லக்ஸ்மண் கதிர்காமர் போன்றவர்கள் இதில் தான் அடங்குவர்.

ஆனால் இறுதியில் தமிழர் அரசியலின் இன்றைய நிலை என்ன? வெறுமை மட்டும் தானே எஞ்சியிருக்கின்றது. ஒரு வேளை இந்தியாவிற்கு அப்பால் செல்ல வேண்டும் என்னும் புரிதல் விடுதலைப் புலிகளிடம் இருந்திருக்கின்றது என்று ஒருவர் வாதிடலாம் - அது சரி தானே என்றும் கேட்கலாம் ஆனால் இவ்வாறான கேள்வி சர்வதேச அரசியல் தொடர்பில் போதிய புரிதலின்மைக்கான சான்றாகவே இருக்கும் ஏனெனில் அது சாத்தியமற்றது. அதாவது இந்தியாவுடனும் நட்பைப் பேணிக் கொண்டு அவ்வாறு சிந்தித்தால் அதில் தவறில்லை ஆனால் முற்றிலும் விரோதித்துக் கொண்டு பயணிக்க முடியாது. ஒரு வேளை அதனை ஒரு வாதமாக எடுத்துக் கொண்டாலும் கூட, அதனால் தமிழ் மக்கள் நன்மையடைந்திருக்க வேண்டும் அல்லவா அப்படி எதுவும் நடக்கவில்லையே! இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு துடைத்தழிக்கப்பட்டமை மட்டும்தானே, சிறப்பாக நடந்திருக்கின்றது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஈழத் தமிழர் அரசியலை வழிநடத்த முற்பட்டவர்களான, இலங்கை தமிழரசு கட்சி வழிவந்தவர்களும் சரி, பின்னர் ஆயுத இயங்கங்களின் தலைவர்களாக இருந்தவர்களும் சரி - எவரிடமும் சர்வதேச அரசியல் தொடர்பில் போதிய புரிதல் இருந்திருக்கவில்லை என்பதைத் தான் வரலாறு நிருபித்திருக்கின்றது. சர்வதேச அரசியல் தொடர்பில் சிந்திக்கும் போதெல்லாம், புளொட் இயக்கத்தின் மூத்த தலைவர் ஒருவர், என்னிடம் கூறிய விடயம்தான் நினைவுக்கு வருவதுண்டு. அன்றைய சூழலில், வெளிவிவகாரக் கொள்கை, புவிசார் அரசியல், சர்வதேச உறவுகள் என்னும் சொற்களைக் கூட நாங்கள் கேள்வியுற்றதில்லை. அன்றைய சூ ழலில் எங்களுடைய புரிதல் வேறு விதமாக இருந்தது. அதை தவறு என்றும் கூற முடியாது, ஏனெனில் இப்படியான விடயங்கள் இருக்கின்றன என்பதை புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் நாங்கள் இருந்திருக்கவில்லை. அப்போது எங்களுக்கு என்ன தெரிந்ததோ அவற்றைக் கொண்டே, நாங்கள் சிந்தித்தோம்.

உண்மை தான். அதில் தவறில்லை தான். ஆனால், இன்றும் அவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்க முடியாதல்லவா? பொதுவாக மற்றவர்கள் எங்களை பயன்படுத்திவிட்டார்கள், மற்றவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்றெல்லாம் சிலர் கூறுவதை கேட்கின்ற போதெல்லாம், புன்சிரிப்பொன்றே பதிலாக இருப்பதுண்டு. ஏனெனில், உண்மையோ வேறு - அதாவது, அவர்களுடைய நலன்களை புரிந்து கொண்டு செயற்பட எங்களுக்குத் தெரியவில்லை. பலம் பொருந்திய தரப்புக்களின் நலன்களை விளங்கிக் கொண்டு, எங்களுக்காக செயலாற்றுவதற்குத் தான் சர்வதேச அரசியல் புரிதல் அவசியம். அது இல்லாததால் நாங்கள் இழந்து விட்டது ஏராளம் இனி இழப்பதற்கு எதுவும் பெரிதாக இல்லா விட்டாலும் கூட, இருப்பதைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச அரசியல் புரிதல் அவசியம்.

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

## விவாதத்திற்கான சில குறிப்புக்கள் - 06

கட்டுரையாளர்:
– கருணாகரன் –

(சென்றவாரத் தொடர்ச்சி) மேலும் சொல்வதென்றால், ஒரு தலைவரின் மிகப்பெரிய வெற்றி, தன்னைப் போன்ற இன்னும் பல தலைவர்களை உருவாக்குவதில்தான் இருக்கிறது. தலைமைத்துவத்தைத் தனது தனிப்பட்ட சொத்தாகக் கருதாமல் புதிய தலைமுறைக்கு அறிவையும் அனுபவத்தையும் பொறுப்புகளையும் பகிர்ந்தளிக்கும் பண்பாடாக உருவாக வேண்டும். அதிகாரத்தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தலைமைத்துவத்தைப் புதுப்பிக்கும் அரசியல் கலாசாரமே ஒரு சமூகத்தை நீண்டகாலம் உயிர்ப்புடன் வைத்திருக்கும்.

எனவே தலைமைத்துவம் என்பது ஒருவரின் புகழையோ அதிகாரத்தையோ உயர்த்தும் கருவியல்ல. அது ஒரு சமூகத்தின் கூட்டு நம்பிக்கைகளையும் இலட்சியங்களையும் பாதுகாக்கும் பெரும் பொறுப்பாகும்.

அறிவு இல்லாத துணிச்சல் சமூகத்தை ஆபத்துக்குள் தள்ளும். ஒழுக்கமில்லாத அதிகாரம் ஊழலுக்கு வழி வகுக்கும். ஜனநாயகப் பண்பாடில்லாத தலைமை சர்வாதிகாரமாக மாறும். பொருளாதாரப் பார்வையற்ற அரசியல் மக்களை வறுமைக்குள் தள்ளும். நிறுவனங்களை உருவாக்காத தலைமை தன்னோடு சேர்ந்து அரசியல் மரபையும் முடிவுக்குக் கொண்டு செல்லும். இதையும் நாம் நம்முடைய சமகால வராற்றில் கண்டுள்ளோம். ஈழத்தமிழரின் அரசியல் தலைவர்கள் எல்லோரும் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் மேலும் ஆழமாக்கி, விரிவுபடுத்தினரே தவிர, அவற்றை இலகுவாக்கித் தீர்வை நோக்கி நகர்த்தவில்லை.

இதில் ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தொடக்கம் பிரபாகரன், சம்பந்தன் வரை அடக்கம். என்பதால் தான் தமிழ்ச்சமூகமும் அதனுடைய அரசியலும் சிதறுண்டு, பலவீனப்பட்ட நிலையில் இருக்க வேண்டியதாகிற்று.

எனவே, எதிர்கால ஈழத் தமிழர் அரசியலின் மையக் கேள்வி யார் தலைவராக வருவார்? என்பதாக இருக்கக் கூடாது. மாறாக, எப்படிப்பட்ட தலைமைத்துவத் தரத்தை நாம் உருவாக்க வேண்டும்? என்பதாக இருக்க வேண்டும். அந்தத் தரம் அறிவு, ஒழுக்கம், ஜனநாயகம், இராஜதந்திர முதிர்ச்சி, பொருளாதாரத் தொலைநோக்கு, வரலாற்றுப் புரிதல் மற்றும் நிறுவனமயமான அரசியல் கலாசாரம் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப் படும் போது தான், ஒரு தேசிய இனத்தின் அரசியல் பயணம் நிலையானதாகவும் நம்பகமானதாகவும் அமையும்.

இதுவரையில் நாம் விவாதித்த தலைமைத்துவம், அரசியல், சர்வதேச இராஜதந்திரம், நிறுவனமயமாக்கல் போன்ற கருத்துக்களைச் சுருக்கி, எதிர்காலத்திற்கான ஒரு அரசியல் நெறிமுறைகள் பிரகடனமாக (Leader ship Charter) வடிவமைக்கலாம். இது ஒரு குறிப்பிட்ட அரசியல் தரப்புக்கான செயல்திட்டமாக அல்லாமல், பொதுவான தலைமைத்துவக் கோட்பாடுகளின் தொகுப்பாக அமைகிறது.

இந்த நிலையில் இந்த நூற்றாண்டின் ஈழத் தமிழர் தலைமைத்துவத்திற்கான வழிகாட்டும் கோட்பாடுகளாகச் சில வற்றைப் பரிந்துரைக்கலாம். 21ஆம் நூற்றாண்டின் உலகம், கடந்த நூற்றாண்டின் உலகத்தைவிட முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அதிகாரத்தின் வடிவங்களும், அரசியல் போராட்டங்களும், இராஜதந்திர அணுகுமுறைகளும், தகவல் தொடர்பு முறைகளும், உலகப் பொருளாதாரமும் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்ளாத எந்த தேசிய அரசியலும் காலத்தின் பின்னால் தள்ளப்படும். எனவே, எதிர்கால ஈழத் தமிழ்த் தலைமைத்துவம் பின்வரும் அடிப்படைக் கோட்பாடுகளின் மீது கட்டியெழுப்பப் பட வேண்டும்.

1. ஒரு இயக்கத்தின் நிலைத்தன்மை ஒரே தலைவரைச் சார்ந்திருக்கக் கூடாது. தலைவர்கள் மாறினாலும் கொள்கைகளும் நிறுவனங்களும் தொடர வேண்டும். தலைமை என்பது ஒரு நபரின் அதிகாரமல்ல் ஒரு சமூகத்தின் நிறுவனமயமான பொறுப்பாக இருக்க வேண்டும்.

2. மக்களின் நம்பிக்கையே தலைமைத்துவத்தின் மிகப்பெரிய மூலதனமாகும். ஆகவே முடிவுகள் வெளிப்படைத்தன்மையுடன் எடுக்கப்பட வேண்டும். கீழ்மட்ட உறுப்பினர்கள் முதல் எந்தத் தரப்பினராலும் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதிகாரம் கண்காணிக்கப்பட வேண்டும். மக்களிடம் அரசியல், நிர்வாக, நெறிமுறை ரீதியாக தலைமையானது அனைவருக்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

3.அறிவை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அணுகுமுறை அவசியம். அதையே வழிமுறையாகவும் கொள்ள வேண்டும். உணர்ச்சிகள் அரசியலுக்குத் தேவையானவை தான். ஆனால் அவை மட்டும் போதுமானவை அல்ல. ஆய்வுகள், தரவுகள், சட்ட அறிவு, பொருளாதார மதிப்பீடுகள், சர்வதேச அரசியல் புரிதல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். அரசியல் என்பது அறிவியல் சார்ந்த சமூகத் தீர்மானமாகவும் அமைய வேண்டும்.

4. கருத்து வேறுபாடு என்பது பலவீனத்தின் அடையாளமல்ல் ஜனநாயகத்தின் அடையாளம். ஆனால் அந்த வேறுபாடுகள் தேசிய இலக்குகளைச் சிதைக்கும் அளவுக்கு வளரக் கூடாது. அடிப்படை அரசியல் இலக்குகளில் ஒற்றுமையும், நடைமுறை அணுகுமுறைகளில் ஜனநாயகப் பன்மையும் இணைந்து இயங்கும் பண்பாடு உருவாக்கப்பட வேண்டும்.

5.பல்துறை இராஜதந்திர அணுகுமுறை அவசியமானது. இது முக்கியமானது. இன்றைய தமிழர் அரசியலில் சார்பு நிலை அரசியலே பின்பற்றப்படுகிறது. ஆனால், சிங்களத்தரப்பு அவ்வாறானதல்ல. அது அமெரிக்காவையும் ஈரானையும் இந்தியாவையும் சீனாவையும் சீராகக் கையாள்கிறது. தமிழர்கள் ஒரு தரப்புக்குக் காவடி தூக்கினால், மறுதரப்புக்கு செருப்பு மாலை அணிவிக்க முயற்சிக்கிறார்கள். இது விடுதலைக்கும் தலைமைத்துவ வளர்ச்சிக்கும் ஒருபோதும் பயனளிக்காது.

இன்னும் இதை வெளிப்படையாகச் சொன்னால், ஒரே ஒரு நாட்டையோ அல்லது ஒரே ஒரு சர்வதேச சக்தியையோ சார்ந்திருக்கும் அரசியல் நீண்ட காலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். பிராந்திய நாடுகள், உலக வல்லரசுகள், சர்வதேச அமைப்புகள், மனித உரிமை நிறுவனங்கள், கல்வி மற்றும் ஆய்வு மையங்கள், உலகளாவிய குடிமைச் சமூகங்கள் ஆகிய அனைத்துடனும் சமநிலையான உறவுகளை உருவாக்கும் திறன் வளர்க்கப்பட வேண்டும்.

6. உரிமைப் போராட்டமும் சமூக முன்னேற்றமும் சமாந்தரத் தன்மையோடு இணைந்து செல்ல வேண்டும். ஒரு சமூகத்தின் அல்லது ஒரு இனத்தின் அரசியல் உரிமைகளும் அதன் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், தொழில்நுட்ப முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலாசார வளர்ச்சி ஆகியவற்றும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. அரசியல் விடுதலைக்கான பயணமும் சமூக மறுகட்டமைப்பும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஒரு சமூகம் பலமான நிலையில் இருக்க வேண்டும் என்றால், அதனுடைய கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், தொழில்நுட்ப முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலாசார வளர்ச்சி போன்றவை சொந்த நிலத்தில் பலமானதாக இருக்க வேண்டும். இதனை விடுதலைப்புலிகள் உட்பட ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்ற இயக்கங்களும் புரிந்து கொண்டிருந்தன. ஆனால், இன்றைய அரசியற் கட்சிகள்?

7. தலைமுறை மாற்றத்தை உறுதிப் படுத்துதல் அவசியமானது. தலைமைத்துவம் ஒரு தலைமுறையோடு முடிவடையக் கூடாது. புதிய தலைமுறையினருக்கு அரசியல் கல்வி, தலைமைப் பயிற்சி, பொது நிர்வாக அறிவு, இராஜதந்திர அனுபவம் ஆகியவற்றை வழங்கும் நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஒரு சமூகத்தின் எதிர்காலம் அதன் இளைஞர்களின் அரசியல் முதிர்ச்சியிலேயே அமைகிறது. இதனைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதால் மேலும் விரித்துக் கொள்ளவில்லை.

8. உலகத் தமிழர் பங்களிப்பை ஒருங்கிணைத்தல் என்பது முக்கியமானது. இன்றைய அரசியல், பொருளாதார, தொடர்பாடல் பலமாக புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். இதொரு முக்கியமான வளமாகும். இதனைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இதில் புலம்பெயர் தமிழர்களுக்கும் பொறுப்புண்டு. முக்கியமாக அவர்கள் பல இடங்களில் நிதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது. அதற்கான பயில்வுகள் அவசியம்.



புலம்பெயர் தமிழர்கள் அல்லது புலம்பெயர் சமூகத்தினர் என்பது வெறும் நிதி ஆதாரமாக மட்டுமல்லமல், அறிவு, தொழில்நுட்பம், கல்வி, பொருளாதாரம், சர்வதேசத் தொடர்புகள் மற்றும் ஆய்வுத் திறன்களைக் கொண்ட உலகளாவிய வளமாகக் கருதப்பட வேண்டும். உள்நாட்டு (18ம் பக்கம் பார்க்க)

# வாழ்ந்தோரும் இறந்தாரும் காணாமல் போனோரும்!

ஆகஸ்ட் மாதம் வாழ்வோர், இறந்தோர் மற்றும் காணாமல் போனோர் என்ற தலைப்பிற்கு முற்றிலும் பொருத்தமாக அமைந்திருந்தது. அந்த மாதத்தில், 10 நாட்கள் நடைபெறும் கண்டி எசல பெரஹரா விழா அதன் அனைத்து சிறப்புகளுடனும் நிறைவுற்றது. ஸ்ரீ தலதா மாளிகையால் ஏற்பாடு செய்யப்படும் இந்த விழா, இலங்கையின் பண்டைய சிங்கள பௌத்த பாரம்பரியம், ஆன்மீகம் மற்றும் கலாச்சார மரபுகளின் கம்பீரமான வெளிப்பாடாகும்.

விழாவின் உச்சக்கட்ட நாட்களில் நடை பெறும் பெரஹராவில் 60 முதல் 100 யானைகள் வரை பங்கேற்கின்றன. 'கிராண்ட் ரந்தோலி பெரஹரா' எனப்படும் இறுதி இரவில், மிகப்பெரிய அளவில் சுமார் 100 அலங்கரிக்கப்பட்ட யானைகளும், 1,000-க்கும் மேற்பட்ட கலாச்சாரக் கலைஞர்களும் இணைந்து அணிவகுத்துச் செல்கின்றனர்.

நாட்டில் வளர்ப்பு யானைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. எஞ்சியிருக்கும் யானைகளும் வயோதிபம் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

பல மணிநேரம் நீடிக்கும் இந்த கடினமான ஊர்வலங்களில் பங்கேற்கக்கூடிய, ஆரோக்கியமான 60 முதல் 70 யானைகளை மட்டுமே கோயில் அதிகாரிகளால் தேர்வு செய்ய முடிகிறது. யானைகள் நோய்வாய்ப்படாமல் இருப்பதை உறுதி செய்ய தினமும் குறைந்தது நான்கு கால்நடை மருத்துவர்கள் பணியில் ஈடுபடுகின்றனர்.

இலங்கையின் யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள செம்மணி மனிதப் புதைக்குழி இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகள் 2026 ஆகஸ்ட் 19 அன்று நிறைவடைந்தன. மூன்று கட்டங்களாக 110 நாட்கள் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில், இதுவரை அடையாளம் காணப்பட்ட 583 மனித எலும்புக் பட்டுள்ளன. இருப்பினும், தொல்லியல், தடயவியல் மற்றும் கார்பன்-14 காலக்கணிப்பு சோதனைகள் இன்னும் எஞ்சியுள்ளன.

அக்டோபர் 14 அன்று திட்டமிடப்பட்டுள்ள அதிகாரிகளின் கூட்டத்தில், அடுத்து எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த முடிவுகள் எடுக்கப்படலாம். 110 நாட்களாக நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் 583 மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட போதிலும், இந்த செயல்முறை இன்னும் நிலுவையில் உள்ள தொல்லியல், தடயவியல் மற்றும் அறிவியல் மதிப்பீடுகளையே பெரிதும் நம்பியுள்ளது.

30 ஆண்டுகளுக்கு முன்பு செம்மணியில் இராணுவத்தினரால் பாடசாலை மாணவி கிருஷாந்தி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையது என்பதால், செம்மணி புதைக்குழி கண்டுபிடிப்பு வாழ்வோர், இறந்தோர் மற்றும் காணாமல் போனோர் இடையேயான தடையற்ற தொடர்பை விளக்குகிறது.

கிருஷாந்தியைத் தேடிச் சென்ற அவரது தாய், தம்பி மற்றும் குடும்ப நண்பர் ஒருவரும் கொல்லப்பட்டனர். தண்டனை பெற்ற இராணுவ வீரன் விசாரணையின் போது செம்மணியில் உள்ள இந்த மனிதப் புதைகுழிகள் பற்றி வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு நாளேடான தி ஐலண்ட் , அகழ்வாராய்ச்சியின் நான்காம் கட்டம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் 28 நாட்களுக்கு அகழ்வாராய்ச்சியைத் தொடர்வதற்கு நீதிமன்ற அனுமதியைக் கோரி, சட்ட மருத்துவ அதிகாரி விரைவில் அறிக்கை தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீதிமன்றம் இதற்கு அனுமதி அளித்தால், அகழ்வாராய்ச்சியைத் தொடங்குவதற்கு முன்னதாக அந்தத் திட்டத்தை நிதி ஒதுக்கீட்டிற்காக நீதி அமைச்சுக்கு அனுப்ப வேண்டும்.

ஏற்கனவே தோண்டி எடுக்கப்பட்ட மனித எச்சங்களை ஆய்வு செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான விசாரணை நடவடிக்கைகளைத் தொடங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தி ஐலண்ட் நாளேட்டின் படி, "110 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் 583 மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள போதிலும், தொல்லியல், தடயவியல் மற்றும் அறிவியல் ரீதியிலான மதிப்பீடுகள் இன்னும் நிலுவையில் உள்ளதால், இந்த செயல்முறை முழுமையாக அந்த முடிவுகளையே சார்ந்துள்ளது. மேலும் இதுவரை இதற்கான இறுதி ஆய்வறிக்கைகள் எதுவும் கிடைக்கப்' பெறவில்லை.



ஆகஸ்ட் 30 அன்று, இலங்கைக்கு மிகுந்த தொடர்புடைய மற்றொரு நிகழ்வான "காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம்" உலகளவில் அனுசரிக்கப்பட்டது. பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை ஐக்கிய நாடுகள் அங்கீகரித்து 20 ஆண்டுகள் நிறைவடைவதை இந்த ஆண்டு குறிக்கிறது. இது உலகளவில் தொடர்ந்து நிலவும் நெருக்கடிகளையும், அரசுகளின் பொறுப்புக் கூறலையும் வலியுறுத்துகிறது.

'ரிலீவ் வெப்' (Relief Web) தகவலின் படி, ஆயுத மோதல்கள் காரணமாக காணாமல்போன சுமார் 2,84,000 பேரின் பதிவுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உலகளவில் தீவிரமாக கண்காணித்து வருகிறது. இந்த மனிதாபிமான தரவுகளின் அடிப்படையில், மூன்று தசாப்த கால தமிழ் பிரிவினைவாத போரினாலும் இரண்டு சிங்கள கிளர்ச்சிகளினாலும் இலங்கையில் 60,000 முதல் 100,000 பேர் வரை காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இது உலகளாவிய மோதல்களில் காணாமல் போன வரலாற்றுப் பதிவுகளில் 21 சதவீதம் முதல் 35 சதவீதமாகும்.

இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட பிரச்சினை இலங்கையில் கையாளப்பட்ட விதம், ஏசல பெரஹராவில் பங்கு பெறும் பழக்கப்பட்ட யானைகள் நடத்தப்படும் விதத்துடன் முற்றிலும் முரண்படுகிறது. பழக்கப்பட்ட யானைகளை சட்டவிரோத உரிமையாகக் கொண்டிருப்பதையும் அவற்றிற்கு எதிரான கொடுமைகளையும் தடுப்பதற்காக '2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விலங்கின மற்றும் தாவரப் பாதுகாப்பு (வளர்ப்பு யானைகளின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் பதிவு செய்தலை ஒழுங்குபடுத்தல்) ஒழுங்குமுறைகள்' எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டத்தை இலங்கை அரசு இயற்றியது.

இந்தச் சட்டம் வளர்ப்பு யானைகளின் தினசரி பராமரிப்பு, சுற்றுலா மற்றும் வேலை நிலைமைகளுக்கான குறிப்பிட்ட கட்டளைகளை அறிமுகப்படுத்தியது. கடுமையான சட்டவிதிகளின்படி அவற்றின் ஆற்றலைத் தக்கவைத்துக் கொள்ள ஆரோக்கியமான உணவுகள் வழங்கப்பட வேண்டும். கண்டிக்கு பயணிக்கும் யானைகளை கூட்ட நெரிசலில் இருந்து பாதுகாக்க அரசு சில சமயங்களில் பொலிஸ் அல்லது இராணுவப் பாதுகாப்பையும் வழங்கியுள்ளது.

ஈழப்போர் மே 2009 மே மாதத்தில் முடிவுக்கு வந்த போதிலும், காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டமூலம் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தாமதிக்கப்பட்டு, 2016 ஜீன் 22 அன்றே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் (ஏற்படுத்துகை, நிருவகித்தல் மற்றும் பணிகளை ஆற்றுதல்) 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டம் 2016 ஆகஸ்ட் 11 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இருந்தபோது, காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு இரண்டு ஆண்டுகள் கடந்தது. 2018 பெப்ரவரி 28 அன்றே அது சாத்தியமானது.அந்த சீரற்ற முறையிலேயே இயங்கி வருகின்றது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கான சர்வதேச தினத்தன்று அந்த அலுவலகத்தின் நிர்வாக இயக்குநர் கலாநிதி ஜெகநாதன் தற்பரன் கூறுகையில், பதிவு செய்யப்பட்ட 23,352 காணாமல் போனோர் தொடர்பான வழக்குகளில் 16,917 தீவிர வழக்குகளுக்கான கோப்புகளை அலுவலகம் பராமரித்து வந்த போதிலும், இதுவரை 25 நபர்கள் மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 14 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இந்தச் சிக்கல்கள் குறித்து விளக்கிய தற்பரன், ஒரே நபர் குறித்து இரட்டைப் பதிவுகள் (duplicate cases) இருப்பதே இதற்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.

அண்மைய செயற்பாட்டு நிதி ஒதுக்கீடுகள், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் காணாமல் போனோர் குறித்த விசாரணைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் அதிகரிப்பைக் காட்டுகின்றன. இருப்பினும், இந்தச் சுயாதீன அமைப்புகள் முதன்முதலில் உருவாக்கப்பட்டபோது வழங்கப்பட்ட அதிகபட்ச ஆரம்ப நிதி ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடும்போது, இழப்பீடுகளுக்கான பரந்த மூலதன வரவு செலவுத் திட்டங்கள் குறைந்துள்ளன அல்லது ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளன.

இறுக்கமான நிதியமைப்பிலும், 2026 நிதியாண்டிற்காக இலங்கை அரசாங்கம் தனது முதன்மை இடைக்கால நீதி அமைப்பின் கீழ் குறிப்பிட்ட செயல்பாட்டு மற்றும் இழப்பீட்டு வரவுசெலவுத் திட்டங்களை ஒதுக்கியுள்ளது. இது, வடக்கு , கிழக்கில் முன்னேற்றம் காண்பதற்கான அரசியல் காரணங்களுக்கு அப்பால், கொழும்பில் உள்ள தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஓரளவிலான நேர்மையைக் காட்டுகிறது.

காணாமல் போனோர் பற்றிய விசாரணைகள் இந்த நிதியாண்டில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்திற்கு அமைச்சரவை 375 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியானது 25 விசேட விசாரணைக் குழுக்கள் மூலம் நிலுவையிலுள்ள சுமார் 11,000 விசாரணைகளை 2027 ஆம் ஆண்டிற்குள் முடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. . 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட போது, உள்கட்டமைப்பு, பிராந்திய அலுவலகங்கள் மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு தரவுத் தளங்களை உருவாக்க 1.3 பில்லியன் ரூபா கணிசமான ஆரம்ப ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இருப்பினும் அடுத்தடுத்த நிதியாண்டுகளில் உள்கட்டமைப்பு பணிகள் முடிந்ததால், ஒதுக்கீடு மிகக் குறைந்த நிலைக்கு இயல்புநிலைக்கு வந்தது. சமீபத்திய 375 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு, காணாமல் போனோர் குறித்து விசாரிப்பதில் ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கம் தீவிரமாக உள்ளது என்ற தெளிவான செய்தியைக் கூறுகிறது. அதே நேரத்தில், நிலுவையிலுள்ள சுமார் 11,000 வழக்குகளை முடிப்பதற்காக 69 விசேட சட்ட, உளவியல்-சமூக மற்றும் களத் தடமறிதல் பணியாளர்களை உடனடி ஆட்சேர்ப்பு செய்வதற்கும் இது பயன்படுகிறது. மனிதப் புதைகுழிகளைத் தோண்டி எடுக்கும் விவகாரத்தில், ஒரு நீதிவான் உத்தியோக பூர்வமாக(22ம் பக்கம் பார்க்க)

# காணாமல் போனவர்கள் காணாமல் போனவர்களே! ஜனநாயகத்தில் நியாயத்தின் கதி!

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை நாம் மரியாதையின் நிமித்தம் நினைவு கூருகிறோம், ஆனால் ஒருவரைப் பறி கொடுத்து தங்களின் உறவுகள் காணாமல் போயுள்ள குடும்பங்களைப் பொறுத்தவரை, இது ஒரு நினைவேந்தலோ அல்லது நினைவுகூருதலோ அல்ல.




மாறாக, காணாமல்போனவர்களைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைக்குமா கிடைக்காதா என்ற எதிர்பார்ப்புடன், அவர்கள் கடந்துவர வேண்டிய மற்றொரு துயரம் நிறைந்த ஆண்டாகும். இது கையாள்வதற்கு மிகவும் மனவேதனையும் துயரமும் நிறைந்த ஒரு தொடர் நிகழ்வு.

1990 செப்டம்பர் 5ஆம் திகதி வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்து 158 பேர் ஆயுதப் படைகளால் அழைத்துச் செல்லப்பட்டனர். 36 ஆண்டுகளுக்குப் பிறகும், அவர்களைப் பற்றிய தகவல்களை அறிய நாங்கள் இன்னும் காத்துக் கொண்டிருப்பதால் இதை நான் நன்கறிவேன். 36 ஆண்டுகள் கடந்த நிலையிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆண்டுதோறும் சந்தித்து, தங்களின் துயரத்தையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதோடு, காணாமல் போனவர்களின் நிலை என்ன என்பதை அறிவதற்கான தொடர் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து, யாராவது ஒருவரிடமிருந்தாவது தகவல் வராதா என்று இன்னமும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், காணாமல் போனவர்கள் காணாமல் போனவர்களாகவே உள்ளனர். நீதித்துறை என்பது ஆட்சியின் ஒரு அங்கமாக இருக்கும் ஒரு ஜனநாயக நாட்டில் நிகழ்ச்சி நிரலிலும் பதிலிலும் காணாமல்போன இந்த விவகாரத்தில் நீதியும் காணாமல் போயுள்ளதாகவே தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பான மாதர்களின் சங்கம், காணாமல்போன தங்களது உறவுகளுக்காகக் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து போராடி வருகிறது. தேசிய அளவிலான அமைப்புகளும் பல்வேறு சம்பவங்களைக் கண்காணித்து, ஒரு ஜனநாயக நாட்டில் இதற்கான பதில் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கூட்டாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனால்,மிகக் குறைந்த அளவிலான முன்னேற்றமே ஏற்படுவதாகத் தெரிகிறது. இந்த விவகாரத்திற்காகப் போராட்டத்தில் ஈடுபட்ட நபர்களை அதிகாரிகள் 'கடினமாக நடத்திய' சமீபத்திய யாழ்ப்பாணச் சம்பவங்கள், வெறுமனே ஒரு கூட்டத்தை கையாளும் பிரச்சனையா? அல்லது தாங்கள் மறக்க நினைக்கும், ஆனால் மக்கள் நினைவில் வைத்திருக்கும் ஒரு விவகாரம் குறித்த அதிகாரிகளின் விரக்தியின் வெளிப்பாடா?

நிதியியல் முறைகேடுகள், மோசடிகள், நிர்வாகச் சீர்கேடுகள் போன்றவற்றைத் தீவிர குற்றங்களாகவும், முந்தைய பொலிஸ் மா அதிபர் விடயத்தில் 'நடவடிக்கை எடுக்காமையை' கடுமையான குற்றமாகவும் கருதும் ஒரு அரசாங்கத்தால், காணாமல்போன மக்களின் மற்றும் அவர்களது குடும்பங்களின் விதியை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாகக் கருத முடியவில்லை.

நடவடிக்கை எடுக்காததற்காக அரசையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ பொறுப்பாக்க முடியுமா? காணாமல்போன சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்கள்.: பதவிகள் (உதாரணமாக, கிழக்கில் காணாமல் போனோர் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு) குறிப்பிடப்பட்டிருந்தாலும், நமக்குத் தெரிந்தவரை அவர்கள் எவரும் விசாரணைக்காகவோ அல்லது வழக்குக்காகவோ அழைக்கப்படவோ அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்படவோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இது எதை உணர்த்துகிறது? ஏற்றுக் கொள்வதையா அல்லது நிராகரிப்பதையா?

காணாமல் போன தங்களது உறவினர்களைப் பற்றிக் கேள்வி எழுப்பும் இந்த குடிமக்களுக்கு இவை இரண்டுமே முக்கியத்துவம் வாய்ந்தவை. தற்போதைய அரசாங்கம் மோதல்களின் போது மக்கள் காணாமல் போன விவகாரத்தை நன்கு அறிந்திருக்கிறது. மேலும் தங்களது போராட்டங்களின் போது பல பகுதிகளில் இத்தகைய சூழ்நிலைகளை எதிர் கொண்டிருக்கும். அவ்வாறிருக்க, காணாமல் போன மக்களின் பிரச்சினைகளைப் புறக்கணிப்பது என்பது நிஜமான அணுகுமுறையாக இல்லாமல், வெறும் சுயநல வாய்ப்பாதரவாகவே தோன்றுகிறது. 1990 செப்டம்பர் 8 ஆம் திகதி வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் உள்ள எனது அலுவலகத்தில் வைத்து,அன்றைய கிழக்கிலங்கை கட்டளைத் தளபதி ஜெனரல் கெரி டி சில்வா கூறிய 'அவர்கள் அனைவரும் விடுதலை புலிகள் ,அவர்களைப் பற்றிக் கேட்காதீர்கள்' என்ற வார்த்தைகள் இன்னமும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, நீதியரசர் பாலக்கிட்ணர் தலைமையிலான கிழக்கு மாகாணத்தில் காணாமல்போனோர் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் இவரது பெயர் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த நடவடிக்கை குறித்து வாக்குமூலமோ அல்லது சாட்சியமோ அளிப்பதற்கு இவர் ஒருபோதும் அழைக்கப்படவில்லை.

2008 – 9 காலப்பகுதியில் நூற்றுக்கணக்கானோர் சரணடைவதைக் காண முடிந்தது. மேலும் சிறையிலும் காவலிலும் இருந்தவர்கள் தொடர்பான பல தகவல்கள் தொலைக்காட்சி மற்றும் ஆவணங்கள் மூலம் காண்பிக்கப்பட்டு பெரும் மகிழ்ச்சியைக் தந்தன. ஆனால் இப்போது அவர்கள் கைதாகி வைத்திருக்கப் பட்டதைக் கூட யாரும் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

அனந்தி சசிதரன் தனது கணவர் கைது செய்யப்பட்ட பிறகு காணாமல் போனதைச் சவாலுக்கு உட்படுத்தி, இன்னமும் நீதி தேடும் பாதையில் பயணிக்கும் ஒருவராவார். அவரைப் போல் செயல்பட முடியாத நூற்றுக்கணக்கானோர், ஜனநாயகத்தின் மீது இன்னமும் நம்பிக்கை வைத்து, பதில்களைத் தேடி காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் அரசு அலுவலகங்களின் முன் கூடுகிறார்கள். இந்த நாட்டில் பல பிரச்சினைகளுக்காக 'அரகலய' (போராட்டம்) முன்னெடுக்கப்பட்டு,

கட்டுரையாளர்:
பேராசிரியர் த.ஜெயசிங்கம்

அது அரசாங்கத்திலும் ஜனாதிபதியிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருப்பினும், அந்தப் போராட்டத்தின் சாம்பலிலிருந்து உருவானவர்கள், காணாமல் போனவர்களைத் தேடிப் போராடுபவர்களின் போராட்டத்தை அங்கீகரிக்கத் தயங்குவதை, சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் பொலிசாரைப் பயன்படுத்தி அவர்களை அப்புறப்படுத்திய நிகழ்வு தெளிவாகக் காட்டுகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசாங்கத்திடமிருந்து தங்களது கேள்விகளுக்குப் பதில் தேடும் இரண்டு தரப்பினரின் அணுகுமுறையிலும் சூழலிலும் எத்துணை வேறுபாடு. குறிப்பாக முதல் போராட்டமான 'அரகலய'வின் கல்லறைகளிலிருந்து மீண்டெழுந்தவர்களிடமிருந்து இந்த அணுகுமுறை வெளிப்படுவது விசித்திரமானது. ஆனால் வரலாறு எப்போதும் மாறாத ஒன்றாகவே இருந்துள்ளது.

மக்களுக்கு தங்களின் உரிமைகள் மறுக்கப்படும்போதோ அல்லது அத்தகைய 'பிரஜைகளின்' கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்கத் தவறும்போதோஉண்மையான அக்கிரமங்களுக்கும் குற்றங்களுக்கும் காலம் பதில் சொல்லியே தீர்ந்துள்ளது சில வேளைகளில் உலகெங்கிலும் புதிய தேசங்கள் உருவாகவும் இது வழிவகுத்துள்ளது.

காணாமல் போனோர் பற்றிய பிரச்சினையைக் காற்றுடன் காற்றாகக் கரைந்து விடும் என்று எதிர்பார்ப்பதை விட, அரசும் அரசாங்கமும் அதற்கு உடனடித் தீர்வு காண்பது மிகவும் முக்கியமானது. ஆனால், அந்தக்காற்று பல ஆண்டுகள் கழித்து சுறாவளியாக மாறி, தூசுகளை அகற்றி, உண்மையான நிலப்பரப்பை வெளிப்படுத்தும் என்பதை வரலாறு நமக்குக் காட்டியுள்ளது.

காணாமல் போனவர்கள் உலகின் ஏதோவொரு பகுதியில் உயிரோடு இருக்கிறார்கள் என்ற பலரின் நம்பிக்கையை ஏற்றுக் கொள்வதோடு, அதுவே நடக்க வேண்டும் என விரும்பும் அதே வேளையில், அவர்கள் கடைசியாகக் காணப்பட்ட இடங்களான காகித ஆலை முகாம் மற்றும் நாவலடி இராணுவ முகாம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏதேனும் புதைக்கப்பட்ட அடையாளங்கள் உள்ளதா என ஆராய்வதற்கான சரியான தருணம் இதுவாக இருக்கலாம்.

கைது செய்யப்பட்ட காலகட்டத்தில் அந்த இடங்களில் மக்களின் அலறல் சத்தங்கள் கேட்டதாக, இதுவரை அறியப்படாத ஆனால் தகவலறிந்த மூலங்கள் கூறுகின்றன. அந்தக்காலத்தைச் சேர்ந்த பலரால் மற்றவர்களை விட அதிக வெளிச்சத்தைக் கொண்டு வர முடியும். மனிதகுலத்திற்கு எதிராக ஏதேனும் குற்றம் இழைக்கப்பட்டிருந்தால் அதை வெளிக்கொணர்வது அவர்களின் மனசாட்சியை விடுவிக்கவாது உதவும்.

பல தசாப்தங்கள் ஆனாலும், நாங்கள் கடந்து போன பிறகும் கூட, நேர் மறையான ஒரு பதில் கிடைக்கும் வரை (12ம் பக்கம் பார்க்க)

# வாழ்ந்தோரும் இறந்தாரும்

(20ம் பக்கத் தொடர்ச்சி) விசாரணைக்கு உத்தரவிடும் போதெல்லாம், நீதித்துறை ஒதுக்கீடுகள், தேசிய பாதுகாப்பு அமைச்சு அல்லது உள்ளூர் நீதிமன்றங்களின் மேலதிக நிதியிலிருந்து நிதி அனுமதி அளிக்கப்படுகிறது. மன்னார் மற்றும் மாத்தறை அகழ்வாராய்ச்சிகளின் போது இத்தகைய ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டன. அரசாங்கம் நீதித்துறை மேற்பார்வையின் கீழ் திட்டத்தின் தேவைக்கு ஏற்ப உள்ளூர் நிதியை ஒதுக்கியுள்ளது.

உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி தளத்தின் ஆரம்ப கட்ட அகழ்வாராய்ச்சிக்கு 12 மில்லியன் ரூபா விசேட நீதித்துறை வரவுசெலவுத் திட்டம் ஒதுக்கப்பட்டது, மேலும் நீதிமன்ற உத்தரவுகளின்படி உள்ளூர் அளவில் மேலும் நிதியளிக்க உறுதியளிக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக, மனிதப் புதைகுழிகளைத் தோண்டி எடுப்பதற்கு இலங்கை ஒருபோதும் நிரந்தர, மத்திய வருடாந்த வரவுசெலவுத் திட்டக் நிதியை ஒதுக்கியதில்லை. 2019 தேசிய வரவு செலவுத் திட்டத்தில், காணாமல் போனவர்களின் குடும்பங்களைக் குறிவைத்து (காணாமல் போனமைக்கான சான்றிதழ் வைத்திருக்கும் குடும்பத்திற்கு மாதம் 6,000 ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவு) 500 மில்லியன் ரூபா நிதியுதவியை இலங்கை அரசாங்கம் முதலில் அங்கீகரித்திருந்தது.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வருடாந்த செயல்பாட்டுத் திட்டத்தின் படி, வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட மோதல்களுக்காக மரணம் மற்றும் சொத்து இழப்பு'' விண்ணப்பங்களுக்கு 300 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. கூடுதலாக, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ஒத்த தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊடகங்களின் படி, அரசாங்கம் நாடு தழுவிய ரீதியில் 5,700க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆரம்ப கட்ட இடைக்கால உதவிகளை வெற்றிகரமாக வழங்கியுள்ளது

கௌதம புத்தரின் ஆட்சியியல் போதனைகள் மூன்று முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்துகின்றன: ஆட்சியாளர்களின் தர்மநெறிப் பொறுப்பு, வறுமையை ஒழித்தல் மற்றும் தர்மநெறி சார்ந்த முன்னுதாரணமாகத் திகழ்தல். பண்டைய பௌத்த நூல்களில், அரசன் (ராஜா) எனும் சொல், நாம் நவீன காலத்தில் அரசாங்கம் என்று வரையறுப்பதைக் குறிக்கிறது. ஓர் அரசாங்கத்தின் கடமைக்கான முதன்மைச் சட்டகம், ஜாதகக் கதைகளிலிருந்து பெறப்பட்ட தச ராஜ தர்மம் (அரசனின் பத்து கடமைகள்) என்பதில் காணப்படுகிறது.

நவீன சூழலில், ஒரு பௌத்த நாடு என்ற ரீதியில், இலங்கையின் அரசாங்கம் கொடைத்தன்மை (தான), ஒழுக்கம் (சீல), பிறர் நலன் பேணுதல் (பரிச்சாகா), நேர்மை (அஜ்ஜவ), மென்மை (மத்தவ), சுயக்கட்டுப்பாடு (தப), கோபமின்மை (அக்கோத), வன்முறையின்மை (அஹிம்சா), பொறுமை (காந்தி) மற்றும் எதிர்ப்பின்மை ஒத்திசைவு (அவிரோதன) ஆகிய பண்புகளைப் பின்பற்றும் கடமையைக் கொண்டுள்ளது.

எளிய சொற்களில் கூறின், நிர்வாகமானது ஊழலைத் தவிர்த்து, வெளிப்படைத்தன்மை, உண்மையுள்ளம் மற்றும் மக்களுக்கு முழுமையான விசுவாசத்துடன் செயல்பட வேண்டும்.

இடைக்கால நீதியை (Transitional Justice) நாடுவோரும் தனது மக்களே என்பதை ஜனாதிபதி திசநாயக்கவின் அரசாங்கம் புரிந்து கொண்டு, புத்தர் அருளிய ராஜ தர்மத்தைப் பின்பற்றும் என நம்புவோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 66 சந்தேக நபர்களை இலங்கை அதிகாரிகள் மீட்டுக்கொண்டு வந்துள்ளனர். இந்தச் சந்தேக நபர்கள் தொடர்புடைய 113 வழக்குகளைப் பொலிஸார் விசாரித்து, 6,000 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை முடக்கியுள்ளனர். இதில், 5,423 மில்லியன் ரூபா சொத்துக்கள் 102 போதைப்பொருள் கடத்தல் சந்தேக நபர்களுக்கும், 209 மில்லியன் ரூபா சொத்துக்கள் 3 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கும் சொந்தமானவை.

பிரமிட் மோசடி, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் வெடிபொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 8 நபர்களுக்குச் சொந்தமான 367 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களும் இதில் அடங்கும். முடக்கப்பட்ட சொத்துக்களில் 2 கிலோகிராம் 1,404 கிராம் தங்கம், 136 ஏக்கர் காணி, 55 வீடுகள் மற்றும் 142 வாகனங்கள் அடங்கும்.

(கட்டுரையாளர்) கேணல் ஆர். ஹரிஹரன், தெற்காசியா மற்றும் பயங்கரவாதம் குறித்த ஓய்வுபெற்ற உளவுத்துறை நிபுணர். இலங்கையில் இருந்த இந்திய அமைதி காக்கும் படையின் உளவுத்துறை தலைவராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது)

# உலகையே ஆச்சரியப்படுத்தும் “வாடகை” மனைவி நடைமுறை எந்த நாட்டில் தெரியுமா?



உலகின் பல நாடுகள் அவற்றின் தனித்துவமான கலாச்சாரம், வாழ்க்கை முறை மற்றும் வித்தியாசமான நடைமுறைகளுக்காகப் பிரபலமாக அறியப்படுகின்றது. அந்த வகையில், தாய்லாந்து அதன் அழகிய கடற்கரைகள், சுற்றுலாத் தலங்கள் மற்றும் இரவு நேர பொழுதுபோக்கு வாழ்க்கைக்காக உலகம் முழுவதும் பிரபலமாக இருக்கின்றது. இந்நிலையில், தாய்லாந்தின் சில சுற்றுலா மையங்களில் நீண்ட காலமாகப் பேசப்பட்டு வரும் வித்தியாசமான நடைமுறைதான் ‘வாடகை மனைவி’ (Wife Rental) என அழைக்கப்படும் தற்காலிக துணை.

‘வாடகை மனைவி’ என்ற பெயர் இருந்தாலும், இது உண்மையான அல்லது சட்ட. பூர்வமான திருமண உறவு அல்ல. மாறாக, ஒரு பெண் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு ஆணுடன் துணையாக இருந்து, அவருடன் நேரத்தைச் செலவிடும் தனிப்பட்ட ஏற்பாடாக இது கூறப்படுகிறது.

ஒன்றாகச் சுற்றுலா செல்வது, உணவருந்துவது, பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் இதில் இடம்பெறலாம். இந்த நடைமுறை குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் பட்டாயா போன்ற பகுதிகளின் பொழுதுபோக்கு கலாச்சாரத்தில் இந்த நடைமுறை காணப்படுகின்றது. இவ்வாறு வாடகை மனை பெறுபவர்களுக்கு, சில மணிநேரங்கள் முதல் பல நாட்கள் அல்லது அதற்கும் அதிகமான காலம் வரை கால அளவு விருப்பத்துக்கேற்ப ஒழுங்கு செய்து கொடுக்கப்படுமாம்.

கட்டணம் மற்றும் பிற நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரின் உடன்பாட்டைப் பொறுத்து தீர்மானிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சில பெண்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் வருமானம் ஈட்டும் வழியாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில், இந்த நடைமுறை பல்வேறு சமூக மற்றும் ஒழுக்க ரீதியான சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பெண்களைப் பொருளாகக் கருதுதல், பொருளாதாரச் சுரண்டல் மற்றும் சுற்றுலாவுடன் தொடர்புடைய பாலினச் சுரண்டல் போன்ற பிரச்சினைகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன. மேலும், சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமாகத் தொடங்கும் இத்தகைய உறவுகள் பின்னர் நீண்டகால தனிப்பட்ட உறவுகளாகவும் மாறக்கூடும் என்றும் கூறப்படுகிறது. இதனால் இது வெறும் சுற்றுலா சார்ந்த ஏற்பாடாக மட்டுமின்றி, சமூக ரீதியாகவும் விவாதிக்கப்படும் ஒரு விஷயமாக மாறியுள்ளது.

எனினும் ‘வாடகை மனைவி’ என்பது தாய்லாந்தின் அதிகாரப்பூ ர்வ திருமண முறையோ அல்லது அந்நாட்டின் பொதுவான கலாச்சார நடைமுறையோ அல்ல. மாறாக குறிப்பிட்ட சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு சூ ழல்களுடன் தொடர்புடையதாகக் மட்டுமே கூறப்படும் ஒரு தற்காலிக தனிப்பட்ட ஏற்பாடாகவே பார்க்கப்படுகின்றது.

வாடகை மனைவியின் கட்டணம் என்பது அந்த பெண்ணின் வயது, தோற்றம் மற்றும் கல்வி போன்ற காரணிகளைப் பொறுத்து மாறுபடும். இதன் கட்டணம் சுமார் 1,600 அமெரிக்க டாலர்கள் முதல் 1,16,000 அமெரிக்க டாலர்கள்(இந்திய மடிப்பில் 1.5 லட்சம் முதல் 11 லட்சம்) வரை அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு உறவுகளில் புதிய பரிமாணம்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், கூட்டுத் தயாரிப்புகளுக்கான சாத்தியங்களை ஆராய்வது, பாதுகாப்புத் தளவாட உற்பத்தியில் குறிப்பாகக் கடற்படைக் கப்பல்கள் மற்றும் ட்ரோன்கள் போன்றவற்றை மேம்படுத்துவது மற்றும் தயாரிப்பது தொடர்பான கூட்டு முயற்சிகளுக்கு முக்கியத் துவம் அளிப்பது,

இலங்கையின் முப்படைகளுக்கும் தேவையான நவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இராணுவத் தளவாடங்களை இந்தியப் பாதுகாப்புத் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்வது, போன்ற வழிமுறைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள மசகோன் நிறுவனம், கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தை வாங்கி, அதனை இலாபகரமான நிறுவனமான இயக்கத் தொடங்கியுள்ளது இந்தியா பாதுகாப்புத் தளபாட உற்பத்தி, மற்றும் ஏற்றுமதியில் இப்போது அதிக கவனம் செலுத்துகிறது.

முன்னர் இந்தியாவின் பாதுகாப்புத் தளபாட ஏற்றுமதி 2013—14 காலப்பகுதியில், வெறுமனே 115 மில்லியனாகத் தான் இருந்தது. 2025—26 காலப்பகுதியில அது 4.6 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. இந்தியா உள்நாட்டிலேயே போர்த்தளபாடங்களை வடிவமைக்க ஆரம்பித்து விட்டது.

சுயசார்பு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது மாத்திரம் அதன் நோக்கமல்ல. பிற நாடுகள் அறிந்திராத தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்கவும் இந்தியா விரும்புகிறது. இதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்ய முனைகிறது. இலங்கையில் சீனா, பாகிஸ்தான், (23ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் போர் முடிந்து 17 ஆண்டுகள்:-

(5ம் பக்கத் தொடர்ச்சி) முன்னேற்றத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். உண்மை மற்றும் நீதியை உறுதி செய்வதற்கான தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசாங்கத்தை மனித உரிமைகள் பேரவையில் உள்ள உறுப்பு நாடுகளும் பிற நாடுகளும் வலியுறுத்த வேண்டும். இரண்டு தசாப்தங்கள் கடந்த நிலையிலும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்னும் காத்திருக்கின்றன – என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

# 17 ஆண்டுகளுக்குப் பின்னரும் விடுதலைப்புலிகள்

(24ம் பக்கத் தொடர்ச்சி) அவர் கூறியுள்ளார். மேலும், போரின் இறுதி கட்டத்தில் தாக்குதல் படைகள் மற்றும் வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தி இராணுவத்துக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இறுதிப் போரின் கடைசி ஏழு நாட்கள் இராணுவத்துக்கு மிகவும் கடுமையான காலகட்டமாக இருந்ததாக சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய தாக்குதலின் போது ஏற்பட்ட வெடிப்பில் தனது ஒரு காதின் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டதாகவும், தனது உடலில் இன்னமும் 32 வெடிகுண்டுத் துகள்கள் இருப்பதாகவும் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

# வேலணை தந்த செம்மல் செட்டியார்



ஈழத்தமிழரின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கும் யாழ்ப்பாணத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்திருக்கும் பல்சிறப்பு மிக்க ஊர் வேலணை. பண்டைய வணிகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஊர்காவற்றுறைக்கு வர்த்தக மையமாக இது விளங்கியது. இதன் ஒருபுறம் மணற்குன்றுகள் நிறைந்த மண்கும்பானையும் மறுபுறம் வெள்ளைக் கடற்கரை எனப் புகழ்பெற்ற கடற்கரையும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிதெனக் கருதப்படும் பெருங்குளத்தையும் பல்வேறு விவசாய நிலங்களையும் நெற்பயிர்கள் நிறைந்த பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் வயல் வெளிகளையும் பல வழிபாட்டுத் தலங்களையும் பாடசாலைகளையும் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புப் பெற்ற ஊராகத் திகழ்கின்றது.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட வேலணைக் கிராமத்தின் கிழக்கே இரண்டாம் வட்டாரத்தில் பெரியபுலம் என்ற பகுதியில் புகழ்பூத்த மூத்த தம்பி (கந்தையா) முத்துப்பிள்ளை தம்பதிக்கு தையமுத்து, அன்னப்பிள்ளை, சோமசுந்தரம், சிவசிதம்பரம் (அழகப்பெருமாள்), இலகுப்பிள்ளை, ஆச்சிப்பிள்ளை ஆகிய ஆறு பிள்ளைகள்.

இளையமகன் சிவசிதம்பரம் வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாக 1937ம் ஆண்டு பங்குனித் திங்கள் 9ம் நாள் திரு இராமலிங்கம் (செட்டியார்) அவர்கள் பிறந்தார். இவரது சகோதரர்கள் ஆண்கள் மூவர் பெண்கள் ஐவர். மூத்தசகோதரர் குலசேகரம்பிள்ளை அவர்கள் ஆறாம் வட்டார கிராமசபைப் பிரதிநிதியாகச் சேவை புரிந்தார். அதற்கு முன்னர் இவ்வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் இவரது சிறிய தந்தையாராகிய திரு இலகுப்பிள்ளை அவர்கள் என்பதனை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

அன்னாரது இளைய சகோதரர்களில் ஒருவர் கலாநிதி கோபாலபிள்ளை (சிவா கோபால்) அவர்கள் அமெரிக்காவில் NASA வில் கடமைபுரிந்தவர். மற்றைய சகோதரர் திரு. மோகனச்சந்திரன் (சிவா மோகன்) அவர்கள் Microsoft நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றார்.

செட்டியார் அவர்கள் வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்று வேலணைக் கிராமசபையில் எழுதுவினைஞர் ஆகப் பதவி வகித்தவர். திருமண வயது வந்ததும் சீதேவிப்பிள்ளை எனும் மருத்துவ தாதியை மணந்து ஐந்து பிள்ளைச் செல்வங்களைப் பெற்று இன்பமாக இல்லற வாழ்வை இனிது வாழ்ந்து வந்த பெருமைக்குரியவர். இவர் மிகச்சிறந்த சமூகசேவையாளர் மட்டுமன்றிச் சிறந்த நாட்டுப்பற்றுடைய பெருந்தகையாக விளங்கினார். வேலணைக் கிராமசபையின் இரண்டாம் வட்டார அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு அதன் மூலம் அளப்பரிய சேவைகள் புரிந்தார். குறிப்பாக கமத்தொழில் திணைக்களத்தை வங்களாவடியில் நிறுவுவதற்கு இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். அவர் புகழ் அவர் பிறந்த ஊரான வேலணைக் கிராமம் எங்கும் நிரம்பி தீவகமெங்கும் பரவிப் பிரகாசித்துள்ளது என்றால் அது மிகையல்ல. முன்வைத்த காலைப் பின்வைக்காத நெஞ்சுறுதி, தோல்வி என்பது இன்னது என்பதையோ, அச்சம் என்பது இன்னது என்பதையோ அவர் அறியமாட்டாதவர்.

தனது அரசியல் வாழ்வில் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களுடன் பல வகைகளில் நெருங்கிய தொடர்புடையவர். இருவரும் தமது அரசியல் வாழ்வில் நெருங்கிய அன்பும் ஒத்துழைப்பும் உடையவர்களாக விளங்கினர். பண்டிதரின் நிழல் போல அவரது இணைபிரியாத் தோழராக விளங்கினார்.

வாழ்விலும் தாழ்விலும், இளமையிலும் முதுமையிலும் ஒரே நிலையில் மாறுபாடில்லாது துலக்கமுற்ற அவர்களது ஒற்றுமை நட்புக்கு ஒரு கலங்கரை விளக்கம் எனலாம். எதற்கும் அஞ்சி ஒடுங்க மறுத்த வணங்காமுடி. செட்டியார் அவர்கள் ஆற்றிய இறுதிப்பணி கிராமசேவைப் பணியாகும். அப்பணி மூலம் வேலணை மக்களின் நெஞ்சத்தை ஆண்டு கொண்டிருப்பவர். பண்டிதரின் நிழலாக என்றும் வாழ்வார் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

வேலணை என்ற மணி மாடத்தின் தூண்களில் ஒன்று 14-8-2026 அன்று வீழ்ந்து விட்டது. சாதாரணத் தூண் அல்ல, அதன் வரலாற்று ஆவணத்தின் அத்தியாயங்களின் ஒன்றான ஒப்பற்ற கல்தூண். இந்த இழப்பு ஈடுசெய்ய முடியாதது. இத்தகைய பொக்கிசத்தை இழந்துவாடும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். ஓம் சாந்தி!

**சி.இளஞ்செழியன்**

**BSc (Jaffna) B.Eng (Canada) - வேலணை**

# அமிர்தலிங்கத்தின் மரபும் அனைவருக்கும் பொதுவான எதிர்காலத்துக்கான ஜனநாயகத் தெரிவுகளும்

(16ம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சி மற்றும் ஊழலற்ற நிர்வாகத்துடன் இணைந்து அனைத்துச் சமூகங்களையும் சமமான பங்குதாரர்களாகக் கொள்ளும் புதிய அரசியலமைப்பு எதிர்காலத்தை நோக்கி நாடு நகர வேண்டும்.

ஜெகான் பெரேராவின் இந்த உரை கடந்த காலக் கசப்புணர்வுகளில் இருந்து விடுபட்டு, நடைமுறைச் சாத்தியமான அரசியலமைப்புத் தீர்வுகளின் மூலம் அனைத்துச் சமூகங்களையும் அரவணைக்கும் 'பன்மைத்துவ ஜனநாயகத்தை' இலங்கையில் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான இன்றைய காலப் பகுதியில் உச்சபட்சக் கோரிக்கைகளுக்காக காத்திருந்து இருக்கின்ற வாய்ப்புகளையும் இழப்பதைவிட 13 வது திருத்தம் போன்ற நடைமுறையில் உள்ள சட்டக் கட்டமைப்புக்களை பயன்படுத்திப் படிப்படியாக அதிகாரங்களைப் பெற முயற்சிப்பதே சாணக்கியமான அணுகுமுறை என்பதையும் அதன் பிரதான செய்தியாகக் கொண்டிருக்கிறது.

போரினாலும் அரசியல் அடக்குமுறைகளினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களின் இழப்புகளையும் நினைவுகளையும் வெறுமனே மனக்குறையாகத் தேக்கி வைக்காமல், அனுபவங்களைப் பயன்படுத்தி நிலைவரங்கள் வேண்டி நிற்பதன் பிரகாரம் நடைமுறைக்குப் பொருத்தமான தீர்மானங்களையும் மதிப்பீடுகளையும் செய்யும் மெய்யறிவாக மாற்ற வேண்டும் என்பதும் ஜெகான் பெரேராவின் முக்கிய வலியுறுத்தலாக இருக்கிறது.

அமிர்தலிங்கம் போன்று பேச்சு வார்த்தைகளுக்கு தயாராக இருந்த மிதவாதத் தலைவர்களின் இழப்பு அன்றைய காலகட்டத்தில் தமிழச் சமூகத்துக்கு ஏற்படுத்திய அரசியல் வெற்றிடத்தை இந்த நினைவுப் பேருரை மீண்டும் நினைவுட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்த வெற்றிடம் இன்று வரை நிரப்பப்படாமலேயே இருக்கிறது.

ஜெகான் பெரேராவின் உரை இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பல்வேறு தரப்பினராலும் வெவ்வேறான கோணங்களில் அணுகப்பட்டு வியாக்கியானம் செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை.

மிதவாதச் சிந்தனை கொண்ட தமிழ் அரசியல் சக்திகள் 13 வது திருத்தத்தை நிராகரிக்காமல் அதைப் பயன்படுத்தி அதிகாரப்பகிர்வை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை வரவேற்கும் என்கிற அதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற தீவிர தமிழ்த் தேசியவாதப் போக்குடைய சக்திகள் ஜெகான் பெரேராவின் இந்த உரைமீது கடுமையான விமர்சனப் பார்வையைக் கொண்டிருக்கும்.

13 வது திருத்தம் தமிழ் மக்களின் நியாயபூ ர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதல்ல என்றும் ஜெகானின் வலியுறுத்தல்கள் மாகாணசபைகள் முறைமையில் உள்ள பாரதூரமான போதாமைகளை மூடிமறைக்கும் முயற்சியாக அமைந்திருக்கின்றன என்றும் அவர்கள் கூறுவார்கள். ஒற்றையாட்சிக்குள் இணக்கப்பாடு என்ற அணுகுமுறை ஏற்கெனவே தோல்வி கண்டுவ ிட்டது என்றும் அவர்கள் வாதிடுவார்கள்.

ஆனால் பொதுவில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தென்னிலங்கையில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட தங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் நிறைவு செய்யக்கூடிய பயனுறுதியுடைய அதிகாரப்பகிர்வை வழங்கப் போவதில்லை என்ற சந்தேகம் அவர்கள் மத்தியால் மிகவும் ஆழமாகவே உள்ளது.

பதவிக்கு வந்ததும் ஒரு வருடத்திற்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிப்பதற்கான உத்திகளைக் கடைப்பிடித்து வருவதும் காணிகள் விடுவிப்பு மற்றும் இராணுவமயக் குறைப்பு போனற போரின் விளைவான மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு (மோதல்கள் முடிவுக்கு வந்து 17 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும் கூட) தீர்வுகளைக் காண்பதில் அக்கறையின்றி இருப்பதும் தமிழ் மக்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், தென்னிலங்கைச் சமூகத்தின் மன மாற்றத்துக்கு அழைப்பு விடுப்பது கோட்பாட்டு ரீதியாக வரவேற்கக் கூடியது என்றாலும், நடைமுறையில் அது எந்தளவுக்கு சாத்தியம் என்ற கேள்வி தொடர்ந்தும் நிலையானதாகவே இருக்கிறது.

## பாதுகாப்பு உறவுகளில் புதிய பரிமாணம்!

(22ம் பக்கத் தொடர்ச்சி) துருக்கி போன்ற நாடுகள் போர்த்தளபாடங்களை விற்பது இந்தியாவின் நலன்களுக்கு எதிராக மாறலாம் என இந்தியா கருதுகிறது.

இவ்வாறான நிலையில், பிறநாடுகளின் இராணுவத் தளபாட கொள்வனவுகளுக்கான கதவை அடைத்து இந்தியாவுக்கான கதவைத் திறந்து விடுவதற்கான முக்கியமான இராஜதந்திர நகர்வாகவே ராஜ்நாத் சிங்கின் பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கடற்படைத் தளபதியின் இந்தியப் பயணத்தின் போதே இதற்கான பேச்சுக்கள் தொடங்கப்பட்டு விட்டன. அதனால் தான், இது கடந்தகால இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகளைத் தாண்டி முக்கியத்துவமானதாகக் கணிக்கப்பட்டுள்ளது.




# 17 ஆண்டுகளுக்குப் பின்னரும் விடுதலைப்புலிகள் பற்றிய பயம் போகாத முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறுகிறார்!

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கையில் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும், சர்வதேச அரங்கில் தங்களது அரசியல் மற்றும் பரப்புரை நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் அளவுக்கு வலுவான வலையமைப்பைக் கொண்டிருந்ததாக முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். வலைதள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.



இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பயன்படுத்தியதாகக் கூறப்படும் இராணுவத் தந்திரோபாயங்கள், ஆயுத பலம், சர்வதேச நிதி வலையமைப்பு மற்றும் இராணுவம் எதிர்கொண்ட தடைகள் தொடர்பில் சவேந்திர சில்வா இந்த நேர்காணலில் வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்போது விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு மற்றும் ஆதரவுகள் தொடர்பிலும் கருத்து தெரிவித்துள்ளார். குறிப்பாக கப்பல் போக்குவரத்து, மற்றும் சர்வதேசத்தின் வர்த்தகங்கங்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறாக நிதிகளை திரட்டிக் கொண்டனர். மேலும், வெளிநாடுகளில் தங்களுக்கு சாதகமான அரசியல் சூழலை உருவாக்கும் நோக்கில், அந்நாடுகளின் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல்வாதிகளுக்கு புலம்பெயர் அமைப்பின் ஆதரவாளர்கள் நிதியுதவி வழங்கி வருகின்றனர் என தனது கருத்துக்களை முன்வைத்தார்.

மேலும், விடுதலைப் புலிகளின் பிரதான அரசியல் இலக்கு இலங்கையில் தனித் தமிழ் அரசை உருவாக்குவதாக இருந்தது எனவும் தெரிவித்தார்.

போர் நடைபெற்ற காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது குறித்து அவர்கள் சிறந்த திட்டமிடலை கொண்டிருந்தனர் எனவும் கூறியுள்ளார். அதன்படி, பேச்சுவார்த்தைகளின் இடைவேளைகளைப் பயன்படுத்தி போராளிகளை மீள ஒருங்கிணைத்து, ஆயுத பலத்தை அதிகரித்து அடுத்த கட்டத் தாக்குதல்களுக்கு அவர்கள் தயாராகியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள பரந்த நெல்வயல் பகுதியான 'Rice Bowl' பகுதியில் இராணுவம் எதிர்கொண்ட சவால் குறித்தும் சவேந்திர சில்வா விரிவாக இதில் விளக்கியுள்ளார். மரங்கள் அல்லது இயற்கையான மறைவிடங்கள் இல்லாத அந்தப் பரந்த வயல் வெளியில் விடுதலைப் புலிகள் அதிக எண்ணிக்கையிலான குறிசூட்டுப் படையினரை நிலைநிறுத்தியிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ வீரர்கள் தலைகளை உயர்த்தினால் கூட குறிசூ ட்டுப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகும் நிலை காணப்பட்டதாகவும், இதனால் இராணுவத்தினர் இரவு நேரங்களையும் இருள் சூழ்ந்த காலங்களையும் பயன்படுத்தி தரையில் தவழ்ந்தவாறு மெதுவாக முன்னேற வேண்டியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட அந்தப் பகுதியை கடப்பதற்கு இராணுவத்திற்கு கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் எடுத்ததாகவும் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். மேலும், தமது படைப்பிரிவு போரின் போது சுமார் 202 கிலோமீற்றர் தூரம் முன்னேறிச் சென்று போரில் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் சிறிய நாட்டில் இயங்கிய அமைப்பாக இருந்தபோதிலும், வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட பீரங்கிகள், நவீன துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் உள்ளிட்ட ஆயுதங்களைக் கொண்டு குறிப்பிடத்தக்க இராணுவ பலத்தை உருவாக்கியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்டு எறிகணைகள்', 82 மில்லி மீற்றர் மோட்டார்கள் மற்றும் கிளேமோர் கண்ணிவெடிகள் போன்ற ஆயுதங்களைத் தாங்களே தயாரித்துப் பயன்படுத்தும் திறனை கொண்டிருந்ததாகவும் (22ம் பக்கம் பார்க்க)

# கனடாவில் வாழும் 102 வயது பாட்டியின் நிறைவேறிய ஆசை!

கனடாவைச் சேர்ந்த 102 வயது மூதாட்டி ஒருவர், தனது பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாகப் புதிதாகக் கட்டப்பட்ட பிரமாண்டமான சர்வதேச பாலத்தை நடந்து கடந்து தனது வாழ்நாள் ஆசையை நிறைவேற்றியுள்ளார்.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள வின்ட்சர் நகரின் சாண்ட்விச் டவுன் பகுதியைச் சேர்ந்தவர் ரீட்டா ஜார்ஜெஃப். இவர் கடந்த ஓகஸ்ட் 28-ஆம் திகதியன்று தனது 102வது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள டெட்ராய்ட் நகரையும், கனடாவின் ஒன்டாரியோவில் உள்ள வின்ட்சர் நகரையும் இணைக்கும் வகையில் டெட்ராய்ட் ஆற்றின் குறுக்கே பல ஆண்டுகளாக 'கோர்டி ஹோவ் சர்வதேச பாலம் 'கட்டப்பட்டு வந்தது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்தத் பகுதியில் வாழ்ந்து வரும் ரீட்டா, இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பத்திலிருந்தே உன்னிப்பாகக் கவனித்து வந்தார்.

தனது 100வது பிறந்தநாளிலேயே இந்தப் பாலத்தின் மீது நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அவர், பாலம் கட்டி முடிக்கப்படும் வரை மேலும் 2 ஆண்டுகள் காத்திருந்து, தற்போது தனது 102-வது பிறந்தநாளில் அந்த ஆசையை நிறைவேற்றியுள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில், 'ஆச்சரியமாக இருக்கிறது, நான் இதைச் செய்துவிட்டேன்! எனது 7 வயதில் பீட்டர் மற்றும் இண்டியன் ரோடு சந்திப்பில் வசித்தபோது, பாலத்தில் மக்கள் கூட்டமாக இருந்ததை பார்த்த நினைவிருக்கிறது. ஆனால் அப்போது என்ன நடக்கிறது என்று புரியும் வயது இல்லை.



இப்போது இந்த வயதில் சாண்ட்விச் பகுதிக்குச் செல்வதே கடினம், இருந்தாலும் இந்த கோர்டி ஹோவ் பாலம் நமது நகரத்திற்குச் செய்துள்ள நன்மைகளை நான் பாராட்டுகிறேன். இது மிகவும் அற்புதம் என்று நெகிழ்ச்சியுடன் கூறினார். பாலத்தைக் கடந்து முடித்த ரீட்டாவிடம், செய்தியாளர்கள் உங்களது அடுத்த (103வது) பிறந்தநாளுக்கான ஆசை என்னவென்று கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், 'நான் எனது அடுத்த பிறந்த நாளை சென்றடைய வேண்டும், அதுவே எனது ஆசை' என்று மிகவும் எதார்த்தமாகவும் நெகிழ்ச்சியாகவும் பதிலளித்தார்.

இது இவ்வாறிருக்க அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு இடையிலான நாணய மாற்று விகிதம் 'ஏற்றுக் கொள்ள முடியாதது' என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார். தனது 'ட்ரூத் சோஷியல்' சமூக வலைதளப் பக்கத்தில் டிரம்ப், பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க டாலருடன் கனடா டொலரின் சமநிலையற்ற நிலை ஏற்றுக் கொள்ள முடியாதது. பல ஆண்டுகளாக இந்நிலை நீடித்து வருகிறது, ஆனால் இனி அது தொடராது எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த விவகாரத்தில் அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து அவர் விரிவாக விளக்கவில்லை.

# வெளியகப் பொறிமுறையை முற்றாக நிராகரித்த ஸ்ரீலங்கா அரசு! தேசியப் பொறிமுறைக்கு ஆதரவளிக்குமாறு பேரவையில் வலியுத்து!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுதல் உள்ளிட்ட எந்தவொரு வெளியகப் பொறிமுறையையும் நிராகரிப்பதாகவும் அவ்வாறான பொறிமுறைகள் பிளவுகளை ஏற்படுத்தி, தேசிய செயன்முறைகளைப் பலவீனப்படுத்தும் என்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டிய ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் திசாநாயக்க, நல்லிணக்கத்தையும் சுபீட்சத்தையும் அடைவதற்கான தேசிய பொறிமுறைக்கு பேரவை ஆதரவளிக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

ஜெனிவாவில் 07 செப் 2026 திங்கட்கிழமை ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 63 ஆவது கூட்டத் தொடரில் செவ்வாய்க் கிழமை அமர்வின் போது 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' தொடர்பில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை பிரதி உயர்ஸ்தானிகர் அவா டபோவினால் வாசிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்குப் பதிலளித்து இல



ங்கை அரசாங்கத்தின் சார்பில் உரையாற்றிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் திசாநாயக்க, 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இலங்கை பற்றிய எழுத்து மூல அறிக்கை தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் அரசாங்கம் வெளிப்படைத்தன்மை மற்றும் ஒத்துழைப்புடன் இணைந்து செயலாற்றிவரும் அதேவேளை, தேசிய ரீதியிலான உள்ளகப் பொறிமுறையையே வலியுறுத்தி வருகின்றது' எனச் சுட்டிக் காட்டினார்.

அதே போன்று அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிபீடமேறி இம்மாதத்துடன் இரண்டு ஆண்டுகள் பூ ர்த்தியடைவதாகவும், இக்காலப்பகுதியில் தித்வா சூறாவளி மற்றும் உலகளாவிய நெருக்கடி நிலை உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் கடந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பதிவு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, 'ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 60-1 தீர்மானத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆதாரங்களைத் திரட்டும் வெளியகப் பொறிமுறையை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஏனெனில் அச்செயன்முறை இனங்களைத் துருவ மயப்படுத்துவதுடன், நாட்டுக்குள் பிளவுகளைத் தோற்றுவிக்கும்' எனவும் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்தார்.

இருப்பினும் ஏற்கனவே அளித்த வாக்குறுதிக்கு அமைவாக முக்கிய வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் எட்டப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டிய அவர், 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அடுத்த மாதம் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதே போன்று நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளன. காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் என்பன அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக இயங்கி வருகின்றன' எனத் தெளிவுபடுத்தினார்.

மேலும் உள்நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் முறையான ஆவணங்களின்றி அல்லது முறையற்ற வழி முறைகளின் ஊடாக இந்தியாவுக்குச் சென்றவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், முதற் தடவையாக மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை இலக்காகக் கொண்டு அரசாங்கம் முற்போக்காக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

அத்தோடு ஆதாரங்களைத் திரட்டுதல் உள்ளடங்கலாக எந்தவொரு வெளியகப் பொறிமுறையையும் நிராகரித்த அவர், அவ்வாறான பொறிமுறைகள் பிளவுகளை ஏற்படுத்தி, தேசிய செயன்முறைகளைப் பலவீனப்படுத்தும் என்று சுட்டிக்காட்டியதுடன், நல்லிணக்கத்தையும் சுபீட்சத்தையும் அடைந்து கொள்வதற்கான தேசிய பொறிமுறைக்கு பேரவை ஆதரவளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

# எவரேனும் சிறைக்குச் சென்றால் வெட்கத்தால் வெளியே வரமாட்டார்கள்! நாமல் சபைக்கு வந்து மக்கள் பற்றிப் பேசுவது வேடிக்கையாகவுள்ளது!



மக்களின் வரிப்பணத்தை இலஞ்சமாக பெற்று தற்போது சிறையில் உள்ள திருடர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். பொருளாதார மேம்பாடு பற்றி கருத்து தெரிவிக்கிறார்கள். ஊரில் எவரேனும் சிறைக்கு சென்றால் வெட்கத்தால் வெளியில் கூட வர மாட்டார்கள். நாமல் ராஜபக்ஷ சபைக்கு வந்து மக்கள் நலன் பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது என தேசிய மக்கள் சக்தியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்தருவன் மதரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 08 செப் 2026 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஊரில் உள்ளவர்கள் ஏதாவது குற்றச் செயலுக்காக சிறைக்குச் சென்றால் அவர்கள் வெட்கத்தால் வீட்டை விட்டு வர மாட்டார்கள். திருட்டு சம்பவத்துக்காக சிறை சென்றவர்கள் பிறருடன் கதைக்கக் கூட மாட்டார்கள். ஆனால் இந்த பாராளுமன்றத்தில் அவ்வாறான நிலைமையை காண முடிவதில்லை.

ஊழல் மோசடி சம்பவத்துக்காக சிறைக்குச் சென்றவர்கள் இன்று பாராளுமன்றத்துக்குள் வந்து பொருளாதார மேம்பாடு பற்றி பேசுகிறார்கள். அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். விவசாயிகளுக்கு உரம் இல்லை என்று நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகிறார். கழிவு உரத்தை இறக்குமதி செய்து நாட்டின் விவசாயத்தை அழிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாகவே நாமல் ராஜபக்ஷ கையுயர்த்தினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது அவர்களின் உடல் நலன் குறித்து வெளிநாடுகளின் வைத்தியசாலைகள் தான் அறிக்கை சமர்ப்பிக்கின்றன. அரச மருத்துவ கட்டமைப்பை வினைத்திறனாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அதற்கு எதிராக செயற்படுகிறார்கள்.

அரசியல் பழிவாங்கலுக்காகவே நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார் என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன குறிப்பிடுகிறார் எயார் பஸ் கொள்வனவு விவகாரத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எயார் பஸ் கொள்வனவு விவகாரத்தில் 100 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் தான் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் தான் இன்று பொருளாதார மேம்பாடு பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குகிறார் என்றார்.

# அம்பிட்டிய சுமண ரத்ன தேரருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை இன்று 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மட்டக்களப்பு சென்றல் வீதியில் அமைந்துள்ள புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியக அலுவலகத்திற்குள் நுழைந்து, அங்குள்ள அரச ஊழியர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக பாதிக்கப்பட்ட அரச அதிகாரிகளால் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதையடுத்து இது குறித்து வாக்குமூலம் வழங்க பொலிஸ் நிலையத்திற்கு சம்பவ தினமான 07 செப் 2026 திங்கட்கிழமை சென்றிருந்த அம்பிட்டிய சுமணரத்ன தேரர். மட்டக்களப்பு பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் வை.விஜயராஜா தலைமையிலான பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை 08 செப் 2026 செவ்வாய்க்கிழமை



வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து 08 செப் 2026 செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்த பட்டபோது வழக்கை விசாரணைக்கு நீதவான் எடுத்து கொண்ட போது பொலிசார் குறித்த தேரருடன் 5 பேர் சென்று அரச அதிகாரிகளுக்கு இடையூறு விளைத்ததாகவும் அவர்கள் தலைமறைவாகி உள்ளதாகவும் சந்தேக நபர்களை கைது செய்து விசாரணை செய்ய வேண்டும் என பொலிஸார் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தனர். இதனை அடுத்து நீதவான் தேரரை எதிர்வரும் 11திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.